

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | www.puratchiperiyarmuzhakkam.com | திருவள்ளுவர் ஆண்டு 2038 | நவம்பர் 01, 2007 | புரட்சி 5 | முழக்கம் 44 | விலை : ரூ.2.50


## கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிக்கை

# இலங்கையின் காட்டுமிராண்டித்தனம்

*அனைத்துலக நெறிமுறைகளுக்கு மாறாக தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகளின் உடல்களை நிர்வாணப்படுத்தி பொதுமக்கள் பார்வைக்கு வைத்த சிறிலங்காவின் காட்டுமிராண்டித்தனத்தைக் கண்டித்து சென்னையில் எதிர்வரும் 29 ஆம் நாள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் தா.செ. மணி அறிவித்துள்ளார்.*

*பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் தா.செ.மணி வெளியிட்டுள்ள அறிக்கை:*

சிறிங்கா அரசின் மனித உரிமை மீறல்கள் எல்லை மீறிக் கொண்டிருக்கிறது. அனுராதபுரத்தில் சிறிலங்காவின் வான் படைத்தளத்தில் நடந்த தாக்குதலில் உயிரிழந்த விடுதலைப் புலிகளின் உடல் நிர்வாணமாக பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளதும் அதனை படம் பிடித்து அனைத்துலக ஊடகங்கள் வெளியிட்டுள்ளதும் நாகரீக சமுதாயத்துக்கு ஒவ்வாத காட்டுமிராண்டித் தனமாகும். அய்.நா.வின் அனைத்துலக ஜெனீவா உடன்பாடு போர்க் கைதிகளை புதைப்பது-எரிப்பது தொடர்பாக வலியுறுத்தும் மனித உரிமைப் பிரிவுகளை சிறிலங்கா, மண்ணில் போட்டு புதைத்துள்ளது.

அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம் வழியாக இந்த உடலை விடுதலைப் போராளி களிடம் ஒப்படைப்பதுதான் அனைத்துலக நெறிமுறைகள்.

விடுதலைப் புலிகளும் இறந்து போன சிங்களர் உடல்களை இப்படித்தான் இதுவரை ஒப்படைத்து வந்திருக்கிறார்கள்.

ஆனால் சிறிலங்கா அரசாங்கமே இந்த உடல்களை நிர்வாணமாக்கி மக்கள் பார்வைக்கு வைத்து புதைத்திருக்கிறது. 1995 ஆம் ஆண்டு இதேபோல் மரணமடைந்த பெண் விடுதலைப் புலிகளின் உடல்களை நிர்வாணமாக்கி அவர் களின் உடல் உறுப்புகளை சிதைத்த பிறகுதான் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்தது.

அனுராதபுரம் வான் படைத்தளம் அருகே சிங்களர்கள் பார்வைக்கு தமிழ்ப் போராளிகள் உடலை சிறிலங்கா அரசு பார்வைக்காக வைத்துள்ள படங்கள் பத்திரிகைகளில் வெளிவந்த பிறகும் சிறிலங்கா மறுப்புத் தெரிவித்திருப்பது அதன் பொய்ப் பிரச்சாரத்தை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. அய்.நா. மனித உரிமை ஆணையம் உட்பட பல்வேறு அனைத்துலக மனித உரிமை அமைப்புகள் அண்மைக்காலமாக சிறிலங்காவின் மனித உரிமை மீறல்களைக் கண்டித்து வரும் நிலையில் இந்தியா மௌனம் சாதிப்பதோடு, சிறிலங்காவுக்கு இரகசியமாக ஆயுதங்களை வழங்கி வருவது வன்மையான கண்டனத்துக் குரியது.

அனைத்துலக நெறிமுறைகளுக்கு எதிராக மனித சமூகத்தையே தலைகுனியச் செய்துள்ள சிறிலங்காவின் இந்த வெட்கக் கேடான செயலுக்கு- இந்திய அரசு கண்டனம் தெரிவிக்க வேண்டும். தமிழக முதல்வரும் இதனை மத்திய அரசிடம் வலியுறுத்த வேண்டும். இல்லா விட்டால் இந்தியாவும் இதற்குத் துணை போகிறது என்ற முடிவுக்கே தமிழ்நாட்டுத் தமிழர்கள் வருவார்கள்.

சிறிலங்கா அரசின் இத்தகைய நாகரீகமற்ற காட்டுமிராண்டித்தனமான செயலைக் கண்டித்து வரும் 29 ஆம் தேதி சென்னையில் பெரியார் திராவிடர் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட உள்ளது என்றார் கொளத்தூர் தா.செ. மணி.

## ‘விஞ்ஞானி’ புனிஷ் தனேஜா கதையைக் கேளுங்கள்!

ஆதம்பாலம் என்று அழைக்கப்படும் மணல் திட்டு - ராமன் கட்டிய பாலம் தான் என்று சாதித்து வந்தது யார் தெரியுமா? ‘விசுவ இந்து பரிஷத்’. அந்த அமைப்பு சேது சமுத்திரத் திட்டம் பற்றி ஆய்வு நடத்த, ஆய்வுக் குழு ஒன்றை நியமித்தது. இந்தக் குழுவின் தலைவராக இருந்தவர் புனீஷ் தனேஜா என்ற பார்ப்பனர்.

இவர் யார்? இவர் இந்திய விண்வெளி ஆய்வுக் கழகத்தில் விஞ்ஞானியாகப் பணியாற்றியவர் என்று கூறப்பட்டது.

‘விண்வெணி ஆய்வில் தோய்ந்த விஞ்ஞானி, முனைவர் பட்டம் பெற்றவர், பிரதமர் அலுவலகத்துடன் நேரடி தொடர்புள்ளவர், அத்தகைய மாபெரும் மேதை - தனது உயர்ந்த பதவிகளையெல்லாம் உதறிவிட்டு, ராமன் பாலத்தைக் காப்பாற்ற முன் வந்திருக்கிறார்’ என்று விசுவ இந்து பரிஷத் அறிவித்தது.

கடலுக்கு அடியில் இருப்பது ராமர் பாலம் தான் என்று இந்த விஞ்ஞானியே தமது ஆய்வின் மூலம் உறுதிப்படுத்தி விட்டார் என்று, விசுவ இந்து பரிஷத் அழுத்தம் திருத்தமாகக் கூறி, மக்களை நம்ப வைக்க முயற்சித்தது.

விசுவ இந்து பரிஷத் தலைவர் பார்ப்பனர் அசோக் சிங்கால், கடந்த மே 2 ஆம் தேதி புதுடில்லியில் செய்தியாளர்களைக் கூட்டி, இந்த விஞ்ஞானி தனது ஆராய்ச்சியில் மணல் திட்டு, ராமர் பாலம் தான் என்று உறுதி செய்துவிட்டதாக அறிவித்தார். இவ்வளவுக்கும் பிறகு என்ன நடந்தது தெரியுமா?

அந்த ‘விஞ்ஞானி’ விண்வெளிக் கழகத்தில் பணியாற்றியவரே அல்ல, முனைவர் பட்டமும் பெற்றவர் அல்ல, பிரதமர் அலுவலகத்தோடு தொடர்புடையவரும் அல்ல, அத்தனையும் பொய் என்பது அம்பலமானது. விண்வெளி ஆய்வுக் கழகமும் மறுத்தது. ‘உப்புக்கண்டம் பறிகொடுத்த பாப்பான்’ நிலைக்கு பா.ஜ.க. தள்ளப்பட்டது. ‘விஞ்ஞானி’ தலைமறைவாகிவிட்டார்.

தலை தொங்கிப் போன ‘சங்பரிவார்’ - அந்த விஞ்ஞானியை அமைப்பை விட்டு நீக்குவதாக அறிவித்தது. அவருக்கு வழங்கப்பட்டிருந்த ஆர்.எஸ்.எஸ். பிரச்சாரகர் பதவியும், பறிக்கப்பட்டது.

போலி விஞ்ஞானியை நம்பி, போலி உண்மையை அறிவியலாக நிலைநாட்ட முயன்ற மோசடிக் கும்பல் தனது முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு முக்காடு போட்டு நிற்கிறது. வெட்கம்! வெட்கம்! வெட்கம்!

## தானம்பட்டியில், ஒழிந்தது இரட்டைக்குவளை

மேட்டூரில் இரட்டைக்குவளை முறைக்கு எதிராக கழகத் தோழர்கள் நடத்திய போராட்டம் வெற்றி பெற் றுள்ளது. மேட்டூருக்கு அருகே உள்ள தானம்பட்டி கிராமத்தில் இரட்டைக் குவளை தேனீர் கடைகளில் இருக் கிறது என்ற செய்தி கிடைத்தவுடன், அங்கே அக்.2 ஆம் தேதி உடைப்புப் போராட்டம் நடத்த தோழர்கள் தயாரானார்கள். கருமலைக்கூடல் காவல்நிலையத்தில் இதுபற்றி புகார் தெரிவித்த கழகத்தோழர்கள், அக்.2 ஆம் தேதிக்குள் இரட்டைக் குவளை முறை ஒழிக்கப்படாவிட்டால், உடைக் கும் போராட்டம் நடக்கும் என்று தெரிவித்தனர். கழகத்தின் போராட் டத்துக்கு அனுமதி தர முடியாது என்று காவல்துறை மறுத்தது. அதே நேரத்தில் கழகத்தின் புகார் மனு மீது நடவடிக்கை எடுத்தது. தானம் பட்டி தேனீர்க் கடை உரிமையாளர் களிடம் காவல்துறை நேரில் சென்று எச்சரித்தது. அதைத் தொடர்ந்து, இரட்டைக்குவளை முறை ஒழிக்கப் பட்டது. குஞ்சாண்டியூர் கிராமத்தில் (இங்கு இரட்டைக் குவளை முறை இல்லை) தீண்டாமைக்கு எதிராக ஆர்ப் பாட்டம் நடத்திய கழகத் தோழர்கள் அங்கிருந்து தானம்பட்டிக்கு போராட் டத்துக்குச் சென்றபோது, அங்கு காவல்துறையின் முயற்சியால் இரட்டைக் குவளை முறை ஒழிக்கப் பட்டதை அறிந்து மகிழ்ச்சியடைந்தனர். தீண்டாமைக்கு எதிராக தோழர்கள் முழக்கமிட்டனர். தாழ்த்தப்பட்ட தோழர்கள் கழகத் தோழர்களை சந்தித்து, “இப்போதுதான் எங்களுக்கு, மனிதர்கள் என்ற மரியாதை கிடைத் திருக்கிறது, இதற்குப் போராடிய பெரியார் திராவிடர் கழகத்தை எங்கள் வாழ்நாளில் மறக்க முடியாது” என்று உணர்ச்சிப் பெருக்குடன் கூறினர்.

கழகத் தோழர்கள் சக்திவேல், அ.நாகராசன், அசோக்குமார், முரு கேசன், செல்வம், சதீஷ், மாதேசு, இராஜேசு, குட்டி, இரவி, அருள், பெரியார் பிஞ்சு அறிவுமதி, அற்புதராசு, அருள், சந்தோசு, சவுந்தர்ராசன், பாட்சா, எஸ்.எம்.டி. இராசா, குமரன் ஆகிய தோழர்கள் இதில் பங்கேற்றனர்.

## அம்பேத்கர் சிலை அவமதிப்பா?

மதுரை அவனியாபுரத்தில் அண்ணல் அம்பேத்கர் சிலையை சேதப்படுத்தியதை பெரியார் திராவிடர் கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது. குற்றவாளிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வற்புறுத்துகிறது.

தலையங்கம்

## ‘கொள்கை வழுக்கல்’ தொடருவதோ?

*டெல்லியில் – தீமையின் உருவம் என்று கூறி, இராவணன், கும்பகர்ணன், மேகநாதன் உருவ பொம்மைகளை தீயிட்டுக் கொளுத்தும் ‘இராமலீலா’ வழக்கம் போல் நடந்து முடிந்திருக்கிறது. தென்னாட்டு மக்களை திராவிடர்களை இப்படி அவமதிக்கும் ஒரு விழாவை நடத்திக் கொண்டு ‘இந்திய ஒற்றுமை’ பற்றிப் பேசுவதற்கு – என்ன தார்மீக உரிமை இருக்கிறது? இந்த நிகழ்வில் பிரதமர் மன்மோகன்சிங்கும், சோனியாவும் கலந்து கொண்டிருப்பது, வெந்த புண்ணில் வேல் பாய்ச்சும் செயலே ஆகும். பார்ப்பன இந்துத் தீவிரவாதிகளை மகிழ்விப்பதுதான் – மதச் சார்பின்மையா என்று கேட்கிறோம். ‘ராமன் பாலம்’ கடலுக்கடியில் இருப்பதாக – ஒரு கற்பனையைக் கூறி, சேது சமுத்திரத் திட்டத்தை முடக்கத் துடிக்கும் மதவெறி சக்திகள் – ராம பக்தர்கள் மனத்தைப் புண்படுத்தக் கூடாது என்கிறார்கள். இராவணன் படத்தை எரிப்பது, திராவிடர்களைப் புன்படுத்துவது ஆகாதா? இராவணனை தெய்வமாக வணங்கக்கூடிய பழங்குடி மக்களும் இந்த நாட்டில் வாழ் கிறார்களே. இராமாயணம் என்பதே – பார்ப் பனர்களை உயர்த்திப் பிடித்து ‘குலதர்மத்தை’ நியாயப்படுத்தும் கதை தானே?*

*‘சம்பூகன்’ சூத்திரன் என்பதால் அவன் பார்ப்பனருக்குரிய தவத்தை செய்யக் கூடாது என்று கூறி – ராமன் சம்பூகனுக்கு மரண தண்டனை விதித்தது – சூத்திரர்களை அவமதிப்பது அல்லவா?*

*ராமன் காட்டுக்குப் போகும் போதும் சரி, காட்டில் தனது தம்பி பரதன் தன்னை வந்து சந்திக்கும் போதும் சரி, “பிராமணர்களுக்கு தானதருமங்கள் முறையாக வழங்கப்படுகிறதா” என்று கவலையுடன் கேட்பது எதை உணர்த்துகிறது? பார்ப்பான் வேடத்தில் அனுமான் வந்தபோது, வந்தது அனுமான் என்று தெரிந்தும் – பார்ப்பன வேடத்தில் இருந்ததற்காக ராமன், அனுமான் காலில் வீழ்ந்து வணங் கினானே!*

*‘புத்தர்கள் திருடர்கள், அவர்களிடம் எச்சரிக்கையாக இரு’ என்று, பரதனிடம் இராமன் கூறுவது – புத்த மார்க்கத்தை ஏற்றுக் கொண்டவர்களை புண்படுத்துவது இல்லையா? இப்படி, ஒரு காவியத்தைப் பரப்புவதையே தடை செய்ய வேண்டும். அதைச் செய்யாமல், ‘ராமலீலா’ கொண்டாடுவது தமிழர்களின் சூடுசொரணையை சோதித்துப் பார்க்கிற செயல் அல்லவா?*

*ராமலீலாவை எதிர்த்து தென்னாட்டிலும் இராவணலீலா நடத்தும் நிலை வரும் என்று 1954 ஆம் ஆண்டுகளில் ‘முரசொலி’யில் கட்டுரை எழுதியவர்தான் தமிழக முதல்வர் கலைஞர். இன்று அவரது கூட்டணி ஆட்சியின் தலைவர்களே, ‘இராமலீலா’வில் பங்கேற்பது பற்றி ஏன் மவுனம் சாதிக்க வேண்டும்?*

*“நான் எப்போதுமே ராமனுக்கு எதிரியல்ல” என்கிறார் கலைஞர். கலைஞர் எப்போதுமே ‘ராமனை’ எதிர்த்ததில்லை என்கிறார். அவரது அரசியல் வாரிசாக வர இருக்கும், அமைச்சர் மு.க. ஸ்டாலின், ‘சூத்திரன்’ வேதம் படித்தால் மரண தண்டனை என்று கூறும் ராமனுக்கு நாங்கள் எப்போதுமே எதிரிகள் இல்லை என்று கூறுவதுதான், திராவிடர் இயக்கக் கொள்கையோ? இதுதான் ‘பெரியார் ஆட்சியின்’ பிரகடனமோ!*

*இத்தகைய கொள்கை வழுக்கல்களுக்கு கடும் விலை கொடுத்து வரும் திராவிட முன்னேற்றக் கழகம், ‘தலைக்கு விலை வைத்த’ப் பிறகும் உறுதியான கொள்கைப் பாதைக்கு திரும்ப மறுப்பது, பெரியார் – அண்ணா கொள்கைக்கு துரோகமாகாதா? சமுதாயக் கவலையுடன் கூறுகிறோம்.*

*உரத்து சிந்திக்க வேண்டும்!*

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 01.11.2007**

# ‘நாத்திகம்’ ஏடு பாராட்டுகிறது

*(கழகத்தின் போராட்டத்தைப் பாராட்டி ‘நாத்திகம்’ ஏடு வெளியிட்ட முகப்புக் கட்டுரை)*

தந்தை பெரியார் அவர்கள் உயிரோடு இருந்த காலம் வரையில் பார்ப்பனர்கள் வகுத்த சாதியும் தீண்டாமையும் முதுகொடிந்த பாம்புபோல சாகக் கிடந்தன!

ராமன் பாலத்தை “நீண்டகால நம்பிக்கை” என்று சொல்லி அழிக்கக் கூடாது என்று பார்ப்பனர்கள் அலறுவது போலத் தான் தீண்டாமையையும், சாதி ஏற்றத் தாழ்வையும் நீண்டகால நம்பிக்கை என்று சொல்லிக் காப்பாற்ற வேண்டும் என்று மாரடித்தார்கள்.

ஆனாலும், பார்ப்பனர்களின் கோயில் போராட்டம் முதல் எல்லாப் போராட்டங்களையும் மீறி தீண்டாமையை வன்கொடுமைக் குற்றமாக்கி அதற்கு ஏழாண்டுகள் வரையில் கடுந்தண்டனை உண்டு என்று அரசியல் சட்டத்திலேயே பதிவு செய்தார், அறிவுப் புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கர் அவர்கள். பெரியார் காலத்திற்குப் பின்பு அவர் கட்டி வைத்திருந்த இயக்கமும் அதன் பேரிலுள்ள பல்லாயிரம் கோடி பெறும் சொத்துகளும் பெரியாரியம் புரியாத கடலூர் கி.வீரமணி அதிகாரத்திற்குள் போய்விட்டது. கடலூர் கி.வீரமணி, பெரியார் வேலையை விட்டு விட்டு ‘ஜேப்பியார்’ வேலையைச் செய்யப் போய்விட்டார்.

கல்லூரிகள் கட்டுவதும், அதிலே மாணவர்களைச் சேர்க்கப் பலலாயிரம் பணம் பிடுங்குவதும், ஆட்சிகளை ஆதரித்து வியாபாரத்தை ஆபத்து இல்லாமல் செய்து கோடீஸ்வரனாவதும் அல்ல பெரியாரின் சுயமரியாதைக் கொள்கை வேலை!

இது புரியாமல் பல்கலைக்கழகமாக்கிவிட்டேன், நானே வேந்தர் பட்டம் மாட்டிக் கொண்டேன் என்று குதியாய் குதிக்கிறார், வீரமணி!

சாதி, தீண்டாமை ஒழிப்புக்காக உயிர் தியாகத்திற்கும் தயாராக இருந்த பெரியார் இயக்கம், அந்த வேலையை விட்டுவிட்டு முழு நேரப் பணியாக கல்லூரி வியாபாரத்தையே செய்து கொண்டிருக்கிறது!

‘விடுதலை’ பத்திரிகையை திறந்தால் பாதி இடம் கல்லூரி நிகழ்ச்சிகளுக்கும் மீதி இடத்தில் “வாழ்வியல் சிந்தனை” என்ற பெயரால் மாதவிலக்கு மருந்தும், சுகபேதி லேகியமும் தந்து கொண்டிருக்கிறார்கள்!

பெரியாரின் சாதி தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம் நாட்டில் ஒரு மூலைமுடுக்கில்கூட கடலூர் வீரமணியால் நடத்தப்பட வில்லை. அதற்கு வேந்தருக்கு நேரமும் இல்லை!

இதன் காரணமாகப் பார்ப்பனர்களின் நீண்டகால நம்பிக்கையான பிறப்பால் வரும் சாதீயத் தீண்டாமை தமிழ்நாடு பூராவும் தீயாய்ப் பரவிவிட்டது.

பெரியார் காலக் காமராஜர் ஆட்சியில் கணக்கெடுப்பில் தமிழ்நாட்டில் 250க்கும் குறைவான கிராமங்களிலேயே சாதீயத் தீண்டாமை இரட்டைக் குவளை தேனீர் விடுதிகள் இருந்தன.

அதையும் தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம் மூலம் சமூக நலத்துறையால் அழிக்கும் பிரச்சாரம் நடந்தது. இன்றைக்கு, சாதி ஒழிப்பு இயக்கம் என்று விட்டுச் சென்ற பெரியாரின் இயக்கப் பாதுகாவலர் கடலூர் கி.வீரமணி, ‘வேந்தர்’ என்று அங்கி மாட்டிக் கொண்டிருக்கும் இந்த நாளில் தமிழ்நாட்டிலுள்ள 20க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கிராமத் தேநீர் கடைகளில் இரட்டைக்குவளை தீண்டாமை கடைப்பிடிக்கப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கிறார்கள்.

இந்த அநீதி பற்றி ‘பெரியார் திராவிடர் கழகம்’ என்ற பெரியாரின் ஏழை எளிய தொண்டர்களைக் கொண்ட இயக்கத்தாரைத் தவிர, பெரியாரின் பெயர் சொல்லும் வேறு எவருக்கும் கவலை இருப்பதாகத் தெரியவில்லை!

அறக்கட்டளை அமைப்பது, அதற்கு அரசாங்கத்திடம் நிலமும், பணக்காரர்களிடம் பணமும் சூலிப்பது, தமக்குத் தாமே பாராட்டு விழா நடத்தி அதையே சமூகப் பெருமையாக விளம்பரம் செய்து, மேட்டிமை தேடிக் கொள்வது என்று தான் எல்லா அறிவாளிகளும் பொதுவாழ்வு நடத்துகிறார்களே தவிர, வளர்ந்து வரும் சமூகக் கேடுகளைத் தடுத்தொழிக்க பெரியார் திராவிடர் கழகத்தார் மட்டுமே முன்னிலையில் நிற்கிறார்கள்!

வடமேற்கு மாவட்டங்களில் பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் நடத்திய தொடர் நடைப்பயணத் தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரத்தின் மூலம் பல ஆச்சரியமான உண்மைகள் வெளிப்பட்டுள்ளன.

தீண்டாமை இரட்டைக் குவளை நடைமுறையில் தமிழ்நாட்டு அரசியல் கட்சிக்காரர்கள் கூட தலைமை ஏற்று நிற்கிறார்கள்!

சமத்துவ உரிமை கேட்கும் ஆதிதிராவிட மக்களுக்கு எதிராகச் சண்டை போட, மேல் சாதிக்காரர்கள் ஏராளமான கிராமங்களில் நிதி திரட்டி வைத்துக் கொண்டு, திட்டமிட்டு சண்டை போடுகிறார்கள். அந்த கிராமங்களுக்கு ‘ஃபண்டு கிராமம்’ என்று பெயர் சொல்லுகிறார்கள்.

அரசாங்கத்தின் சார்பில் அமைத்துக் கொடுக்கப்படும் இடுகாடு - சுடுகாடுகள்கூட மேல்சாதி என்போருக்கு தனியாகவும், தீண்டத்தகாத சாதிக்காரர்களுக்குத் தனியாகவும் என்றே அரசியல் சட்டத்துக்கே புறம்பாக அமைத்துக் கொடுக்கப்படுகிறது.

கிராமங்களிலுள்ள பிரச்சினைகள் என்ன என்பதை பஞ்சாயத்துக்கள் சார்பில் விளம்பரப் பலகைகளில் எழுதி வைக்கும்போது இரட்டைக் குவளைத் தீண்டாமையை கிராமப் பிரச்சனையாக யாரும் எழுதி வைப்பதில்லை!

இன்னும் சில கிராமங்களில் பார்ப்பான் சொல்லும் நீண்டகால நம்பிக்கை - நெடுங்காலப் பழக்கம் என்ற முறையில் ஆதி திராவிட மக்களே சமத்துவ உணர்வோடு தீண்டாமையை எதிர்க்காமலிருக்கிறார்கள்.

பல ஊர்களில் தி.மு.க., அ.தி.மு.க., பா.ம.க., பா.ஜ.க., என்று சொல்லிக் கொள்பவர்களே தீண்டாமை இரட்டைக் குவளைக்கு ஆதரவாகத் தலைமையேற்று சண்டைக்கு நிற்கிறார்கள்.

இந்தக் கொடுமைகளை எல்லாம் நேருக்கு நேராக முகத்துக்கு முகமாக சந்தித்து “இரட்டைக் குவளை வைக்காதே”, “சமூக விரோதமானது இரட்டைக்குவளை” என்று குக்கிராமங்களில்கூட ஊர்வலமாகப் போய் முழக்கமிட்டு, பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் பிரச்சாரம் செய்கிறார்கள். இது மாபெரும் பெரியார் வேலையாகும். பல கிராமங்களில் தங்கள் குற்றங்களை உணர்ந்து இரட்டைக்குவளை முறையைத் தேனீர்க் கடைக்காரர்களே ஒழித்திருக்கிறார்கள்.

பெரியார் தி.க. தோழர்களின் இந்தப் பிரச்சாரம் கிராமங்களில் பெரும் பரபரப்பை உண்டாக்க, அரசு அதிகாரிகளும் விழித்தெழுந்து பத்திரிகைகளுக்கு பொய் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள்.

“தீண்டாமை ஒழிப்பு - மனித உரிமை காப்பு”த் துறை அதிகாரிகள் பத்திரிகைகளுக்கு கொடுத்திருக்கும் அந்தப் பம்மாத்து அறிக்கை என்னவென்றால் -

“தமிழ்நாட்டில் வெகு சில கிராமங்களில் மட்டுமே இரட்டைக்குவளைத் தேனீர் கடைகள் உள்ளன. சிலர் இதை மிகைப்படுத்துகிறார்கள். அந்தக் கிராமங்களிலெல்லாம் நாங்கள் சமூக நீதி தேனீர் விருந்து வைத்து வருகிறோம். விரைவில் எல்லாம் சரியாகிவிடும்” என்பதே அரசு அதிகாரிகளின் மழுப்பல் அறிக்கை.

“சமபந்தி போஜனம்” என்ற ஏமாற்றுச் சோறு தின்னும் போராட்டதை நடத்தி சாதியையும், தீண்டாமையையும் ஒழிக்கப் போவதாகச் சொன்ன பார்ப்பனர்களின் ஏமாற்றைப்போல்தான் இந்த அரசு அதிகாரிகளின் “சமஇருப்பு தேனீர்” விருந்தும் ஆகும்.

இது கொக்குத் தலையில் வெண்ணை வைத்துப் பிடிக்கும் முட்டாளின் செயல்பாடே தவிர உண்மையில் அரசியல் சட்டப்படி தீண்டாமையை ஒழிக்கும் சரியான செயலல்ல!

அரசு அதிகாரிகளின் அறிக்கை எவ்வளவு பொய் என்பதற்கு அம்பேத்கர் மக்கள் கட்சித் தலைவர் வை.பாலசுந்தரமும் சாட்சியாக வருகிறார்.

அம்பேத்கர் மக்கள் கட்சி சார்பில் ‘குமரி முதல் இமயம் வரை’ என்ற ரதயாத்திரை நடத்தினார்கள். அந்த யாத்திரையின் போது கண்டறிந்த உண்மை என்று வை.பாலசுந்தரம் சொல்லுகிறார்.

“ஆதி திராவிட மக்களின் வீட்டு வசதி மற்றும் பல மேம்பாட்டுத் திட்டங்களுக்கு என்று தமிழ்நாட்டுக்கு ஒதுக்கிய பல ஆயிரம் கோடி ரூபாயில் கடந்த சில ஆண்டுகளில் மட்டும் வழங்கப்பட்ட 40 ஆயிரம் கோடி ரூபாயை பயன்படுத்தாமல் தமிழ்நாடு அரசு, மத்திய அரசிடமே திருப்பித் தந்துவிட்டது!

“தமிழ்நாட்டிலுள்ள 17 மாவட்டங்களில் இரட்டைக் குவளை தீண்டாமை கொடுமை கடைப்பிடிக்கப்படுகிறது!

“சேலம் போன்ற சில மாவட்டங்களில் ஆலயங்களுக்கு ஆதிதிராவிட மக்கள் போக முடியாத நிலை உள்ளது. வேறு பல கொடுமைகளும் நடக்கின்றன!

“சேலத்தில் ஆதி திராவிட மக்கள் உள்ளே நுழையக் கூடாது என்பதற்காகவே திரௌபதி அம்மன் கோயிலைப் பூட்டி சீல் வைத்துள்ளார்கள்.

“இதன் பின்னணியில் தமிழக அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம் இருந்து செயல்படுகிறார்” இப்படி வை.பாலசுந்தரம் குற்றம் சாட்டியுள்ளார்.

“நீண்டகால நம்பிக்கை பழக்கம்” என்ற பெயரால் பார்ப்பனர்களின் இந்துமத ஐதீகம் இப்படி தீண்டாமைக் கொடுமையை செய்து கொண்டிருக்கிறது.

இந்திய அரசியல் சட்டத்துக்கு விரோதமான இந்தக் கொடுமையை - அநீதியை பெரியார் திராவிடர் கழகத் தோழர்களோடு இணைந்து மொத்தத் தமிழர்களும் எதிர்த்தொழிப்போம் வாருங்கள்.

**நன்றி: ‘நாத்திகம்’ 12.10.2007**

### தமிழர்கள் மீது குண்டு போட்ட 18 விமானங்கள் அழிந்தன

# அனுராதபுரம் தாக்குதல்: நடந்தது என்ன?






*அனுராதபுரம் - விமானப்படைத்தளத்தில் விடுதலைப் புலிகளின் கரும்புலி படை நடத்திய தாக்குதல் - சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது. சிறீலங்கா அதிர்ச்சியில் உறைந்துள்ளது. தாக்குதல் பற்றிய முழுமையான செய்திகள்:*

அனுராதபுரம் சிங்களர் பகுதி. அங்கேதான் சக்தி வாய்ந்த சிறீலங்கா அரசின் விமானப்படைத் தளம் செயல்படுகிறது. தமிழர்கள் வாழும் வடக்குப் பகுதிக்கு அருகே அமைந்துள்ள இந்த படைத்தளத்திலிருந்துதான் தமிழர்கள் மீது குண்டுபோடும் விமானங்கள் புறப்பட்டுச் செல்லும். சிங்கள ராணுவத்தினருக்கு தேவையான பொருட்களையெல்லாம் சுமந்து செல்வதும், இந்தத் தளத்திலிருந்து புறப்படும் போர் விமானங்கள்தான். சிறீலங்கா, விமானப் படைக்கான மிகப் பெரிய பயிற்சிக் கல்லூரி இங்குதான் அமைந்துள்ளது. தாக்குதல் நடத்தக்கூடிய 5 விமானப் படைப்பிரிவுகளின் முகாம்களும் இந்தத் தளத்தில்தான் இருந்தன. ஆட்களே இல்லாமல் பறந்து, உளவு பார்க்கக்கூடிய விமானப் பிரிவும் இங்கேதான் இருந்தது. இந்த விமானங்களைப் பறக்கச் செய்து, அவை படம் பிடித்து பதிவு செய்த தகவல்களைக் கொண்டு தாக்குதல் நடத்துவது வாடிக்கை. வான் படையினருக்கு மட்டுமல்ல, கடற்படையினருக்கு தாக்குதலுக்கான ரகசிய தகவல்களை வழங்கி வந்ததும் - இந்த ஆள் இல்லாத உளவு விமானங்கள் வழியாகத் தான். இந்தப் படைத் தளத்தின் நீளம் மூன்று கிலோ மீட்டர். அகலம் இரண்டரைக் கிலோ மீட்டர். அவ்வப்போது புதிய புதிய உத்திகளை வழங்கி, பயிற்சி தருவதற்கு, சீனா, பாகிஸ்தான், இஸ்ரேல் நாட்டிலிருந்து பயிற்சி யாளர்கள் இந்த விமானப் படைத் தளத்துக்கு வந்து செல்வார்கள்.

அத்தகைய சக்தி வாய்ந்த அனுராதபுரம் - விமானப்படைத் தளத்தைத் தான் விடுதலைப்புலிகளின் கரும்புலிப்படை தாக்கி 18 விமானங்களை அழித்து, புதிய வீரகாவியத்தைப் படைத்திருக்கிறது.

“மட்டக் களப்பை உள்ளடக்கிய கிழக்கு மாகாணத்தை ராணுவம் பிடித்துவிட்டது. விடுதலைப்புலிகளின் ஆயுதக் கப்பல்களை எல்லாம் முற்றாக அழித்துவிட்டோம், வன்னிப் பகுதிக்குள் விடுதலைப்புலிகளை முடக்கி விட்டோம்” என்று, கொக்கரித்தது சிறீலங்கா அரசு. அந்த ஆணவக் குரல் ஒலித்துக் கொண்டிருந்தபோதுதான், கடந்த அக்.22 ஆம் தேதி திங்கள் கிழமை அதிகாலை இந்த அதிர்ச்சிகரமான தாக்குதல் நடந்து முடிந்துள்ளது.

தாக்குதல் தொடங்கிய நேரத்தில் ராணுவ மய்யத்தில் என்ன நடந்து கொண்டிருந்தது? தாக்குதலுக்கு முந்தைய நாள் இரவு - படைத்தளத்துக்கு அருகே உள்ள விளையாட்டுத் திடலில் - விளையாட்டு விழா, உயர் அதிகாரிகள் பலரும், அந்த விழாவில் பங்கேற்று, குதூகலமாய் பொழுதை கழித்தனர். தாக்குதல் நடந்த நாள் இரவு - தொலைக்காட்சியில் பிரபலமான இசை நிகழ்ச்சி. படையினர், தொலைக்காட்சிப் பெட்டிகள் முன் அமர்ந்து இசை எனும் இன்ப வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்தனர். விடுதலைப்புலிகளின் புலனாய்வுப் பிரிவு தாக்குதலுக்கு தேர்வு செய்த நாள் இதுதான்.

கொழும்பிலிருந்து வெளிவரும் ‘டெய்லி மிர்ரர்’ ஆங்கில நாளேடு தாக்குதல் நடந்தது எப்படி என்பதை விரிவாக வெளியிட்டுள்ளது.

லெப்டினனட் கேணல் இளங்கோ தலைமையில் 21 கரும்புலிகள் இந்தத் தாக்குதலில் பங்கேற்று வீரமரணத்தைத் தழுவி, வரலாறாகியுள்ளனர். இந்த 21 கரும்புலிகளும் விமானப் படை உதவியோடு நடத்திய தாக்குதல் சிறீலங்காவின் ராணுவ - பொருளாதார - அரசியலை - ஒரே இரவில் தலைகீழாகப் புரட்டிப் போட்டு விட்டன.

கரும்புலிப்படையினர் 21 பேரும் கிளிநொச்சியில் தலைமையிடமிருந்து கிடைக்கும் உத்தரவுக்காக - சிங்கள ராணுவ முகாமுக்கு அருகே உள்ள தென்னந்தோப்பு ஒன்றில் தங்கியிருந்தனர். இவர்களில் 3 பேர் பெண் விடுதலைப்புலிகள். உத்தரவு கிடைத்தவுடன், கரும்புலிப் படை செயலில் இறங்கியது. அதிகாலை 2.30 மணி. முதலில் படைத் தளத்தின் வெளியிலிருந்த முதலாவது முட்கம்பி வேலியை வெட்டி படைத் தளத்தின் வெளிப் பகுதிக்குள் நுழைந்தனர். அடுத்த நிலையில் - மற்றொரு முட்கம்பி வேலி. இரண்டு முள்கம்பி வேலிகளுக்கு இடையே சிறிய மின்சாரம் பாய்ச்சப்பட்ட வேலியும் உண்டு. ஆனால், அன்று மின்சாரம் பாய்ச்சப்படவில்லை. இது கரும்புலிப்படைக்கு சாதகமாக அமைந்து விட்டது. இரண்டாவது வேலியும் உடைக்கப்பட்டது. பாதுகாப்பு அமைப்பில் - இவ்வளவு குறைபாடுகள் எப்படி ஏற்பட்டது? இதற்கு யார் காரணம்? சிறீலங்கா அரசு தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கிறது. இவ்வளவையும் கடந்து உள்ளே நுழைந்தால் - ஓடு பாதையில் ஒலிகளை எழுப்பக்கூடிய கண்ணி வெடிகள். கால் வைத்தால், சத்தத்துடன், கண்ணி வெடிகள் வெடிக்கும். கரும்புலிகள் அங்கும் ஓசைப்படாமல், கண்ணி வெடிகளை அகற்றினர். ஓடு பாதையின் இருபுறமும், மிதி வெடிகள். மிதித்தால் வெடித்து சிதறும். அருகே பதுங்கு குழிகள். அந்தப் பதுங்கு குழிக்குள் சிங்கள விமானப் படையினர் பணியில் இருந்தனர்.

புலிகளின் படைப் பிரிவு - இரு அணிகளாகப் பிரிந்தது. ஒரு அணி - பதுங்குக் குழியின் ஒரு முனையை அடைந்து, விமான ஓடு பாதையை நோக்கி சத்தமின்றி ஊர்ந்து செல்லத் தொடங்கியது. இரண்டாவது அணி பதுங்கு குழியின் இரண்டாவது முனையை அடைந்து, ஊர்ந்து சென்றது. மூன்று விடுதலைப்புலிகள் பதுங்கு குழியின் பின்புறமாக நிலை எடுத்து நின்றனர். நகர்ந்து செல்லும் புலிகளை அடையாளம் கண்டு, படையினர் தாக்கினால், அவர்கள் மீது தாக்குதல் நடத்துவதே இவர்களின் திட்டம். ஆனால் அப்படி தாக்குதல் எதுவும் நடக்கவில்லை. காரணம், பதுங்குகுழியிலிருந்து காவல் காக்க வேண்டிய சிங்கள விமானப் படையினர், நன்றாக தூங்கிக் கொண்டிருந்தார்கள். இரு அணிகளும் ஓடு பாதையை அடைந்ததும் பதுங்குக் குழிக்குப் பின்னால் இருந்த மூன்று விடுதலைப்புலிகளும் குழிக்குள் இருந்த படையினரை நோக்கி சரமாரியாக சுடவே, உள்ளே இருந்தவர்கள் நிலையாகவே உறங்கிப் போனார்கள். அப்போது நேரம் விடியற்காலை 3.20 மணி. துப்பாக்கிச் சத்தத்தைக் கேட்ட படையினர், தங்களது படைத்தளம் தாக்குதலுக்கு உள்ளாவதை உணர்ந்து செயல்படத் தொடங்கினர். ஆனால், விமான ஓடு பாதையில் இருந்த முதல் நிலை பதுங்கு குழிகளைத் தாக்கி, அதில் காவலுக்கு இருந்த படையினரை அழித்து விட்டதால், விமானக் கட்டுப்பாட்டு கோபுரத்துக்கு அருகே இருந்த விமானங்களுக்கும், ஹெலிகாப்டர்களுக்கும் எந்தப் பாதுகாப்பும் இல்லை. விமானக் கட்டுப்பாட்டு கோபுரத்துக்கு அருகே சக்தி வாய்ந்த விமான எதிர்ப்பு துப்பாக்கி நிலை இருந்தது. அதாவது, விமானங்களை சுட்டுவீழ்த்தக்கூடிய துப்பாக்கிகளைக் கொண்ட இடம். சில நிமிடம் நடந்த கடும் தாக்குதலுக்குப் பிறகு, படைத் தளத்தின் தொலை தொடர்பு விமானங்கள் வந்து போவதைப் பதிவு செய்யும் ராடார், விமான எதிர்ப்பு துப்பாக்கி நிலை அனைத்தும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டன.

இதே நேரத்தில் போராடும் புலிகளுக்கு உதவிட, புலிகளின் இரண்டு விமானங்கள் விண்ணில் பறந்து வந்தன. வவுனியா மற்றும் கட்டுநாய்க்காவில் உள்ள சிங்கள அரசின் விமானப் படைத் தளங்களில் பொருத்தப்பட்டிருந்த ‘ராடார்’ கருவிகள், விமானங்கள் பறந்து வருவதை உறுதிப்படுத்தின. வருவது விடுதலைப்புலிகளின் விமானம் தான் என்பதை புரிந்து கொண்டு, வவுனியா, அனுராதபுரம், கொழும்பு பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. அப்போது நேரம் 4.10. இருளிலும் புலிகளின் இரு விமானங்களும் வவுனியாவுக்கு மேலே பறந்து அனுராதபுரம் தளத்தை அடைந்து மூன்று குண்டுகளை வீசின. புலிகளின் விமானத்தை வானத்தில் சுட்டு வீழ்த்துமாறு கொழும்பு கட்டுப்பாட்டு அறையிலிருந்து விமானப்படை தளபதி, வவுனியா, விமானப்படை தளபதிக்கு உத்தரவிட்டார். புலிகள் விமானத்தைத் தாக்குவதற்கு, சிங்கள விமானப் படையினர் ஹெலிகாப்டரில் (பெல் 212) புறப்பட்டனர். இவர்கள் அனுராதபுரம் வருவதற்கு முன்பே புலிகளின் விமானங்கள் படைத்தளத்துக்குள் நுழைந்து விட்டன. சிங்கள வவுனியா, அனுராதபுரம் படைத்தளங்களில் உள்ள விமானப் படையினருக்கும், புலிகள் விமானத்தை சுட்டு வீழ்த்த உத்தரவுகள் பறந்தன. அப்போது விடியற்காலை 4.30 மணி. அனுராதபுரத்திலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் டொரமடலாவா பகுதியில் பறந்த விமானத்தை தரையிலிருந்து சிங்களப் படையினர் சுட்டு வீழ்த்தினர். புலிகளின் விமானத்தை சுட்டு வீழ்த்திவிட்டதாக வவுனியா படைத்தளத்துக்கு தகவல் பறந்தது. பிறகுதான் தெரிந்தது. சிங்களப்படை தரையிலிருந்து சுட்டு வீழ்த்தியது, புலிகளின் விமானத்தை அல்ல, அவர்கள் சுட்டு வீழ்த்தியது, புலிகள் விமானத்தை சுட்டு வீழ்த்துவதற்கு வந்த ‘பெல் 212’ சிங்கள விமானப்படை விமானம். அதிலிருந்த நான்கு சிங்கள விமானப் படையினர் கொல்லப்பட்டனர்.

புலிகளின் விமானம் படைத்தளத்துக்குள் நுழைந்து குண்டுகளைப் போட்டது. விமான எதிர்ப்பு துப்பாக்கி நிலையும், புலிகள் கட்டுப்பாட்டுக்குள் ஏற்கனவே வந்துவிட்டது. அவ்வளவுதான். விடுதலைப்புலிகள் 6 பேர் பதுங்குக் குழிகளைக் கைப்பற்றி, படையினர் மீது தாக்குதலை நடத்த, அதே நேரததில் மற்ற புலிகள் ராணுவ விமானங்களை ஒவ்வொன்றாக அழித்தனர். இந்த விமானங்கள்தான் வானத்தில் பறந்து வட்டமிட்டு, பல்லாயிரம் தமிழர்கள் மீதும், செஞ்சோலை இளம் பிஞ்சுகள் தலையிலும் குண்டுகளைப் போட்டு பிணமாக்கிய விமானங்கள். படைத் தளத்திலிருந்த

4 ஆம் பக்கம்

# ‘சிங்கத்தின் குகையிலே சந்திக்கப் போறோம்’

அனுராதபுரத்தில் நடந்த ‘எல்லாளன் நடவடிக்கைக்கு’ தலைமை ஏற்று வழி நடத்தி வீரமரணத்தைத் தழுவிய கரும்புலி லெப்டினன்ட் கேணல் இளங்கோ தமிழ் ஈழ மக்களுக்கு இறுதியாக ஒரு மடலை எழுதி வைத்துவிட்டு களம் புகுந்தார். அதில் சில வரிகள்:

“தலைவர் இருக்கிற காலத்திலேயே நாங்கள் நிச்சயம் தமிழ் ஈழம் மீட்போம். இது உறுதி. அதற்கு உங்களுடைய பங்களிப்பு தான் முக்கியம். அண்ணனுக்கு நீங்கள் தான் தோள் கொடுக்க வேண்டும். உங்களுடைய பங்களிப்பில்தான் எங்கட மண்ணை மீட்க முடியும். ஆதலால் தான் நாங்கள் கரும்புலி என்ற வடிவம் எடுத்தோம். வானேறி வந்து குண்டு போடுகிற சிங்கங்களை அவையிட குகையிலேயே சந்திக்கப் போறோம். அவர்களுக்கு தமிழன் படுகிற அவலத்தைப் புரிய வைக்கப் போறோம். நிச்சயம் அவர்களுக்கு உணர்த்தியே தீருவம். தமிழர் படையில் முப்படையும் வளர்ந்து நிற்குது. இனி நீங்கள்தான் சிங்களவனுக்கு எதிராக எழுந்து நிக்க வேணும். எங்களுக்கும் அழிக்கவேண்டிய இடத்துல அழிக்கத் தெரியும் என அடிச்சுக்காட்டியிருக்கிறோம். இதே மாதிரி தொடர்ந்து அடிப்போம். அடிச்சுக்கிட்டே இருப்போம் என அடிச்சுச் சொல்லுங்கோ, வழிகாட்ட தலைவர் இருக்கிறார். நீங்கள் எழுந்து மூச்சாக நின்றால் போதும் தமிழ் ஈழம் விரைவாக வந்து சேரும்.”


கரும்புலி
லெப் கேணல் இளங்கோ


கரும்புலி
கப்டன் ஈழப்பிரியா

புலிகளின் தாகம், தமிழ் ஈழத் தாயகம்!
தலைவர் கவனம்; தலைவர் எங்களின் வழிகாட்டி
தலைவர்தான் எங்கட அப்பா; தலைவர்தான் எங்கட அம்மா
அவருக்கு ஒன்றும் நடந்திடக் கூடாது. **– இ. இளங்கோ**

உண்மையாகவே சிங்கத்தைக் குகையில் சந்தித்த அந்த விடுதலை வீரன் – படைத்தளத்தின் கள நிலைகளை தொடர்ந்து 10.30 மணி வரை வன்னி தலைமையகத்துக்கு தெரிவித்துக்கொண்டே இருந்தார். தாக்குதலின்போது மூன்றாவது முறை காயம்படுகிறார்.அந்நிலையிலும் வீரர்களுக்கு கட்டளைகளை வழங்கினார். இறுதியாக தன்னுடைய தலைமையகத்துக்கு தனது மரண சாசனமாக கூறிய வார்த்தைகள் இவை:

“தலைவர் நினைச்சதை நாங்கள் செய்து முடிச்சிட்டோம். நீங்களும் தலைவரின் திட்டத்தை சரியாகச் செய்யுங்கோ. தலைவர் தான் கவனம். அவரை கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கோ. நான் மூன்றாவது முறையும் காயம் பட்டுட்டேன். நான் தொடர்பை துண்டிக்கிறேன்...”

இது துண்டிக்கப்பட்ட தொடர்பு அல்ல. தொடரும் போராட்டத்துக்கான உந்தும் சக்தி.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டாவது பெரிய தீயணைப்பு நிலையத்தையும் புலிகள் தாக்கி அழித்தனர்.

கடும் சமர் நடந்தபோது - ராணுவத்தின் சிறப்புப் படைப் பிரிவுகள், ஏராளமாக விரைந்தன. ராணுவத்தினரின் நவீன ரக ஆயுதங்கள் சீறிப் பாய்ந்தன. சில விடுதலைப் புலிகள் வீரமரணத்தை தழுவினர். பலர் காய மடைந்தனர். ஆனாலும் சண்டை தொடர்ந்தது. தமிழ் மக்களைக் கொன் றொழிப்பதற்கு சிங்களப் படைக்கு மிகவும் பயன்பட்டது ‘மீச்கிராப்’ என்ற சக்தி வாய்ந்த விமானம். இந்த விமானத்தின் விலை 280 லட்சம் அமெரிக்க டாலர். இலங்கை ரூபாய் மதிப்பின்படி 119.3 மில்லியன் ரூபாய். சிறீலங்காவிடம் இந்த விமானம் இரண்டு மட்டுமே உண்டு. அதில் ஒன்று இத் தாக்குதலில் அழிக்கப்பட்டு விட்டது.

ராணுவம் தமிழ் மக்கள் மீது வீசுவதுபோல் சிங்கள பொதுமக்கள் எவர் மீதும் - புலிகளின் விமானம் குண்டுகளைப் போடவில்லை. அவர்களின் இலக்கு தமிழர்களை அழித்தொழிக்கும் குண்டுவீச்சு விமானங்கள் மீது மட்டுமே இருந்தன. பகல் 11 மணியளவில் மோதல்கள் முடிவுக்கு வந்தன 21 விடுதலைப் புலிகளும் வீர மரணத்தைத் தழுவினர். இதில் 6 புலிகள் குண்டுகளை வெடிக்கச் செய்து நாட்டுக்கு உயிர்க்கொடை தந்தனர்.

விடியற்காலை 4 மணியிலிருந்து பகல் 11 மணி வரை அனுராதபுரம் விமானப் படைத்தளம், முழுமையாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலே தங்கியிருந்தது குறிப்பிடத்தக்க செய்தியாகும். மரணத்தைத் தழுவும் 30 நிமிடத்துக்கு முன்பு காலை 10.30 மணி வரை விடுதலைப்புலிகள் கிளிநொச்சி யிலுள்ள தலைமையுடன் தொடர்பு கொண்டு தகவல்களைத் தந்து கொண்டே இருந்தனர். தங்களுடன் துப்பாக்கிகளை மட்டுமல்ல, இரண்டு தமிழ் ஈழக் கொடிகளையும் அந்தப் புலிகள் கொண்டு வந்திருந்தனர்.

இத்தாக்குதலில் 4 சிங்கள ராணுவ அதிகாரிகளும், 13 விமானப் படையினரும், ஒரு ராணுவ சிப்பாயும் கொல்லப்பட்டனர். சிறீலங்கா ராணுவத்தின் விமானப் படையில் பெரும் பகுதி அழித்தொழிக்கப்பட்டது. அழிக்கப்பட்ட விமானங்கள் எண்ணிக்கை 8 என்று முதலில் செய்தி வந்தது. ஆனால் 21 விமானங்கள் அழித்தொழிக்கப்பட்டதாக செய்திகள் கூறுகின்றன.

தமிழ் ஈழ மக்கள் மீது தொடர்ந்து குண்டுவீசித் தாக்கிய விமானப் படைக்கு பதிலடியாகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சிங்கள ராணுவமும், ஆளும் வர்க்கமும் அதிர்ச்சியில் உறைந்தது. அவசர அவசரமாக பாதுகாப்புக்குழுவைக் கூட்டினார் ராஜபச்சே. பாதுகாப்பு அமைச்சக செயலாளர், படைத்தளபதிகள், உயர் அதிகாரிகள் கூடிப் பேசினர். கப்பற்படை தளபதியும், இராணுவத் தளபதியும் நாட்டில் இல்லை. வெளிநாடு களுக்குப் போய் விட்டனர். விமானப் படைத் தளபதியை பாது காப்பு அமைச்சக செயலாளர் (கோத்தபாயா) கடுமையாக சாடினார்.

அன்று மாலை பாதுகாப்பு அமைச்சக செயலாளரும், தளபதிகளும் அனுராதபுரம் சென்று அழித்தொழிக்கப்பட்ட விமானப் படைத்தளத்தைப் பார்த்தனர். ஆம், அப்பாவி தமிழ் மக்களை, அன்றாடம் பிணங்களாக்கு வதற்குப் பயிற்சித் தந்த தளம் அது. விமானப் படைத்தளத்தின் பொறுப்பை தளபதியிட மிருந்து பறித்து, இராணுவத் தளபதியிடம் ஒப்படைத்தார், உயர் அதிகாரம் கொண்ட பாதுகாப்பு அமைச்சக செயலாளர். பயிற்சித் தளத்தின் கட்டளைத் தளபதியும் உடனடியாக மாற்றப்பட்டார்.

விடுதலைப் புலிகளின் விமானப்படை, கப்பல் படைகளை ஒழித்து விட்டதாகவும், விடுதலைப்புலிகளை வன்னிப் பகுதியோடு முடக்கி விட்டதாகவும், ஆர்ப்பரித்த சிறீலங்கா அரசு, இப்போது அடுத்து பொது மக்கள் மீது தாக்குதல் நடத்தவும், பொய்யான அறிக்கைகளை தயாரிக்கவும், ஆழமான சிந்தனையில் இறங்கியுள்ளது.

சர்வதேச சமூகம் - நிலைமையை உன்னிப்பாக கவனித்து வருகிறது.

## ‘எல்லாளன் நடவடிக்கை’ உணர்த்தும் செய்திகள்!

அனுராதபுரம் தாக்குதலுக்கு விடுதலைப்புலிகள் சூட்டியிருந்த பெயர் ‘எல்லாளன் நடவடிக்கை’ இந்த ‘எல்லாளன்’ நடவடிக்கை உலகுக்கு பல செய்திகளை உணர்த்தியிருப்பதாக அரசியல் ராணுவ ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். அவை யாவை?

- சிறீலங்கா அரசியல் மற்றும் ராணுவப் பிரச்சினைகளைத் தீர்மானிக்கக் கூடிய செல்வாக்குள்ள சக்திகளாக விடுதலைப் புலிகள் திகழ்கிறார்கள்.
- சிறீலங்காவின் பாதுகாப்புக் கட்டமைப்புகளைத் தகர்த்து, சிங்களர் பகுதியான தென்னிலங்கையில் ஊடுருவி, வெற்றிகரமாக தாக்குதலை, விடுதலைப்புலிகளால் நடத்த முடியும்.
- வடக்கில் வாழும் தமிழர்கள் மீதான தாக்குதலை நடத்தி வந்த அனுராதபுரம் படைத்தளம் அழிக்கப்பட்டதால், சிறீலங்காவின் அடுத்தக்கட்ட தாக்குதல்கள் வேறு தளத்துக்கு நகர்த்தப்படும் நிலை வந்துவிட்டது.
- தமிழ் ஈழத்தில் சிங்களப் படை தனது ஆக்கிரமிப்புகளை தொடர்ந்தால், தென்னிலங்கைப் பகுதி சிங்களப்படை முகாம்களை, விடுதலைப் புலிகளால், இலகுவாகத் தாக்கியழிக்கப்படும்.
- புலிகளின் தரைப்படையுடன் விமானப் படையும் இணைந்து, ஒருங்கிணைந்த வெற்றிகரத் தாக்குதலை நடத்தக்கூடிய மரபு வழி போரியல் ஆற்றல் விடுதலைப்புலிகளுக்கு உண்டு.

# தாக்குதலுக்கு திட்டமிட்டது பிரபாகரன்

இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட லெப். கேணல் இளங்கோவிடமிருந்து வன்னிக்கு நேரடியாக தகவல்களைப் பெற்று வந்த விடுதலைப்புலிகளின் லெப்டினன்ட் கேணல் கலைக்கோடன் தாக்குதல் தொடர்பாக பல்வேறு செய்திகளை வெளியிட்டுள்ளார். புலிகள் நடத்தும் ‘கர்னல் ரேயான் அகடமி’ ராணுவப் பயிற்சிக் கல்லூரியில் இவர் சிறப்புப் படை பயிற்சியாளராக உள்ளார். இந்தத் தாக்குதலுக்கு புறப்பட்ட 27 கரும்புலிகளுக்கும் விடை தரும் உணர்வுபூர்வமான நிகழ்வில் தமிழ் ஈழத் தேசியத் தலைவர் பிரபாகரன் பேசும்போது, “நீங்கள் எப்போதும் என்னுடைய இதயத்தில் வாழ்வீர்கள். இந்த விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க உங்களது நினைவுகள் எனக்கு உறுதியையும், உள்ளத்து வலிமையையும் தரும். நீங்கள் செய்யவிருக்கும் தியாகம், குமரப்பா, புலேந்திரன், திலீபன் தியாகத்துக்கு ஈடானது. அவர்களின் தியாகம் தான், இருபது ஆண்டுகளுக்கு முன் இந்தியப் படைகளை எதிர்த்து நிற்கக்கூடிய உறுதியையும், உணர்வையும் எனக்கு தந்தது” என்று கூறி, பிரபாகரன், அம் மாவீரர்களை வழியனுப்பி வைத்தார்.

கடந்த வியாழக்கிழமை - வீரமரணத்தைத் தழுவிய 27 கரும்புலியினருக்கு வன்னி புதுக்குடியிருப்பு பகுதியில் ‘வீர வணக்கம்’ செலுத்தப்பட்டது. அந்த நிகழ்வில் கலைக்கோடன் பேசுகையில் இத்தகவல்களை வெளியிட்டார்.

தாக்கதலுக்கு தலைமையேற்ற லெப்டினன்ட் கேணல் இளங்கோ, காலை 3.20 மணிக்கு தாக்குதலைத் தொடங்கினார். இந்தத் தாக்குதலில் கேப்டன் பஞ்சீலன் மிக முக்கியப் பங்காற்றினார். இவர் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சார்ந்தவர். பெண் கரும்புலி கேப்டன் ஈழப்பிரியா விமான எதிர்ப்புத் துப்பாக்கிகளைப் பயன்படுத்துவதில் சிறப்பு பயிற்சி பெற்றவர். இவர்தான் படைத் தளத்தில் விமான எதிர்ப்பு நிலைகளைத் தனது கட்டுப்பாட்டுக்குள்

(6 ஆம் பக்கம்)

## பாரதி பாடியதை எதிர்த்தார்களா?

- சம்பூகன் என்பவன் தவம் இருந்தான் என்பதற்காக அவன் தலையை வெட்டியவன் இராமன்!
- இராமன் மனைவி சீதையை சந்தேகப்படுகிறான். இவன் கடவுளா? சராசரி மனிதனின் செயலைவிட கீழ்த்தரமாக நடந்து கொண்ட இராமன் எப்படி கடவுளாக இருப்பான்!
- இராமனைப்பற்றி அக்னிகோத்திரம் தாத்தாச்சாரியார் (வேதமேதை) புதுவிளக்கம் தருகிறார்.

  இராமன் சொல்கிறான் :

  "ஆத்மானம் மானுசம் மன்யே
  ராமம் தசரதாத்மசம்."

அதாவது, 'நான் தெய்வமெல்லாம் கிடையாது. நான் தசரன் என்னும் அப்பாவுக்கு பிறந்த மனிதன் தான். என்னைப் போற்றாதீர்கள் என இராமன் தன் வாயால் சொல்வதாக வால்மீகி இராமாயணத்தில் இருக்கிறது' என சொல்கிறார்.

- பாரதியார் சிங்களத் தீவிற்கு ஒரு பாலம் அமைப்போம் என்று பாடிய போது, இந்து மதவாதிகள் ஏற்கனவே இராமன் பாலம் இருக்கும்போது நீ ஏன் புதிதாக பாலம் கட்டுவோம் என பாடுகிறாய் என்று கண்டித்திருக்க வேண்டாமா? பாரதி பாடியது தவறு என பாரதியார் பாடலில் உள்ள அந்த வரியை நீக்கிவிட பா.ச.க.வினர் தயாரா?

**- திருச்சி மாவட்ட பெரியார் தி.க. வெளியிட்ட துண்டறிக்கை**

## இளம்பிள்ளை கிராமத்தில் பரபரப்பாக நடந்த மந்திரமா? தந்திரமா?

சேலம் மாவட்டம் இளம்பிள்ளை கழக சார்பாக 10.10.07 மாலை 6 மணிக்கு புதிய பகுதியான தாடிக்கார னூர் என்ற ஊரில் தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. தோழர் கோகுல கண்ணன் 'மந்திரமா, தந்திரமா' நிகழ்ச்சியை நடத்திக் காட்டினார். இதனைத் தொடர்ந்து பொது மக்கள் தங்கள் சந்தேகங்களை கேட்கலாம் என அறிவிக்கப்பட்டது. அப்பகுதியைச் சார்ந்த 12 வயது முதல் 15 வயது வரையிலான சிறுவர்கள், வியக்கக் கூடிய ஏராளமான கேள்விகளை எழுப் பினர். அனைத்து கேள்விகளுக்கும் முத்துமாணிக்கம் பதில் அளித்தார். இதற்கிடையில் அப்பகுதியை சார்ந்த மூன்று இளைஞர்கள், கழகத்தில் சேர்ந்து செயல்பட விரும்புகிறோம். எங்களையும், இணைத்துக் கொள் ளுங்கள் என்று கேட்டுக் கொண்டனர். அதன் பிறகு, சாமியாடி குறி சொல் வது எப்படி? என்ற ஒரு சிறுவனின் கேள்விக்கு பதிலளித்தவுடன் அது வரை அமைதியாக இருந்த, அப் பகுதியைச் சார்ந்த, சாமியாடிக் குறி சொல்லும் இருவர், படிக்கும் மாணவர் களுக்கு இடையூறாக உள்ளது, ஒலி பெருக்கியை நிறுத்துங்கள் என்று கூறினர். மாணவர்கள் நலனில் எங்களுக்கும் அக்கறை உண்டு என்று கூறிய தோழர்கள் இப்பகுதியில் இப்போதுதான் முதன்முறையாக அதுவும் குறைவான சத்தத்தில் (ஒலி) பிரச்சாரம் செய்கிறோம். ஆனால் திரு விழா, பசனை போன்ற நிகழ்ச்சிகளால் மாணவர்களுக்கு அதிக இடையூறு ஏற்படுத்துவது, ஆன்மீகவாதிகள்தான் என்று எடுத்துரைத்தனர்.

கடவுள் இல்லை என்று நீங்கள் எப்படிச் சொல்லலாம் எனக் கேட்க, தோழர்கள் பதிலளிக்க விவாதம் நீண்டுக் கொண்டே போனது. முடிவில் அந்த இருவரும் சாமியாடி குறி சொல்வது எங்கள் தொழில், எங்கள் வருமானத்தைக் கெடுக்க பார்க்கிறீர்களே என்று கூறி முடித்துக் கொண்டனர். கழக ஆதரவாளர் தாடிக்காரனூர் ரவி நிகழ்ச்சிக்கு உறுதுணையாக இருந்தார். அதே பகுதியைச் சார்ந்த பா.ம.க. தோழர் சுப்பிரமணி, தோழர்கள் அனைவருக் கும் தேநீர் வழங்கினார்.

*பெரியார் பஞ்சாலைத் தொழிலாளர் கழகம் போராட்டம்*

# உள்ளூர் மக்களுக்கே வேலை கொடு!

21.9.07 அன்று காலை 10.30 மணிக்கு பெரியார் திராவிடர் கழகத்தின் தொழிற்சங்க அமைப்பான 'பெரியார் பஞ்சாலைத் தொழிலாளர் கழகத்தின் சார்பாக அ. கொடிவேரி பிரிவுக்கு அருகிலுள்ள "பவானி டெக்ஸ்டைல்ஸ் புராசசர்ஸ் லிமிடெட் நிறுவனம்" முன்பு, "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" அதன் நுழைவாயிலில் நடைபெற்றது.

*உள்ளூர் தொழிலாளர்களை வேலைக்கு எடு!*

*உள்ளூர் தொழிலாளர்களுக்கும் சம்பளத்தை உயர்த்து!*

*தற்காலிக தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்!*

*தொழிலாளர்கள் அனைவருக்கும் பி.எப். பிடித்தம் செய்!*

*கேம்ப் கூலித் தொழிலாளர் முறையை கைவிடு!*

*தொழிலாளர் நலச் சட்டங்களை அமுல்படுத்து!*

*வெளி மாநிலத் தொழிலாளர்களை வெளியேற்று!*

போன்ற பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெற்ற இக்கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு 'பெரியார் பஞ்சாலைத் தொழிலாளர் கழகத்தின் தலைவர் டி.ஜெயக்குமார் தலைமை தாங்கினார். ஈரோடு மாவட்ட பெரியார் திராவிடர் கழகச் செயலாளர் இராம. இளங்கோவன், மாவட்ட துணைத் தலைவர் கா.சு. வேலுச்சாமி, மாவட்ட அமைப்பாளர்



சதுமுகை பழனிச்சாமி, இரகுநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முதலில் தொழிலாளர் நலக்கோரிக்கை களை வலியுறுத்தி முழக்கங்கள் போடப் பட்டன. பின்னர் கருப்பணன், செல்வம், ரங்கசாமி, சதுமுகைப் பழனிச்சாமி, கா.சு.வேலுச்சாமி ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர்.

இறுதியாக மாவட்ட செயலாளர் தனது கண்டன உரையில், இன்னும் இரண்டு மாத கால அவகாசத்திற்குள் பவானி டெக்ஸ்டைல்ஸ் புராசசர்ஸ் நிறுவனத்தில் பணி புரிகின்ற ஒரிசா, நேபாள பகுதிகளைச் சார்ந்த தொழிலாளர்களை திருப்பி அனுப்பிவிட்டு, அவர்களுக்குப் பதிலாக உள்ளூர் தோழர்களை பணிக்கு அமர்த்த வேண்டும். முன் வைத்துள்ள கோரிக்கைகள் அனைத்தையும் நிர்வாகம் நிறைவேற்ற வேண்டும். இல்லையெனில், பெரியார் பஞ்சாலைத் தொழிலாளர் கழகம் மற்றும் பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பாக, நிறுவனம் முன்பாக 'மாபெரும் சாலை மறியல் போராட்டம் நடத்தப்படும்' என எச்சரிக்கை விடுத்தார்.

இறுதியாக டி. செயக்குமார் நன்றி கூற கண்டன ஆர்ப்பாட்டம் நிறைவுற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் உறுப்பினர்கள் மற்றும் கோபி நகர பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள், நகர அமைப்பாளர் குணசேகரன், நகரப் பொறுப்பாளர் ஜெய ராமன், மாவட்ட இளைஞரணிச் செய லாளர் சிதம்பரம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சண்முகம், கிளாகுளம் செயலளார் செந்தில்குமார், புதுரோடு முத்துசாமி உட்பட தோழர்கள் கலந்து கொண்டனர்.

## அனைத்து சாதியினர் அர்ச்சகர் ஆகும் சட்டத்தை புதுவையில் கொண்டு வருக!

தந்தை பெரியார் 129 ஆம் பிறந்த நாள் விழாப் பொதுக் கூட்டம் பெரியார் திராவிடர் கழகம் இராவணன் பகுத்தறிவு இயக்கம் கோட்டைமேடு கிளை சார்பாக, அரியாங்குப்பம் கோட்டைமேடு பகுதியில் 30.9.2007 ஞாயிறு மாலை 6 மணி அளவில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கோட்டைமேடு கிளைக் கழக பொறுப்பாளர் இரா. பெருமாள் தலைமையேற்றார். ந.ரவி, சி.சிவமுருகன், ச. தீனதயாளன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பெரியார் திராவிடர் கழக இளைஞரணி செயலாளர் செ. சுரேஷ் வரவேற்புரையாற்றினார். பொதுக்கூட்ட சிறப்புரையை திராவிட முன்னேற்ற கழகத்தின் வெளியீட்டுச் செயலர் பெரியார் கொள்கைப் பற்றாளர் திருச்சி செல்வேந்திரன், பெரியார் திராவிடர் கழகத்தின் புதுவை மாநில தலைவர் லோகு. அய்யப்பன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

தமிழர்களின் - தமிழ்நாட்டின் நூற்றாண்டு கனவான சேது சமுத்திரத் திட்டத்தை ராமர் பாலம் என்ற பொய்யைக் கூறி தடுக்க முனையும் பார்ப்பன-இந்து மதவெறி சக்திகளை வன்மை யாக கண்டிக்கின்றோம். மத்திய அரசு மதப்பூச்சாண்டிகளுக்கு பயப்படாமல், உறுதியான நடவடிக்கை மேற்கொண்டு சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக் கொள்கின்றோம்.

தமிழக முதல்வர் கலைஞருக்கு கொலை மிரட்டல் விடுத்த விசுவ இந்து பரிசத்தை சேர்ந்த பாரதிய ஜனதா கட்சி முன்னாள் எம்.பி. ராம்விலாஸ் வேதாந்தியை கடுமையான சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையிலடைக்க வேண்டுமென்றும்,

தந்தை பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளாக இருந்த அனைத்து சாதியினரும் அர்ச்சகராகும் சட்டத்தை, தமிழக அரசை பின்பற்றி, புதுச்சேரி அரசும் உரிய சட்டம் கொண்டு வந்து அனைத்து சாதியினரும் அர்ச்சகராக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கின்றோம்.

## இழப்பு 171 கோடி

*சிறீலங்காவின் எதிர்க்கட்சியான அய்க்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்சுமன் செனிவிரட்ன கடந்த 24 ஆம் தேதி பத்திரிகையாளர்கள் கூட்டத்தைக் கூட்டி, சிறீலங்கா ராணுவத்துக்கு ஏற்பட்டுள்ள இழப்புகளை விரிவாகப் பட்டியலிட்டார். விமானப் படையின் சக்தி வாய்ந்த 18 விமானங்கள் அழிக்கப்பட்டுவிட்டன என்றும், அவற்றின் மதிப்பு ரூ.1,71,00,00,000 (சிறீலங்கா பணத்தில்) என்றும் கூறி, விமானங்களின் பட்டியலையும் பெயருடன் வெளியிட்டார். இதுதவிர மேலும் மூன்று விமானங்கள் அழிக்கப்பட்டுள்ள தாகவும், அது பற்றிய முழு விவரங்கள் கிடைத்தப் பிறகு,வெளியிடுவதாகவும் கூறியுள்ளார். ஒரு பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்ற முறையில் இந்த உண்மைகளை கூறுவதாகவும், சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சகச் செயலாளரும், விமானப் படைத் தளபதியும் உடன் பதவி விலக வேண்டும் என்றும் வற்புறுத்தியுள்ளார். ராஜபக்சே குடும்பம் ஏற்படுத்திய சேதம் போதும். ஒட்டு மொத்த குடும்பமே வீட்டுக்குப் போக வேண்டும் என்றும் கூறியுள்ளார்.*

## வந்த கடிதங்கள்

**தங்க. சங்கரபாண்டியன், மணலி புதுநகர்.**

'வரம்பு மீறும் நீதிமன்றங்கள்' தலையங்கம் மிகவும் அருமை. "நாடாளுமன்றத்தின் அதிகாரம் பார்ப்பனரல்லாதவரிடம் வந்துவிட்ட நிலையில் பார்ப்பனர்கள் நீதிமன்றங்களைக் கைப்பற்றிக் கொண்டு நீதிமன்றங்கள் வழியாக தங்களது மேலாண்மையை நிலைநாட்டி வருகின்றனர்" என்று அற்புதமாய் பார்ப்பனர்களின் முகத்திரையைக் கிழித்துள்ளீர்கள்.

தீண்டாமைக்கு எதிராக களமிறங்கியது கழகம் பொங்கியெழுந்ததை நான் படித்து அடைந்த மகிழ்ச்சிக்கு ஓர் எல்லையே இல்லை. அமெரிக்கப் பிடியில் இந்தியா அணுசக்தி ஒப்பந்தத்தின் பின்னணி எழுத்தோவியம் மிகவும் அருமை.

## வாழ்க்கை துணைநல ஒப்பந்த விழா

15.9.2007 சனிக்கிழமை காலை 9 மணி அளவில் விழுப்புரம் மாவட்ட அமைப்பாளர் சி. சாமிதுரை-வி.சூரியா ஆகியோரின் வாழ்க்கை துணைநல ஒப்பந்த விழா நடைபெற்றது. முதலாவதாக மணமக்களை வாழ்த்தி விழுப்புரம் மாவட்டத் தலைவர் ப. கண்ணன், புதுவை மாநில தலைவர் அய்யப்பன், வழக்கறிஞர் சு. குமாரதேவன் ஆகியோர் பேசினர். பின் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையேற்று மண விழாவை நடத்தி வைத்தார். மணமக்கள் இருவரும் கருப்பு உடை அணிந்தே இருந்தனர். விழாவில் மாவட்ட செயலாளர் மு.வ. நடராசன், திருவண்ணாமலை மாவட்ட அமைப்பாளர் தமிழ் தாசதுரை, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் வே. செந்தில், ந. அய்யனார் உள்பட பல பகுதிகளிலிருந்தும் தோழர்கள் பங்கேற்றனர்.

# கோயில் நுழைவுப் போராட்டங்களில் திராவிடர் இயக்கங்களின் பங்களிப்பு

*'தமிழ்க்குடி அரசுப் பதிப்பகம்' புதிய நூல்களை அண்மையில் வெளியிட்டிருக்கிறது. திராவிடர் இயக்கத்தின் கொள்கைகளுக்கு வலிமை சேர்க்கும். பழைய நூல்களைத் தேடிப் பிடித்து, மறுபதிப்பு செய்துள்ள பதிப்பகத்தின் உரிமையாளர் தோழர் வாலாசா வல்லவனின் பணி பாராட்டுக்குரியது.*

**"கோயில் நுழைவுப் போராட்டங்களில் திராவிடர் இயக்கங்களின் பங்களிப்பு"** என்ற நூல் - தமிழ்நாட்டில், காங்கிரசுக்கு முன்பே சுயமரியாதை இயக்கம் தான் கோயில் நுழைவுப் போராட்டங்களை தொடங்கியது என்ற வரலாற்று உண்மையை நிறுவுகிறது. இந்தப் போராட்டத்தைத் தொடங்கி வைத்தவர்கள் நாடார் சமூகத்தினர். கி.பி.1870 இல் நங்கன்விளை எனும் ஊரில் - குமார கோயிலுக்குள் நுழையும் உரிமைக்காக வெள்ளையன் நாடார் தலைமையில் நடந்த போராட்டமே, தமிழகத்தின் முதல் கோயில் நுழைவுப் போராட்டம். அப்போது பார்ப்பனர் உயர்சாதியினர் நாடார்களைத் தடுத்தனர். மோதலில் 150 பேர் கொல்லப்பட்டனர்.

இராமநாதபுரம் ஜமீன்தார் ராஜா எம்.பாஸ்கர் சேதுபதி, நாடார்களுக்கு எதிராக தொடர்ந்த வழக்கில் மதுரை மீனாட்சி கோயிலின் எந்தப் பகுதிக்குள்ளும் நாடார்கள் நுழையக் கூடாது என்று நீதிமன்றம் தடைவிதித்தது. மாவட்ட நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து - நாடார்கள் உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். உயர்நீதிமன்றமும் தீர்ப்பை உறுதி செய்தது. பிறகு 1908 இல் லண்டனில் உள்ள 'பிரிவுக் கவுன்சிலுக்கு' நாடார்கள் வழக்கைக் கொண்டு சென்றனர். அங்கும் நாடார்களுக்கு எதிரான தீர்ப்பே கிடைத்தது. வழக்கு நடைபெற்ற நேரத்தில் நாடார்களுக்கும், மறவர்களுக்கும் நடந்த கலவரத்தில் 2000 நாடார்கள் படுகொலை செய்யப்பட்டனர். பெரியார் 1924 இல் வைக்கத்தில் போராட்டம் நடத்தி, தீண்டப்படாத மக்கள் கோயிலைச் சுற்றியுள்ள வீதிகளில் நடக்கும் உரிமையைப் பெற்றார். அதற்கு முன்பே, 1800 இல் வைக்கம் கோயிலுக்குள் நுழைய, ஈழவர்கள் போராடியபோது பார்ப்பனர்களும் உயர்சாதியினரும், அவர்களைக் கொன்று, கோயிலுக்கு அருகே உள்ள குளத்தில் புதைத்தனர். 1917 ஆம் ஆண்டிலேயே நீதிக்கட்சி நாடார்களின் கோயில் உரிமைக்கு குரல் கொடுத்தது. 1926 இல் பெரியார் கூட்டிய முதல் சுயமரியாதை இயக்க மாநாட்டிலேயே டபிள்யூ பி.ஏ. சவுந்தரபாண்டியன் தலைமையில் சுயமரியாதை சத்தியாகிரகக் குழு அமைக்கப்பட்டது. சுயமரியாதை இயக்கத்தின் முதல் கோயில் நுழைவுப் போராட்டம் 1927 இல் திருவண்ணாமலை கோயிலில் 'திராவிடன்' ஆசிரியர் கே.எஸ்.கண்ணப்பர் தலைமையில் நடந்தது. தாழ்த்தப்பட்டவர்களை அவர் கோயிலுக்குள் அழைத்துச் சென்றார். இந்த வழக்கு ஓராண்டு நடந்தது. இறுதியில் - பார்ப்பன அர்ச்சகர்களுக்கு, அபராதம் விதித்து, நீதிமன்றம் தீர்ப்பளித்தது. 'கண்ணப்பருக்கு ஜே' என்ற முழக்கங்கள், திருவண்ணாமலை முழுதும் எதிரொலித்தன. மதுரை, மயிலாடுதுறை, திருச்சி, கோயில் களிலும் சுயமரியாதை இயக்கம் கோயில் நுழைவுப் போராட்டங்களை நடத்தியது. இந்தப் போராட்டம் மராட்டிய மாநிலம் புனா விலும் எதிரொலித்தது. அங்கே 1929 இல் தாழ்த்தப்பட்டோர் கோயில் நுழைவுப் போராட்டம் நடத்தினர். அந்தப் போராட்டத்தை ஆதரித்து சென்னையில் சுயமரியாதை இயக்கம் பொதுக் கூட்டம் நடத்தியது. சவுந்தரபாண்டியன் தலைமையில் பெரியார், சிவராஜ் உள்ளிட்ட பலரும் பேசினர்.

1932 ஆம் ஆண்டில் சென்னை கபாலீசுவரன் கோயிலிலும், திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயிலிலும் சுயமரியாதை இயக்கம் தாழ்த்தப்பட்டோரைத் திரட்டி கோயில் நுழைவுப் போராட்டத்தை நடத்தியது. டி.வி. சுப்பிரமணியம் (திராவிடன் ஆசிரியர்), திருஞானசம்பந்தம் ஆகியோர் வழி நடத்தினர். லண்டன் வட்டமேஜை மாநாட்டில் அம்பேத்கர் வாதாடிப் பெற்ற தாழ்த்தப்பட்டோருக்கான 'இரட்டை வாக்குரிமையை' உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி ஒழித்த காந்தியார், தாழ்த்தப்பட்ட மக்களை ஏமாற்ற கோயில் நுழைவுப் போராட்டத்தை அறிவித்தார். சுயமரியாதை இயக்கத்தின் கோயில் நுழைவு 1927லேயே தொடங்கிவிட்டது. 1932இல் சென்னை சட்டமன்றத்தில் டாக்டர் சுப்பராயன் கோயில் நுழைவு மசோதாவைக் கொண்டு வந்தபோது, அதை நீதிக்கட்சி உறுப்பினர்கள் ஆதரிக்க வேண்டும் என்று பெரியார் அறிக்கை வெளியிட்டார்.

1922 ஆம் ஆண்டு திருப்பூர் காங்கிரஸ் மாநாட்டில் - 'தீண்டாதார் ஆலயப் பிரவேச' தீர்மானம் வந்தபோது அதை எதிர்த்தவர் மதுரை வைத்தியநாதய்யர். பின்னர் 1939 இல் இவர்தான் மதுரை மீனாட்சி கோயிலில் கோயில் நுழைவுப் 'போராட்டம்' நடத்தினார். இந்தப் போராட்டத்தில் அரங்கேறிய நாடகங்களை 'விடுதலை' நாளேடு அம்பலப்படுத்தியது.

உண்மையில் தாழ்த்தப்பட்டோருக்கு முழுமையாகக் கோயில் திறந்து விடப்பட்டது. 1947 இல் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் ஆட்சியில்தான் - இது போன்று ஏராளமான வரலாற்றுத் தகவல்களைக் கொண்டு வெளிவந்துள்ளது இந்த நூல். 1929 இல் ஈரோட்டில் நடந்த கோயில் நுழைவுப் போராட்டம் தொடர்பான வழக்கு விசாரணையை முழுமையாகப் பதிவு செய்திருப்பது இந்நூலின் சிறப்பாகும். எளிதில் கிடைக்கப் பெறாத 'திராவிடன்' நாளேடுகளிலிருந்து இத்தகவல்களை நூலாசிரியர் வாலாஜாவல்லவன் திரட்டி, மறைக்கப்பட்ட திராவிடர் இயக்கத்தின் பண்பாட்டுப் புரட்சிகளை வெளிக் கொண்டு வந்திருக்கிறார். திராவிடர் இயக்கத்தின் சிறந்த வரலாற்று ஆவணமாக இந்நூல் வெளிவந்துள்ளது.

ஆசிரியர் : வாலாஜா வல்லவன். வெளியீடு: தமிழ்க்குடி அரசுப் பதிப்பகம் 14/12 மியான் முதல் தெரு, சேப்பாக்கம், சென்னை-600005. பக்.264-விலை: ரூ.120

**ஆதி திராவிடர்களின் பூர்வீக சரித்திரம் :** கோபால செட்டியார் என்ற சென்னை ஆங்கில பத்திரிகையாளர் 1920 ஆம் ஆண்டில் எழுதி வெளியிட்ட நூல் இது. தாழ்த்தப்பட்டவர்களின் கீழான நிலைக்கு பார்ப்பனர்களே காரணம் என்பதை தக்க சான்றுகளுடன் நூலாசிரியர் எழுதியுள்ளார். 'பறையர்' என்பது பறையடிக்கும் தொழில் பெயராகவே இருந்து வந்தது. 11வது நூற்றாண்டிலிருந்த ராஜ ராஜசோழன் காலம் வரை 'பறையர்' என்ற சொல் தமிழ் நூலிலோ, ஆவணங்களிலோ கிடையாது. கி.பி.11 ஆம் நூற்றாண்டில்தான் இது சாதிப் பெயரானது பவுத்தமும் - சமணமும் வீழ்த்தப்பட்டு பார்ப்பனர் ஆதிக்கம் நிலவியபோது, 'பறையர்' என்று பிரித்து கொடூரமான சாதிக் கொடுமைகளைத் திணித்தனர் என்று நூலாசிரியர் சுட்டிக் காட்டுகிறார். பக். 48 விலை : ரூ.20

**பன்னீர்செல்வம் அல்லது லட்சியவாதி:** குத்தூசி குருசாமி 1960 ஆம் ஆண்டில் திருவாரூரில் சிறையில் இருந்தபோது திருவாரூர் கழகத் தோழர் அ.முத்துகிருட்டிணன் கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்து சிறையிலேயே எழுதிய நாடகம். பக்: 64 விலை: ரூ.30

**குஞ்சிதம் குருசாமியின் சொற்பொழிவுகள் :** 1932-33 ஆம் ஆண்டுகளில் சுயமரியாதை மாநாடுகளில் குஞ்சிதம் அம்மையார் ஆற்றிய அறிவார்ந்த உரைகளின் தொகுப்பு. நீதிக்கட்சித் தலைவர்கள் சிலர், பார்ப்பனர்களையும், கட்சியில் நிர்வாகக் குழுவில் சேர்த்து, ஜனநாயக உணர்வை வெளிப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துவதற்கு சரியான பதில் தருகிறார் குஞ்சிதம். அப்படியே பார்ப்பனர்களை நீதிக்கட்சியில் சேர்த்துவிட்டால், அதன் பிறகு பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதாரை கோயில் கர்ப்பகிரகத்திலும், அக்கிரகாரத்திலும் சேர்ப்பார்களா என்பதே அக்கேள்வி? நமது முற்போக்கு கொள்கைகளுக்கு பார்ப்பனர்கள் ஆதரவாக வரும் காலம் வரை - பார்ப்பனரை விலக்கி வைப்பதே சரி என்று கூறுகிறார். பக்.80 விலை: ரூ.30

**அகத்தியர் ஆராய்ச்சி :** தமிழறிஞர் க. நமச்சிவாயர் 1929 ஆம் ஆண்டில் 'அகத்தியர் வெறும் கட்டுக்கதை' எனும் தலைப்பில் நிகழ்த்திய ஆய்வுரை. இந்த உரை 1929 இல் செங்கல்பட்டில் நடந்த முதலாவது சுயமரியாதை மாநாட்டையொட்டி, 'திராவிடன்' இதழ் வெளியிட்ட சிறப்பு மலரில் கட்டுரையாக இடம் பெற்றிருந்தது. தமிழை அகத்தியன் தான் உருவாக்கினான் என்ற பார்ப்பனக் கட்டுக்கதையை ஆதாரங்களுடன் மறுத்து அகத்தியன் என்றே ஒருவன் இருந்த தில்லை என்று நூலாசிரியர் நிறுவியுள்ளார். பக்.64 விலை: ரூ.30

*(மேற்குறிப்பிட்ட நூல்கள் தமிழ்க் குடிஅரசு பதிப்பக வெளியீடுகள் ஆகும்)*

**பெரியார் சிந்தனைச் சிறுகதைகள்:** ஆசிரியர் நாத்திகம் இராமசாமி 1958 முதல் 1960 வரை நாத்திகம் வார இதழில் வெளிவந்த பகுத்தறிவு சிறுகதைகள் - சிறு நாடகம் - உரையாடல்களின் தொகுப்பு நூலாக வெளி வந்திருக்கிறது.

இளைஞர்களை பகுத்தறிவாளர்களாக மாற்றுவதற்கு உரிய சிறந்த நூல். இளம் தலைமுறையினரிடையே இந்த நூலைப் பரப்பி படிக்கச் செய்ய வேண்டும்.

பக். 224 விலை : ரூ.90

**வெளியீடு :** 'நாத்திகம்', 97/55 என்.எஸ்.கிருஷ்ணன் சாலை, கோடம்பாக்கம், சென்னை-600 024.

**சிதம்பரம் கோயில் சில உண்மைகள்:** தீட்சதப் பார்ப்பனர்களின் பிடிக்குள் சிக்கியுள்ள சிதம்பரம் கோயில் தொடர்பாக நடந்த வழக்குகள், தீர்ப்புகள் நூலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

சிதம்பரம் நடராசன் கோயில் தீட்சதர்களின் தனிச் சொத்து என்பதை நீதிமன்றங்களே ஏற்கவில்லை என்பதை எடுத்துக் காட்டி, கோயிலை அரசின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும் என்று வலியுறுத்துகிறார், நூலாசிரியர் 'சிகரம்' செந்தில் நாதன். கருத்துகள் எளிமையாக சொல்லப்பட்டிருப்பது நூலின் தனிச் சிறப்பு.

**வெளியீடு:** சிகரம், ஏ-1, அருணாச்சலம் அடுக்ககம், 1077 முனுசாமி சாலை, கே.கே.நகர், சென்னை-600 078. பக்:64, விலை : ரூ.25

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு வந்து, விமானப் படையின் துப்பாக்கிகளைப் பயன்படுத்தியே அவர்களது விமானங்களைத் தகர்த்தவர்.

(படம் 4 ஆம் பக்கம்)

படைத் தளத்தை புலிகளிடமிருந்து மீட்க படையினர் விரைந்தபோது, விடுதலைப்புலிகளின் விமானத் தாக்குதல் அவர்களைப் பின் வாங்கச் செய்தது. ஆள் இல்லாத உளவு விமானம், படைத்தளத்தில் எவருக்கும் தெரியாமல் மறைவான பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததை கடைசியாகக் கண்டறிந்த லெப்டினன்ட் கேணல் வீமன், அதை குண்டுவீசி அழித்தார். அந்த வெடி சத்தத்தை, தகவல் தொடர்புக் கருவியின் வழியாக நாங்கள் கேட்க முடிந்தது.

தலைமை தாங்கிய லெப்டினன்ட் கேணல் இளங்கோ காலை 8.30 மணிக்கே காயமடைந்தாலும், தாக்குதலை நிறுத்தாமல் தொடர்ந்தார். 1995 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தில் அவர் சேர்ந்தார். 2000 ஆம் ஆண்டில் நடந்த 'ஆனைஇரவு' தாக்குதலில் இவரது பங்கு மகத்தானது. 14 ராணுவத் தாக்குதலில் இவர் களம் கண்டவர். கரும்புலிகள் பட்டியில் தன்னை இணைத்துக் கொள்ள வேண்டும் என்று கடந்த 9 ஆண்டு காலமாக தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். கடைசியாக கடந்த 2006 ஆம் ஆண்டில்தான் அவருக்கு இந்த உயிர்த் தியாகப் படையில் சேரும் வாய்ப்பு வழங்கப்பட்டது. வீரமரணமடைந்த அனைவரும் இந்த மரணத்தை விரும்பி ஏற்றுக் களம் புகுந்தனர். "எங்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம், போராட்டம் தொடர வேண்டும் என்பதே அவர்களின் வேண்டுகோளாக இருந்தது. இந்த தாக்குதலுக்கு முழுமையாகத் திட்டங்களை வகுத்துத் தந்தவர், தமிழ் ஈழத் தேசியத் தலைவர் பிரபாகரன் தான்" என்று கூறினார் கலைக்கோடன். 'தமிழ்நெட்' இணையதளம் இதை வெளியிட்டுள்ளது.

**அடுத்த இதழில்...**


பொள்ளாச்சியில் சாதி வெறியர்கள் கழகத்தினர் மீது வன்முறை.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர்,
சென்னை-41. ✆ 2451 2857

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 31st october 2007

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




புரட்சிப்
# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2038 நவம்பர் 08, 2007 புரட்சி 5 முழக்கம் 45 விலை : ரூ.2.50


## பிரிகேடியர் சுப. தமிழ்ச்செல்வனுக்கு சென்னையில் பெரியார் திராவிடர் கழகம் நடத்திய வீரவணக்கம்

# இந்தியா இலங்கைக்கு இராணுவ உதவி செய்வதை எதிர்த்து கையெழுத்து இயக்கம்



*சிறிலங்காவுக்கு இந்திய அரசு இராணுவ உதவிகள் வழங்குவதை நிறுத்த வலியுறுத்தி தமிழ்நாடு முழுவதும் கையெழுத்தியக்கத்தை பெரியார் திராவிடர் கழகம் தொடங்கியுள்ளது.*

சென்னையில் நவ.6 ஆம் தேதி நடைபெற்ற பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட போராளிகளின் வீரவணக்க நிகழ்வில் கையெழுத்து இயக்கம் தொடங்கப்படுவதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பெரியார் திராவிடர் கழகத்தின் தலைவர் கொளத்தூர் தா.செ. மணி தலைமையில் இந்நிகழ்வு நவ.6 மாலை 6 மணியளவில் சென்னை தியாகராயர் நகரில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பெரியார் தி.க. தலைவர் கொளத்தூர் தா.செ. மணி, தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன், பெரியார் தி.க. பொதுச்செயலாளர் விடுதலை க. இராசேந்திரன், இயக்குநர் சீமான், பத்மநாபன் (த.தே.பொ.க), ஓவியர்கள் வீர. சந்தானம், புகழேந்தி, இயக்குநர் கௌதமன், தேனிசை செல்லப்பா உள்ளிட்டோர் உரையாற்றினர்.

வீரவணக்கக் கூட்டம் உணர்ச்சிப்பூர்வமாக நிகழ்ந்தது. தியாகராயர் நகர் சி.டி. நாயகம் மேல்நிலைப்பள்ளி அரங்கில் நடந்த கூட்டத்தில் கூட்டம் நிரம்பி வழிந்தது.

மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சி செயலாளர் வே. ஆனைமுத்து பேசுகையில், இந்தியாவில் நடைபெறும் ஆட்சிகள் எதற்குமே கொள்கையோ இலக்கணங்களோ இல்லை. எத்தனையோ பேரணிகள், உண்ணாவிரதப் போராட்டங்களில் சிறிலங்காவுக்கு உதவி செய்யாதே என்று இந்திய அரசுக்கு கோரிக்கை வைத்துப் பார்த்துவிட்டோம். ஆனால் நம்முடைய குரல் ஓங்கி ஒலித்தால்தான் தில்லிக்காரன் காதில் கொஞ்சமாவது விழும். ஆகையால் கிராமங்கள் தோறும் இதற்கான பரப்புரைகளை மேற்கொள்ள வேண்டும். கிராமங்களில்தான் மக்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு கிராமமாகச் சென்று நாம் இந்தப் பரப்புரையை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

வழக்கறிஞர் அஜீதா பேசுகையில்,

ஈழ மண்ணில் தங்களுடைய உயிரை துச்சமாக மதிக்கும் இயக்கம் இதயமாக வேலை செய்த மகனை இழந்துவிட்ட துயரில் உள்ளது.

சர்வதேச வரையறைகளின்படி தேசம் என்பதே தேசிய இனம்தான். ஆனால் இந்தியாவில் மட்டும்தான் தேசியம், தேசம் என்றால் பல தேசிய இனங்களின் சிறைக்கூடம் என்று திரிபுவாதமாகிவிட்டது. ஐக்கிய நாடுகள் சபையின் 1961ஆம் ஆண்டு பிரகடனங்களின்படி ஒவ்வொரு தேசிய இனமும் தேசமும் சுயநிர்ணய உரிமை கொண்டவையாக ஏற்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தியா இந்த சரத்தை மட்டும் ஏற்காமல் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டிருக்கிறது. தமிழீழ மக்களின் அடிப்படை அரசியல் உரிமையான சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும் என்று தமிழ்த் தேசியம் பேசுகிற நாம் ஒற்றுமையாக குரல் கொடுப்பதுதான் மறைந்த சு.ப.தமிழ்ச்செல்வனுக்கு நாம் செலுத்தும் அகவணக்கம் ஆகும் என்றார்.

### கொளத்தூர் தா.செ. மணி

பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வனின் படத்தை திறந்து வைத்து கழகத் தலைவர் கொளத்தூர் தா.செ. மணி பேசியதாவது:

சு.ப. தமிழ்ச்செல்வன் மற்றும் அவரோடு மறைந்த தோழர்களுக்கு எமது வீரவணக்கங்கள்.

தமிழீழ விடுதலைப் போரில் முதல் களப்பலியான சத்தியநாதனின் முதலாமாண்டு நினைவு சுவரொட்டி வெளியிட்டபோதே ஒவ்வொரு தோழர்கள் சாகிறபோதும் நாங்கள் இரத்தக் கண்ணீர் வடிக்கிறோம் - ஆனால் இரத்தம் சிந்தாமல் விடுதலை இல்லை என்று விடுதலைப் புலிகள் பதிவு செய்தனர்.

பிரபாகரனின் நெஞ்சில் நிறைந்த சீலன் இறந்தபோதும் போராளிகள் மட்டும் நடத்திய போரை பொதுமக்களையும் இணைத்து நடத்திய பண்டிதர் இறந்த போதும் இந்தியாவின் நயவஞ்சகத்தால் குமரப்பாவும் புலேந்திரனும் கொல்லப்பட்டபோதும் கப்பலோட்டிய தமிழனைப்போல்

விமானம் ஓட்டிய தமிழனாக சங்கர் மறைந்தபோதும் திலீபன், கிட்டு, பாலசிங்கம் மறைந்த போதும் கவிழ்த்த துப்பாக்கியையும் அதன்மீது தொப்பியையும் வைத்து "அழுவதற்காக அமைக்கப்பட்ட சமாதி அல்ல உறுதியின் உறைவிடம் இது" என்று எழுதியவர்கள் புலிகள்.

இப்போது சமரசப் பேச்சுவார்த்தைக்குத் தலைமையேற்ற ஒரு அரசியல் தலைவனை குறிபார்த்து குண்டு வீசினோம் என்று சிங்களம் ஒப்புக் கொண்டிருக்கிறது. அதுவும்

(4 ஆம் பக்கம்)

### இலங்கை தூதரகம் முன் மறியல்: கழகத்தினர் கைது

*போர் நெறிமுறைகளை மீறி தமிழர்களை படுகொலை செய்து வரும் சிறீலங்காவின் தூதரகத்துக்கு முன் மறியல் நடத்தச் சென்ற பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் நவம்பர் 7 ஆம் தேதி காலை 11 மணியளவில் கைது செய்யப்பட்டனர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் சென்னை சோவியத் கலாச்சார மய்யத்தின் அருகிலிருந்து சிறீலங்கா தூதரகம் நோக்கி கண்டன முழக்கங்களோடு தோழர்கள் புறப்பட்டுச் சென்றபோது தூதரகம் அருகே தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.*

*தலைவர் கொளத்தூர் மணி, கழகப் பொறுப்பாளர்கள் ஆனூர் செகதீசன், வழக்கறிஞர் துரைசாமி, வழக்கறிஞர் இளங்கோ, தபசி குமரன், கேசவன், டேவிட் பெரியார் மற்றும் திருச்சி சவுந்தரராசன், இளவழகன், தென்னரசு உட்பட 120 பேர் கைது செய்யப்பட்டனர்.*

**நவம்பர் 26 இல் இரட்டைக் குவளை உடைப்புப் போராட்டம் செய்தி உள்ளே...**

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 08.11.2007**

# நவம்.26 இல் இரட்டைக் குவளை உடைப்பு: ஒட்டன்சத்திரம் நோக்கி திரளுவீர்!

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிக்கை

அன்பார்ந்த தோழர்களே!

சமத்துவ சமுதாயம் அமையத் தடையாயிருக்கும் சாதியத்தை அழிக்கும் நடவடிக்கைகளின் தொடக்கமாக முதலில் சமுதாயத்தில் நிலவும் தீண்டாமைக் கொடுமைகளுக்கு முடிவு காண்பதுவே தொடக்கமாக இருக்க முடியும்.

தீண்டாமைக் கொடுமைகள் உடன் அமர்ந்து உண்ணுவதற்கும், பொது நீர் நிலைகளில் நீர் எடுப்பதைத் தடுத்தல், பொதுக் கோவில்களில் வழிபடுவதைத் தடுத்தல், என பல வகைகள் நிலவத்தான் செய்கின்றன. ஆனால் பொது உணவகங்களில்கூட உரிய விலை கொடுத்து வாங்கப்படும் தேனீரைக்கூட பொதுவான குவளைகளில் கொடுக்க மறுத்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மட்டும் என தனியாக வைக்கப்பட்டிருக்கும் அலுமினியம் (அ) கண்ணாடிக் குவளைகளில் கொடுக்கும் அவலம் ஏறத்தாழ தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் கிராமப்புறங்களில் பரவலாகக் காணப்படுகிறது.

இலவசமாக பெறும் உரிமை உடைய நீர் எடுத்தல், வழிபாடு என்பவற்றைவிட எல்லோரையும்போல உரிய விலை கொடுத்துப் பெறப்படும் தேனீர் வழங்கலில் காட்டப்படும் பாகுபாடு முதலில் களையப்பட வேண்டும் என்ற நோக்கில் பெரியார் திராவிடர் கழகம் இரட்டைக் குவளை உடைப்புப் போராட்டத்தை அறிவித்தது.

தீண்டாமை வழக்குகளை எதிர்கொள்வதற்காக சாதி ஆதிக்கவாதிகள் 'பண்டு' கிராமம் என்ற பேரால் பெரு நிதி திரட்டி வைத்துக் கொள்ளும் முறை பின்பற்றப்படும் திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள ஒட்டன்சத்திரம் பகுதிகளில் 2007 ஏப்ரல் மாதத்தில் மாவட்ட கழகத் தோழர்களால் கிராமப் பிரச்சாரம் நடத்தப்பட்டது. வாகரை என்ற ஊரில் கழகத் தோழர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலையும், அது குறித்தப் புகாரைக்கூட ஆளும் கட்சி அரசியல் தலைவர்களுக்கு பயந்து காவல் துறை வாங்க மறுத்தது.

அதன் தொடக்கமாய் கழகத் தோழர்கள் தங்கள் வாய்ப்புக்கேற்ப தனிக்குவளை முறை இருக்கும் கடைகளின் பட்டியலை தயாரித்து அளித்ததை கழக ஏடான 'புரட்சிப் பெரியார் முழக்க'த்தில் வெளியிட்டோம்.

இரட்டைக் குவளை முறை செறிந்து காணப்படும் மேற்கு மாவட்டங்களில் பரப்புரைப் பயணமும் நடத்தப்பட்டது.

அறுபதாம் விடுதலை நாளாக பீற்றிக் கொள்ளப்பட்ட 15.8.2007 அன்று நடத்துவதாக அறிவித்த இந்தப் போராட்டம், கணக்கெடுப்புக்காகவும், அரசுத் துறைகளுக்கு போதிய கால அவகாசம் தருவதற்காகவும் 2.10.2007க்கு தள்ளி வைக்கப்பட்டது.

தேநீர் கடைக்காரர்கள் வழக்குகளிலிருந்து தப்பவும், சில இடங்களில் காவல்துறையினர் குறைந்தபட்சம் போராட்ட நாள் வரையாவது இரட்டைக் குவளையைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தியதன் விளைவாக சில இடங்களில் கைவிடப்பட்டது. பல இடங்களில் ஒருமுறை பயன்படும் பிளாஸ்டிக் குவளையாக மாற்றிக் கொண்டன.

அதன் பின்னரும் தொடர்ந்து இரட்டைக் குவளையை பின்பற்றி வரும் கடைகளை உடைக்கப் போன தோழர்களை ஆணவத்தோடு காவல்துறை கைது செய்து, இரட்டைக் குவளை முறை தொடர்ந்து நடக்க உதவியது.

இந்த நிலையில்தான் தீண்டாமை ஒழிப்புக்காகவே இயங்கி வரும் காவல்துறையின் ஐ.ஜி. திரு.பிரதீப் வி.பிலிப் என்பவர் இரட்டைக் குவளை தமிழ்நாட்டில் எங்கும் இல்லை என்று அறிவித்ததோடு மட்டும் இல்லாமல் ஆதாயத்துக்காக சில அமைப்புகள் இரட்டைக் குவளை என்று செய்திகளைப் பரப்புவதாக திமிருடன் தெரிவித்தார்.

அறிவிப்புக்குப் பின்னர் தேனி மாவட்டத்தில் அருந்ததியர் ஜனநாயக முன்னணியும், ஆதித் தமிழர் பேரவையினரும் இரு இடங்களில் இரட்டைக் குவளைகளை உடைத்த செய்தி உடைக்கப்பட்ட குவைளகளுடன் செய்தித் தாள்களில் வெளிவந்தன.

அதன் பின்னரும் காவல்துறையைத் தன் கையில் வைத்திருக்கும் முதலமைச்சரின் மவுனம் நீடிக்க, அதே காவல்துறை அதிகாரி ஆதாயம் பெறும் அமைப்புகள் இப்படி செய்தி பரப்புகிறார்கள் என்றும், இவர்களிடமிருந்து மக்களைக் காப்பாற்ற வேண்டியுள்ளது என்றும் ஆணவத்துடன் திரும்பவும் கூறியிருக்கிறார்.

ஆதாயம் பெறும் அமைப்புகளைப் பற்றி அழகாக அறிக்கை கொடுத்துவிட்டு, இல்லாத இரட்டைக் குவளை முறைக்கு சுமூக தீர்வு காண தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் 72 லட்ச ரூபாய்கள் நிதி ஒதுக்கி சமத்துவ தேனீர் விருந்து நடத்த இருப்பதாக வேறு அறிவித்துள்ளார். ஆதாயம் யாருக்கோ தெரியவில்லை.

இந்த நிலையில்தான் நமது கழகத் தோழர்களும், ஆதித் தமிழர் பேரவை போன்ற அமைப்புகளும் இரட்டைக் குவளை கடைகளை பட்டியல் எடுத்து வெளியிட்டு வருகிறோம்.

பெரியார் திராவிடர் கழகத்தின் மாணவர் பிரி[ அமைப்பாளராகிய கோவை சட்டக் கல்லூரி மாணவத் தோழர் கோவை பன்னீர்செல்வம் குறும்படமாக இக் கோரிக்கைகளை வெளிப்படுத்த எடுத்துள்ளமை குறித்த செய்திகள் ஆங்கில ஏடான இந்தியன் எக்ஸ்பிரஸ் மற்றும் குமுதம் ரிப்போர்ட்டிலும் வெளியிட்டுள்ளனர். ஆனந்தவிகடன் ஏட்டிலும் நேரடியாக சென்று சேகரிக்கப்பட்ட செய்திகளுடன் இரட்டைக் குவளை பற்றிய செய்திக் கட்டுரையும் வெளிவந்தது.

அதன் பின்னரும் திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் பகுதிகளிலும், ஈரோடு மாவட்டம் தாராபுரம், குண்டடம் பகுதியிலும் தொடர்ந்து இரட்டைக் குவளை முறை உள்ளதை பட்டியலுடன் மாவட்ட ஆட்சித் தலைவர், காவல் துறை கண்காணிப்பாளர், இரட்டைக்குவளையே இல்லை என்று கூறிய ஐ.ஜி. பிரதீப் வி.பிலிப் ஆகியோருக்கு அனுப்பபட்டது.

பெரியாரின் ஆணைக்கேற்ப சட்டம், சிறை பற்றி அஞ்சாமல் சாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவுகளை எரித்து 26.11.1957 இல் பெரியார் தொண்டர்கள் சிறையேகினார்கள், அதன் 50வது ஆண்டான 26.11.2007 அன்று ஒட்டன் சத்திரப் பகுதியில், ஒத்த கருத்துடைய அமைப்புகளின் துணையோடு இரட்டைக்குவளைப் போராட்டம் நடத்த பெரியார் திராவிடர் கழகம் முடிவு செய்துள்ளது.

இந்த நிலையில், தீண்டாமை ஒழிப்புக்கென்றே மக்கள் பணத்தில் சம்பளம் பெறும் காவல்துறையும், அரசு அதிகாரிகளும், காவல் துறையை தன் கையில் வைத்திருக்கும் பெரியார் அண்ணா ஆட்சி நடத்துவதாக கூறப்படும் கலைஞரும் விழித்தெழுந்து கடமையாற்ற வேண்டும் என்று வற்புறுத்துகிறோம்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் ஒட்டன் சத்திரத்தக்கு வந்து குவிந்து போராட்டத்தை வெற்றிபெறச் செய்ய வேண்டுமெனவும் அன்புரிமையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

# ஒட்டன்சத்திரம் பகுதியில் தொடரும் இரட்டைக் குவளை தீண்டாமை

*அதிகாரிகளுக்கு கழக சார்பில் அனுப்பியுள்ள பட்டியல்:*

**பெரிய கோட்டை**

1. பஞ்சலிங்கம் டீக்கடை
2. செந்தப்பத்தேவர் டீக்கடை
3. துரைராசு டீக்கடை
4. இராசம்மாள் டீக்கடை
5. நாகராஜ் டீக்கடை
6. சின்னத்தம்பி டீக்கடை
7. சங்கரய்யர்(எ)இராமசாமி டீக்கடை
8. நாச்சம்மாள் டீக்கடை
9. சோழராஜ் டீக்கடை ரெட்டியபட்டி
10. திருநீர் இராமசாமி டீக்கடை ரெட்டியபட்டி
11. மணி ஆசாரி டீக்கடை சின்னக்கரட்டுப்பட்டி
12. பசுங்கிளி டீக்கடை கந்தப்பக்கவுண்டன் வலசு
13. குட்டி (எ) பழனிச்சாமி டீக்கடை

**கந்தப்பக்கவுண்டன் வலசு**

**வடகாடு**

14. அண்ணாச்சி டீக்கடை பால்கடை
15. மணி டீக்கடை பால்கடை
16. ஆறுமுகம் டீக்கடை பள்ளிக்கூடம், வடகாடு
17. பெரியசாமி டீக்கடை வண்டிப்பாதை, வடகாடு
18. சவடமுத்து டீக்கடை புது அத்திக்கோம்பை

**சக்கம்பட்டி, அம்பிளிக்கை**

19. சின்ராசு டீக்கடை
20. செல்லம்மாள் டீக்கடை
21. தங்கவேல் டீக்கடை
22. நடராஜ் டீக்கடை
23. குபேந்திரன் டீக்கடை பெத்தேல்புரம், வடகாடு
24. குணசேகரன் டீக்கடை பெத்தேல்புரம், வடகாடு
25. கோபால் டீக்கடை முத்து நாயக்கன் பட்டி.
26. வைரமுத்து டீக்கடை முத்துநாயக்கன் பட்டி
27. இலட்சுமி டீக்கடை முத்துநாயக்கன்பட்டி

**கள்ளிமந்தையம் - அம்மாபட்டி**

28. கருப்புச்சாமி டீக்கடை
29. முத்துச்சாமி டீக்கடை
30. மயிலாத்தாள் டீக்கடை

**கரியாம்பட்டி**

31. வீராச்சாமி டீக்கடை
32. சுரே' டீக்கடை
33. சின்னப்பன் டீக்கடை
34. பெரியப்பன்
35. இராமசாமி டீக்கடை
36. பண்ணாடி டீக்கடை
37. கவுண்டர் டீக்கடை கழுத்தறுக்கான்பாளையம்

**ஓடைப்பட்டி - அம்பிளிக்கை**

38. பெரியபொன்னையன் டீக்கடை
39. செங்கோட்டை டீக்கடை
40. குருசாமி டீக்கடை.
41. செல்லி(எ)செல்லம்மாள் டீக்கடை
42. செல்லமுத்து டீக்கடை

**பெரிய மண்டவாடி**

43. தேவர் டீக்கடை.
44. கவுண்டர் டீக்கடை
45. ஈஸ்வரன் முனியாண்டி விலாஸ் சிந்தலப்பட்டி
46. பழனிச்சாமி, சிந்தலப்பட்டி
47. கவுண்டர் டீக்கடை இராம பட்டிணம் புதூர் சத்திரப்பட்டி

**இடையகோட்டை**

48. பெரியசாமி டீக்கடை பி.என்.கல்லுப்பட்டி
49. மலைக்காரர் டீக்கடை பி.என்.கல்லுப்பட்டி
50. நீலியம்மாள் டீக்கடை பி.என்.கல்லுப்பட்டி
51. கனகராஜ் டீக்கடை அம்மாபட்டி
53. பாப்பாத்தி டீக்கடை சுமைதாங்கி, தேவத்தூர்
54. கணேசன் டீக்கடை புது அத்திக்கோம்பை

**பொருளூர், கள்ளிமந்தயம்**

55. ஆண்டாள் டீக்கடை
56. சின்னச்சாமி டீக்கடை
57. கவுண்டப்பன் டீக்கடை
58. முத்து விலாஸ் டீக்கடை
59. முத்துக்கல்யாணி டீக்கடை
60. இரேணுகா டீக்கடை
61. மகாலட்சுமி டீக்கடை
62. வளர்மதி டீக்கடை
63. உதயம் டீக்கடை
64. கண்ணன் டீக்கடை

**கள்ளிமந்தயம்**

65. செல்வம் டீக்கடை ஐ. வாடிப்பட்டி
66. பெரியசாமி டீக்கடை கோ.கீரனூர்
67. குத்திலிப்பைக்காரர் டீக்கடை கோ.கீரனூர்
68. மணியன் டீக்கடை கோ.கீரனூர்
69. சாமிநாதன் டீக்கடை நால்ரோடு
70. செந்தில் டீக்கடை நால்ரோடு
71. கவுண்டாத்தாள் டீக்கடை பெருமாள்கோவில் வலசு
72. மல்லீஸ்வரன் டீக்கடை பெருமாள்கோவில் வலசு

**ஈசக்காம்பட்டி**

73. நடராசு டீக்கடை
74. மாரிமுத்து டீக்கடை
75. காளிதாசு டீக்கடை

**அப்பனூத்து – கீரனூர்**

76. நாட்டுத்துரை டீக்கடை குமாரசாமிக்கவுண்டன் வலசு
77. செந்தில் டீக்கடை
78. மணி டீக்கடை
79. தங்கராசு டீக்கடை

**புங்கமுத்தூர் - கீரனூர்**

80. பொன்னாத்தாள் டீக்கடை
81. ஈஸ்வரமூர்த்தி டீக்கடை
82. வரதராசன் டீக்கடை பருத்தியூர் - கீரனூர்
83. சிற்றரசி வடபருத்தியூர் - கீரனூர்
84. பராசக்தி டீக்கடை திருவாண்டபுரம் - கீரனூர்
85. கவுண்டர் டீக்கடை திருவாண்டபுரம் - கீரனூர்

**தேவத்தூர் - அம்பிளிக்கை**

86. துரைச்சாமி டீக்கடை
87. பி.பி.சின்னச்சாமி டீக்கடை
88. கருப்புச்சாமி டீக்கடை
89. மொட்டையப்பன் டீக்கடை
90. செல்வன் டீக்கடை
91. பண்டாரம் டீக்கடை

**சாமியார் புதூர் - சத்திரப்பட்டி**

92. நல்லதம்பி டீக்கடை
93. நடுக்கடை டீக்கடை
94. இராமன் டீக்கடை
95. முருகேசு டீக்கடை

**ஆத்தூர் தொகுதி-செம்மடைப்பட்டி, ரெட்டியார் சத்திரம்**

96. செல்லாத்தாள் டீக்கடை
97. தங்கவேல் டீக்கடை
98. அய்யர் டீக்கடை புதுச்சத்திரம்
99. பிச்சை டீக்கடை. சட்டையப்பனூர்
100. மோகன் டீக்கடை, சட்டையப்பனூர்
101. பழனிச்சாமி டீக்கடை சட்டையப்பனூர்

பெரியார் திராவிடர் கழகம்
திண்டுக்கல் மாவட்டம்
தொடர்புக்கு :

**துரை.சம்பத்** மாவட்டத் தலைவர் 94430 22771

**க.சூ.இரவணா** மாவட்டச் செயலாளர் 9367921334

# கழகம் நடத்திய வீரவணக்க கூட்டங்கள்

*சிறிலங்கா வான் குண்டுத்தாக்குதலினால் வீரச் சாவடைந்த அரசியல்துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட போராளிகளுக்கு வீர வணக்கம் செலுத்தும் நிகழ்வுகள் பெரியார் திராவிடர் கழகம் சார்பில் தமிழ்நாட்டில் பல ஊர்களில் நடைபெற்றன.*

**சேலம்**

சேலம் போஸ் மைதானம் அருகில் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட போராளிகளுக்கான



வீரவணக்க நிகழ்வும் அனுராதபுரம் சிறிலங்கா வான் படைத்தளத்தை அழித்த சிறப்புக் கரும்புலி மாவீரர்களின் வித்துடல்களை நிர்வாணப்படுத்திய சிறிலங்கா அரசாங்கத்தைக் கண்டித்தும் நவ.2 வெள்ளிக்கிழமை மாலை 4:00 மணிக்கு வீரவணக்க நிகழ்வும் கண்டன ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டது.

நிகழ்ச்சிக்கு பெரியார் திராவிடர் கழக நிர்வாகி டைகர் பாலன் தலைமை வகித்தார்.

ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம், தமிழ்நாடு மனித உரிமைக் கழகம், புதியன பண்பாட்டுக் கழகம், குடியுரிமை பாதுகாப்பு நடுவம், தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி, மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சி, தலித் மக்கள் இயக்கம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் நிர்வாகிகளும் பங்கேற்றனர்.

**கோவை**



கோவை காந்திபுரத்தில் உள்ள பெரியார் திராவிடர் கழக அலுவலகமான பெரியார் படிப்பகத்தின் முன்பாக வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெற்ற இந் நிகழ்வுக்கு பெரியார் தி.க. பொதுச்செயலாளர் கோவை கு. இராமகிருட்டிணன் தலைமை வகித்தார்.

இந்நிகழ்வில் பெரியார் தி.க.வின் ஆட்சி மன்றக் குழு உறுப்பினர்கள் வெ. ஆறுச்சாமி, நிர்வாகிகள், தமிழின உணர்வாளர்கள் பலரும் பங்கேற்று வீரவணக்கம் செலுத்தினர்.

பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் உள்ளிட போராளிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் வகையில் பெரியார் தி.க.வின் கொடி அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டது.

**திருப்பூர்**



பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட ஐந்து போராளிகளுக்கு வீரவணக்கம் செலுத்தும் நிகழ்ச்சி பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் திருப்பூர் பழைய பேருந்து நிலையம் மற்றும் வெள்ளியங்காடு ஆகிய இடங்களில் நடைபெற்றன.

கழகத்தின் மாநில களப்பணியாளர் அங்ககுமார் தலைமையில் இந்நிகழ்வுகள் நடைபெற்றன.

மனித நேயப்பாசறை சக்திவேல், தென்மொழி துரையரசனார், புரட்சிகர இளைஞர் முன்னணி உள்ளிட்ட ஏராளமான தமிழின உணர்வாளர்கள் கொண்டனர்.

**சென்னை**




**சென்னை மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் சார்பில்** இராயப்பேட்டையில் நவ.3 ஆம் தேதி பிற்பகல் வீரவணக்க நிகழ்வுகள் நடைபெற்றன.

பெரியார் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை க. இராசேந்திரன் தலைமை வகித்தார். பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் திருவுருவப் படத்துக்கு மலர் மாலை அணிவித்து அகவணக்கம் செலுத்தப் பட்டது. நகர் முழுதும் வீரவணக்கம் செலுத்தும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

பெரியார் திராவிடர் கழக நிர்வாகிகள் மற்றும் தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டு பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கு அகவணக்கம் செலுத்தினர். வீரவணக்க முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

**புதுவை**



புதுவையில் பெரியார் திராவிடர் கழகத் தலைவர் லோகு அய்யப்பன் தலைமையில் வீரவணக்க நிகழ்வுகள் நடைபெற்றன.

விடுதலைச் சிறுத்தைகள், மீனவர் வேங்கைகள் உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட அமைப்பின் பிரதிநிதிகளும் தமிழின உணர்வாளர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். புதுவை நகரமெங்கும் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கு வீரவணக்கம் செலுத்தும் சுவரொட்டிகளும் ஒட்டப்பட்டிருந்தன.

# மறுபரிசீலனை செய்க!

கழகத் தலைவர் கொளத்தூர் மணி நவம்பர் 1 ஆம் தேதி வெளியிட்ட அறிக்கை :

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் படுகொலை செய்யப்பட்ட செய்தி உலகத் தமிழர்கள் அனைவருக்கும் அதிர்ச்சி தந்துள்ளது.

1984 இல் போராளியாக அறிமுகமாகி அதன் பின்னர் தமிழீழத் தேசியத் தலைவருக்கு தனி உதவியாளராகவும் யாழ். மாவட்டத் தளபதியாகவும் பின்னர் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளராகவும் அவரின் பல கட்ட வளர்ச்சியைப் பார்த்து மகிழ்ந்த எம்மை இந்தச் செய்தி பேரதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

சிறிலங்கா வான்படையின் கொடூரமான வான் தாக்குதலில் சு.ப.தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட ஐந்து போராளிகளை இழந்து நிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தமிழீழத் தமிழர்களுக்கும் எமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.

அழகிய புன்னகையுடனும் ஆழமான, தெளிவான, நிதானமான பேச்சுக்களுடனும் உலகத் தமிழரால் பார்த்துவரப்பட்ட அந்தப் பெருமகன் இன்று நம்மோடு இல்லை....

சிங்கள அரசின் இராணுவ, பொருளாதார இலக்குகளை மட்டும் தாக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாதிகளாகக் காட்ட முயல்வோர் அமைதிப் பேச்சுவார்த்தைக்கு புலிகள் தரப்பில் தலைமை ஏற்றிருந்த அரசியல்துறைத் தலைவரையே குறிவைத்து படுகொலை செய்தமைக்கு என்ன சொல்லப் போகிறார்கள்?

இப்படிப்பட்ட வெறித்தனமான சிங்கள அரசுக்கு ஆயுதமும் பயிற்சியும் கொடுக்கும் இந்திய அரசும் இதைப் பார்த்துக் கொண்டும் வாய்மூடி மௌனியாக இருக்கும் தமிழக அரசும் தங்கள் நிலைப்பாடுகளை இந்த நிலையிலாவது மறுபரிசீலனை செய்திட வேண்டும்.

பெரியார் திராவிடர் கழகத்தின் கிளைக் கழகங்கள் சார்பில் சு.ப.தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட போராளிகளுக்கு அகவணக்கம் செலுத்தும் கூட்டங்களும் அமைதி ஊர்வலங்களும் இன்றும் நாளையும் நடத்துமாறும் வரும் ஞாயிற்றுக்கிழமை மாவட்டத் தலைநகரங்களிலும் 5.11.2007 திங்கட்கிழமை தலைமைக் கழகத்தின் சார்பில் சென்னை மாநகரிலும் நடத்துமாறும் கேட்டுக் கொள்கிறோம்

## முதல்வர் கலைஞரின் இரங்கல்

எப்போதும் சிரித்திடும் முகம் -
எதிர்ப்புகளை எரித்திடும் நெஞ்சம்!

இளமை இளமை இதயமோ
இமயத்தின் வலிமை! வலிமை!

கிழச்சிங்கம் பாலசிங்கம் வழியில்
பழுமாய் பக்குவம்பெற்ற படைத் தளபதி!

உரமாய் தன்னையும் உரிமைப் போருக்கென உதவிய
உத்தம வாலிபன் - உயிர் அணையான்
உடன் பிறப்பணையான்
தமிழர்வாழும் நிலமெலாம்
அவர்தம் உளமெலாம்
தன்புகழ் செதுக்கிய செல்வா- எங்கு சென்றாய்?

## ஆயுதம் வழங்காதே!

சென்னையில் கழகம் நடத்திய வீரவணக்கக் கூட்டத்தில் (நவ.6) நிறைவேற்றப்பட்ட தீர்மானம்:

இலங்கையில் பொது மக்கள், பள்ளிகள், மருத்துவமனைகள், வழிபாட்டுத் தலங்கள், உள்நாட்டு அகதி முகாம்கள் மீது சர்வதேச போர் நெறிமுறை களுக்கு எதிராகத் தாக்குதல்கள் - படுகொலைகளை நடத்தி வருகிறது சிறீலங்கா அரசு. இதன் உச்ச கட்டமாக, போர் நிறுத்த அமைதிப் பேச்சுவார்த்தைக் குழுவுக்குத் தலைமை ஏற்ற சு.ப. தமிழ்ச்செல்வனை குறிவைத்து குண்டுவீசி படுகொலை செய்துள்ளது. சர்வதேச நெறிமுறைகளுக்கு எதிராக இப்படியான தொடர் தாக்குதல்கள் - படுகொலைகளை நடத்தி வரும் சிறீலங்கா அரசுக்கு, இந்திய அரசு இராணுவ உதவியோ, இராணுவப் பயிற்சியோ எந்த ஒரு வடிவத்திலும் வழங்கக் கூடாது என்று தமிழ் நாட்டு மக்களாகிய நாங்கள் இந்திய அரசை வலியுறுத்துகிறோம்.

# பிரியா விடை பெற்றார் பிரிகேடியர் தமிழ்ச்செல்வன்

உலகத் தமிழினத்தின் பிரியா விடையோடு விதைக்கப்பட்டார் நம் பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வன் வித்துடல் தூய விதைகுழியில் முழுப் படைய மதிப்புடன் நவ. 5 ஆம் தேதி விதைக்கப்பட்டது.



தமிழ்ச்செல்வன் துணைவியார் வீரவணக்கம் செலுத்துகிறார்; அருகில் அவரது மகன்

வரலாறு காணாத அளவு மக்கள் அணிதிரண்டு வணக்கம் செலுத்த உலகத் தமிழினத்தின் பிரியா விடையோடு பிரிகேடியர் சு.ப.தமிழ்செல்வனின்

முன்னதாக கிளிநொச்சியில் திங்கட்கிழமை நடைபெற்ற வீரவணக்கக் கூட்டத்தில் வன்னி எங்கிலுமிருந்து திரண்ட மக்கள், விடுதலைப் புலிகளின் துறைப் பொறுப்பாளர்கள், கட்டளைத் தளபதிகள், தளபதிகள், பொறுப்பாளர்கள், போராளிகள், சைவ- கிறிஸ்தவ மதகுருமார்கள், ஆயர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிறிலங்கா நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பல்லாயிரக்கணக்கானோர் திரண்டு பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனின் வித்துடலுக்கு மலர்தூவி மலர்மாலைகள் சூட்டி தமது இறுதி வணக்கத்தைத் தெரிவித்தனர்.

இறுதி வணக்கம் தெரிவித்த மக்கள் கண்ணீர் மல்க உணர்வெழுச்சியுடன் பிரியா விடை கொடுத்தனர்.

வீரவணக்கக் கூட்டம் நிறைவடைய கிளிநொச்சி நகரில் இருந்து கனகபுரம் மாவீரர் துயிலுமில்லம் நோக்கி வித்துடல் அணியிசை வகுப்புடன் நகர்ந்த போது நகரிலிருந்து துயிலுமில்லம் வரையிலான 6 கிலோமீட்டர் தூரத்திற்கு சாலையில் இருபுறமும் மக்கள் அணிதிரண்டு வணக்கம் செலுத்தினர்.

இச்சாலையில் வீடுகளின் வாசல்கள் தோறும் பிரிகேடியர் சு.ப.தமிழ்செல்வனின் உருவப்படத்தை வைத்து மக்கள் தமது வணக்கத்தைத் தெரிவித்திருந்தனர். கிளிநொச்சி நகரிலிருந்து மக்களின் வணக்கத்துடன் கனகபுரம் மாவீரர் துயிலுமில்லத்தில் மாலை 6:00 மணிக்கு வித்துடல் சென்றது. அங்கு இறுதி வணக்கத்துடன் விடுதலைப் புலிகளின் முழுப்படைய மதிப்புடன் பிரிகேடியர் சு.ப.தமிழ்செல்வனின் வித்துடல் உலகத்தமிழினத்தின் பிரியா விடையுடன் தூய விதைகுழியில் விதைக்கப்பட்டது.

தமிழீழத் தாயகத்தில் வீர வணக்ககூட்டம் நடைபெற்ற அதேநேரத்தில் புலம்பெயர் தமிழர்கள் வாழும் அனைத்து நாடுகளிலும் சமநேரத்தில் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கு வீர வணக்ககூட்டங்கள் நடைபெற்றன.




வீரமரணமடைந்த அலெக்ஸுக்கு அவரது துணைவியார் (தமிழீழ தொலைக்காட்சியில் ஆங்கில செய்தி வாசிப்பவர்) வீர வணக்கம் செலுத்துகிறார்

சர்வதேச ஊடகங்கள் தங்களது இரங்கலை வெளியிட்டுள்ளன. தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் வரலாறு காணாத அளவுக்கு உணர்வெழுச்சியுடன் பிரிகேடியர் சு.ப.தமிழ்செல்வனுக்கு உலகத் தமிழினம் அணிதிரண்டு வீரவணக்கம் செலுத்தி பிரியாவிடை கொடுத்துள்ளது.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

சு.ப.தமிழ்ச்செல்வனை கொல்வதற்குரிய முதல் நபராக வைத்திருந்தோம் என்று சொல்கிறார்கள். இதனைத்தான் உலக நாடுகள் எண்ணிப்பார்க்க வேண்டும் என்று சொல்லுகிறோம். இதுவரை ஒரு சிங்களக் குடிமகனை புலிகள் சுட்டதும் கொன்றதும் இல்லை.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைக் கூட புலிகள் அவர்களாகவேதான் அறிவித்தனர். புலிகள் யுத்த நிறுத்தம் அறிவித்ததும் ஒரு கிறிஸ்துமஸ் நாளில். அதே போல் ஒரு கிறிஸ்தமஸ் நாளில்தான் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை வழிபாட்டுத் தலத்திலே வைத்து சிங்களவர்கள் படுகொலை செய்தனர். ஆனால் அப்படிப் படுகொலை செய்தவர்களை பயங்கரவாதிகள் இல்லை என்கிறார்கள்.

செஞ்சோலைக்குள்ளே அப்பாவிச் சிறார்கள் படுகொலை செய்யப்பட்ட பிறகும்கூட போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவராக இருந்த உல்ப்ஹென்றிக்சன் கேட்டதற்காக அந்த கோர சம்பவத்திற்கு அடுத்த ஐந்து நாட்களிலே சிறிலங்கா காவல்துறையினரை விடுதலை செய்தவர்கள் புலிகள்-

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் துப்பாக்கியைக் கீழே போட்டுவிட்டு அரசியல் பணிகளைச் செய்த கௌசல்யனைக் கொன்றவர்கள் சிங்களவர்கள். ஆனால் அவர்களை இந்த உலகம் பயங்கரவாதிகளாக சொல்லவில்லை.

ஆனால் அப்படி எதுவுமே செய்யாத புலிகளை பயங்கரவாதிகளாகச் சொல்கிறார்கள்.

இராணுவ இலக்குகள் தான் எங்கள் இலக்கு என்று தாக்கியவர்கள் புலிகள். ஆனால் சமாதான செயலகத்திற்கு பக்கத்திலேயே குண்டு வீசி கொல்கிறது சிங்களம்.

இந்த நிலையில் இங்கே நாம் நமது கடமையாக எதனை செய்வது?

புலிகள் பயங்கரவாதிகள் இல்லை என்பதை சர்வதேசம் ஒப்புக் கொள்ளச் செய்ய வேண்டும். நமக்கு அந்த ஆற்றல் இல்லையெனில்

இந்திய அரசானது சிங்கள இராணுவத்துக்கு ஆயுதங்களையும் பயிற்சிகளையும் கொடுக்கக் கூடாது என்று அழுத்தம் கொடுக்க வேண்டும்.

தமிழ்நாட்டில் ஒரு விடுதலைப் போரைக் கொச்சைப்படுத்துவோர் அஞ்சும் வகையில் ஒரு எழுச்சி உருவாக்கப்பட வேண்டும்.

இப்போது நாங்கள் தொடங்கியிருக்கிற கையெழுத்தியக்கம் என்பது வெறும் கையெழுத்துப் பெறுவது மட்டுமல்ல. நாம் வழங்குகிற துண்டறிக்கைகள் நாம் நடத்தும் தெருமுனை கூட்டங்கள் மூலமாக மக்களிடம் விளக்கங்களை முன்வைப்போம்.

தமிழ்நாட்டில் ராய்ட்டர்ஸ், பி.டி.ஐ., யு.என்.ஐ. போன்ற செய்தி நிறுவனங்களின் செய்திகளை அப்படியேப் போட்டு வந்தவர்கள் இப்போது சிறிலங்கா துணைத் தூதராக இருக்கின்ற அம்சா கொடுக்கின்ற செய்திகளைத்தான் போடுகிறார்கள். ஜனநாயகத்தின் நான்காம் தூண்களாக இருக்க வேண்டியவர்கள் ஐந்தாம் படைகளாக இருக்கிறார்கள். அப்படியான ஊடகங்களுக்கு எதிரான நடவடிக்கைகள் அல்லது புறக்கணிப்புகளை நாம் செய்ய வேண்டும்.

இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வதுதான் இறந்துவிட்ட தலைவர்களுக்கு நாம் மேற்கொள்ளும் வீர வணக்கமாக இருக்கும்.

ஜெனீவாவில் நடந்த சமரசப் பேச்சின் நிறைவிலே "விடுதலையின் வாயிலில் நிற்கிறோம். நீண்ட நேரம் வாயிலில் நிற்கவும் முடியாது" என்று சு.ப. தமிழ்ச்செல்வன் கூறினார்.

அந்த விடுதலைப் போரை நசுக்கும் சிங்கள இராணுவத்துக்கு ஆயுத உதவிகள் வழங்காமல் இந்திய அரசுக்கு நெருக்குதல் கொடுப்பதும் இங்குள்ள அரசியல் தலைவர்களுக்கு அழுத்தம் கொடுப்பதும் தான் நாம் செய்ய வேண்டிய பணிகளாகும் என்றார் கழகத் தலைவர் கொளத்தூர் மணி.

கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் பேசுகையில், சர்வதேச ஊடகங்கள் வழக்கத்திற்கு மாறாக, தமிழ்ச்செல்வன் மரணத்திற்கு முக்கியத்துவம் தந்து அனுதாபச் செய்திகள் வெளியிட்டிருப்பதை எடுத்துக் காட்டினார்.

மக்கள் கவிஞர் இன்குலாப் எழுதிய "தேசத்தின் புன்னகை" என்ற வீரவணக்க கவிதை கூட்டத்தில் படிக்கப்பட்டது.

**பழ.நெடுமாறன், சீமான் உரை அடுத்த இதழில்**

# தக்க பதிலடி கிடைத்தே தீரும்!

"அரசியல் நடவடிக்கைகளில் அவருக்கு எப்படித்திறமை இருந்ததோ அதனைப்போல அவருக்கு போரில் தனித்திறமை இருந்தது. மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைக் கவனிப்பது முதல் இராஜதந்திரிகளைக் கையாள்வது வரை அவருக்கு தனித்திறமை இருந்தது. மக்களின் பிரச்சினைகள் எதுவானாலும் சரி அவற்றை இனங்கண்டு தீர்வு காண்பதில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார்.

ஆழிப்பேரலை என்றாலும் சரி புயல் வெள்ளம் என்றாலும் சரி அனைத்திற்கும் தீர்வு தமிழ்ச்செல்வன் அண்ணாதான். மக்களின் தேவைகளுக்காக தனது உடைமைகளைக் கூட அனுப்பிவிடும் ஒரு உன்னத மனிதன்.

அத்தகைய பெரு மனிதனை இழந்தது எமக்கும் தமிழ்ச் சமூகத்திற்கும் பேரிழப்பு. அண்மைய நாட்களில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்களால் சிங்கள அரசு திணறிக்கொண்டிருக்கிறது. அநுராதபுரம் என்றாலும் சரி அதற்குப்பின்னர் மன்னார் என்றாலும் சரி அவர்கள் பேரிழப்புக்களையே சந்தித்திருக்கின்றனர். இந்த இராணுவ ரீதியான இழப்புக்களால் அரசு கோழைத்தனமான முடிவுகளை எடுத்து செயற்பட்டு வருகின்றது. அரசியல்துறைப் பொறுப்பாளர் தாக்குதலுக்குள்ளான இடம் அனைத்துலக சமூகத்துடன் பேச்சுக்களை மேற்கொள்ளும் தனிப்பட்ட அலுவலகம்.

ராஜபக்சே சகோதரர் கோத்தபாய ராஜபக்ச தான் இன்றுதான் மகிழ்வாக இருப்பதாகக் கூறியிருக்கிறார்.

இந்த இழப்பிற்கு தக்க பதிலடியை எங்கள் தேசியத் தலைவர் அவர்கள் நிச்சயம் கொடுத்தே தீருவார். அவர்களின் இழப்பு ஒட்டு மொத்த தமிழர்களையும் ஆக்கிரமிப்பிற்கு எதிராக எழுப்பிவிட்டுள்ளது.


நிச்சயம் நாங்கள் தமிழீழத்தை அடைவோம் என்றார்."

**- சமாதான செயலகப் பொறுப்பாளர் புலித்தேவன் உரையிலிருந்து**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 9th November 2007

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் www.puratchiperiyarmuzhakkam.com திருவள்ளுவர் ஆண்டு 2038 நவம்பர் 15, 2007 புரட்சி 5 முழக்கம் 46 விலை : ரூ.2.50


## இந்திய அரசே, சிங்களத்துக்கு ஆயுதம் வழங்காதே!

# கோவையில் உணர்ச்சிப் பேரணி

*'மாவீரர் சுப. தமிழ்ச்செல்வனுக்கு கோவையில் - பெரியார் திராவிடர் கழகம் சார்பில் நடந்த வீரவணக்கப் பேரணியும், பொதுக் கூட்டமும் உணர்ச்சியுடன் நிகழ்ந்தது.*

ஷஇந்திய அரசே! இனப்படுகொலை செய்கிற சிங்கள அரசுக்கு ஆயுதங்களைக் கொடுக்காதே' என்ற குரலை தமிழகம் எங்கும் ஒலிக்கச் செய்ய முனைப்போடு பணியாற்றுவோம் என்று பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் தா.செ.மணி அறிவித்தார்.

கோவையில் நவம்பர் 10 சனிக்கிழமை நடைபெற்ற பிரிகேடியர் சு.ப.தமிழ்செல்வன் உள்ளிட்ட போராளிகளுக்கான வீரவணக்க ஊர்வலத்தின் இறுதியில்




நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கொளத்தூர் தா.செ.மணி பேசியதாவது:

சிறிலங்கா அரசாங்கத்துக்கு தமிழரைத் தவிர எதிரிகள் யாரும் இல்லை என்று தெரிந்தும் இந்திய அரசாங்கம் ஆயுதம் கொடுக்கிறது. தமிழகத் தமிழர்களாகிய நாம் முன்வைக்கிற கோரிக்கைகள் நிறைய உண்டு. புலிகள் மீதான தடையை நீக்க வேண்டும்- தமிழீழத்தை அங்கீகரிக்க வேண்டும்- என்பது போன்ற கோரிக்கைகள் உண்டு.

இருப்பினும் தற்போது நமக்கான ஒற்றை இலக்காக- எங்கும் ஒலிக்க வேண்டிய குரலாக ஷஇந்திய அரசே! இனப் படுகொலை செய்கிற சிங்கள அரசுக்கு ஆயுதங் களைக் கொடுக்காதே' என்பதுதான் இருக்க வேண்டும்.

அதற்கான கையெழுத்தியக்கத்தின் மூலமாக மக்களிடம் இந்தக் குரலை ஒலிக்கச் செய்வோம். அதுவே தமிழ்ச் செல்வன் உள்ளிட்ட போராளிகளுக்கு நாம் செலுத்தும் உண்மையான வீரவணக்கம் ஆகும்.

எங்களின் வரிப்பணத்தில் எங்கள் ஆதரவினால் இயங்குகிற இந்திய அரசே! சிங்களவனுக்கு ஆயுதங்கள் வழங்காதே என்ற ஒற்றைக் கோரிக்கையை உறுதியோடு முனைப்போடு முன்னெடுத்துச் செல்வோம் என்றார் கொளத்தூர் மணி.

**பெரியார் திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கோவை கு.இராமகிருட்டிணன்:**

இந்திய இராணுவம் இந்தியா திரும்பியபோது தமிழர்களைப் படுகொலை செய்த இந்திய இராணுவத்தை வரவேற்கமாட்டேன் என்று அப்போது முதல்வராக இருந்த கலைஞர் தெரிவித்தார். அவரை தேசத்துரோகி என்றார்கள்.

இலங்கைக்கு அமைதிப்படையை ராஜீவ் அனுப்பினார். ஆனால் பேச்சுவார்த்தைக்கு வரும் பிரபாகரனை சுட்டுக்கொல்ல தீட்சித் உத்தரவிட்டதாக அப்போதைய அமைதிப்படை தளபதி ஹர்கிரத் இப்போது ஒப்புதல் தெரிவித்துள்ளார். அப்படியானால் யார் தேசத் துரோகி? இப்போது ஒப்புக் கொள்ளும் நீங்களும் தேசத்துரோகிகள் தானே!

இந்திய இராணுவத்தை முதல்வராக கலைஞர் இருந்தும் வரவேற்கவில்லை அதற்குப் பின்னால் அதே குற்றச்சாட்டுகளை அவர் மீது வைத்தபோதும் தமிழக மக்கள் அவருக்கு வாக்களிக்காமல் இல்லை. இரண்டு முறை அவரை முதலமைச்சராக்கினார்கள்.

இந்த அரசை மிரட்டுவதன் மூலம் நம்மைப் போன்ற இயக்கங்களை தமிழர்களுக்காக் குரல் கொடுப்பதை தடுக்க முடியும் என்று நினைக்கிறார்கள்

புலிகள் ஒரு போதும் அழ மாட்டார்கள். தமிழ்நாட்டின் முகாம்களில் கொளத்தூர் மணி அண்ணன் தோட்டத்திலே தமிழக மக்களின் அரவணைப்பில் வளர்க்கப்பட்ட எத்தனையோ போராளிகளை புலிகள் இழந்திருக் கிறார்கள். அவர்கள் விழ விழ எழு கின்றவர்கள். இதோ இப்போதுகூட சிறுவனாக இருக்கின்ற தமிழ்ச் செல்வனின் மகன் சீருடையில் நிற்கும் புகைப்படங்கள் வெளிவந்துள்ளன.

தென்னாப்பிரிக்காவின் நெல்சன் மண்டேலா போர் நடத்தியதில்லை. அராபத்துக்கு உலகம் முழுவதும் உள்ள முஸ்லிம் நாடுகள் ஆதரவு கொடுத்தன. ஆனால் எந்த நாட்டின் உதவியும் இல்லாமலேயே சொந்தமண்ணிலே 30 ஆண்டுகாலமாக பிரபாகரன் மட்டுமே போராடி வருகிறார் என்றார் இராமகிருட்டிணன்.

**திராவிடர் இயக்க தமிழர் பேரவையின் அமைப்பாளர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன்:**

சிங்கள இனவெறியர் களே! விளைநிலங்கள் மீது ஆயிரக்கணக்கிலே குண்டு களை வீசிய உங்களால் புலிகளின் நெஞ்சுரத்தின் மீது குண்டு போட முடிந்ததா?

புலிகளின் முதல் மாவீரன் சங்கர் இந்த தமிழ் மண்ணி லேதான் உயிர்விட்டான். இந்த மண்ணுக்கும் மாவீரர் களுக்குமான உறவு அத்தகையது.

ஈழத்தில் 18 ஆயிரம் போராளிகளை மாவீரர் களாக்கி, ஏறத்தாழ 1 இலட்சம் பொதுமக்கள் படு கொலைக்குள்ளாக்கியிருக் கிறார்கள். தங்கள் உயிரைப் பற்றி கவலைப்படாது போராடு கிறவர்களைப் பற்றி பேச சுப்பிரமணிய சாமிகளுக்கும் துக்ளக் சோக்களுக்கும் தகுதி இருக்கிறதா? என்றார் அவர்.

**தமிழ்த் தேச விடுதலை இயக்கத்தின் தலைவர் தியாகு தனது உரையில்:**

இந்தியாவில்தான் ஈடு செய்ய முடியாத இழப்பு என்கிறோம். ஆனால் 20 ஆயிரம் மாவீரர்களின் இழப்பை விடுதலைப் புலிகள் ஈடு செய்து எழுந்து நிற்கிறார்கள். 20 பேருடன் தொடங்கப்பட்ட அந்த இயக்கம் இன்று 20 ஆயிரம் பேரை மாவீரர்களாக்கியிருக்கிறது.

வங்கக் கடல் அன்று சோழமன்னனின் ஏரியாக இருந்தது. சோழர்கள் காலத்துக்குப் பின்னர் புலிப்படையிடம் தான் கப்பற்படை உள்ளது. உலகில் எந்த ஒரு விடுதலை இயக்கமும் சாதிக்காத அதிசயமாக விடுதலைப் புலிகள் வான்படை வைத்துள்ளனர். முப்படையை நடத்துகிறார்கள் விடுதலைப் புலிகள்.

அனைத்துலக நாடுகளிடம் ஆயுதங்களை வாங்கி வாங்கி குவிக்கிறது சிறிலங்கா அரசாங்கம். ஆனால் அவர்களுக்கு விலைக்கு கிடைக்காத ஒன்று உள்ளது. அது புலிகளின் வீரம். ஒரு இலட்சம் இந்தியப் படை அங்கே இறங்கியதே! என்ன நடந்தது? பின்னங்கால் பிடரியிலே ஓடிவரவில்லையா? எத்தனையோ இழப்புகளுக்கும் வலிகளுக்கும் பின்னர் ஈழம் என்கிற அந்தக் கனவை நிறைவேற்ற நமக்கும் பொறுப்பு உண்டு.

தமிழீழத் தாயகத்தின் 70 விழுக்காடு பகுதியை விடுதலைப் புலிகள் மீட்டெடுத்திருக்கிறார்கள். இன்னும் ஒருபகுதியைத்தான் அவர்கள் மீட்க வேண்டும். ஆனால் அதற்குத் தடையாக இருக்கிறார்கள்- யார்? இந்தியாதான். இந்தியாதான் வெண்ணெய் திரண்டு வரும்போதெல்லாம் தாழியை உடைக்கிறவர்களாக இருக்கிறார்கள்.

தமிழீழ தேசத்தை விடுவிப்பதற்கான போராட்டம் என்பது தெற்காசியாவின் சோசலிசப் புரட்சிக்கான அடித்தளமாக அமையும் என்று ஒரு விடுதலைப் புலி வீரர் கூறியதாக நெடுமாறன் தனது நூலில் பதிவு செய்துள்ளார்.

அதனால் இந்திய வல்லாதிக்கமும் அமெரிக்க வல்லாதிக்கமும் சிங்களப் பேரினவாதத்துக்கு ஆயுதங்களை வழங்குகிறது.

இந்த முக்கூட்டு பாசிச அச்சை முறிக்கிற முதல் பொறுப்பு நமக்கு இருக்கிறது. இந்திய அரசை நெருக்கி நிர்பந்தித்து தமிழீழ மக்களின் போராட்டத்தை ஏற்கச் செய்ய வேண்டும். சிங்கள அரசாங்கத்துக்கு இராணுவ உதவி செய்வதைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும். அதுவே



தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நாம் செய்கின்ற உதவியாகும். அதுவே சு.ப.தமிழ்ச்செல்வனுக்கு நாம் செலுத்தும் உண்மையாக வீரவணக்கமாக இருக்கும்.

*(6 ஆம் பக்கம்)*

*தலையங்கம்*

# பார்ப்பன பயங்கரவாதம்

*‘தெகல்கா’ வார ஏடு, குஜராத் பா.ஜ.க. முதல்வர் மோடியின் திட்டமிட்ட இனப்படுகொலைகளை ஆதாரங்களுடன் வெளிக் கொண்டு வந்திருக்கிறது. ‘தெகல்கா’ செய்தியாளர்கள் ஆறுமாத காலத்துக்கு மேலாக குஜராத் மதவெறி சக்திகளுடன் நெருக்கமாகப் பழகி, அவர்கள் நம்பிக்கையைப் பெற்று, அவர்களின் வாய் மொழியாகவே குற்றங்களுக்கு ஒப்புதல் வாக்குமூலம் வாங்கி, அதைப் பதிவாக்கி ஆதாரங்களுடன் நாட்டின் முன் சமர்ப்பித் திருக்கிறார்கள். ‘தெகல்கா’வின் இந்த மகத்தான சாதனையைப் பாராட்ட வேண்டும்.*

*இந்தப் பதிவுகளை ஆதாரமாக வைத்து குஜராத் முதல்வர் மோடி உள்ளிட்ட மதவெறிப் படுகொலைக் கும்பல் மீது மத்திய அரசு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அரசியல் சட்டத்துக்கு அப்பாற்பட்ட ஆட்சி குஜராத்தில் நடக்கிறதா என்பதே இப்போது எழுந்துள்ள கேள்வி.*

*இந்து மதம் என்ற பார்ப்பன மதத்தின் கொடூரமான வரலாறு ரத்தத்தால் எழுதப்பட்டதுதானே! புத்த, சமண மடங்களை அழித்து, புத்தர்களையும் சமணர்களையும் பிணமாக்கி ஆரியத்தை நிலைநிறுத்திய பார்ப்பனர்களைப்போல பயங்கரவாதிகள் வேறு யார் உண்டு? பார்ப்பனீயத்தின் கொடூரமான கொலைகளை ‘தெகல்கா’ வழியாக அறியும் போது நாடே அதிர்ந்து போய் நிற்கிறது. வன்முறையாளர் தரும் ஒப்புதல்களிலிருந்து சில உதாரணங்கள்:*

- *ஒன்பது மாத கர்ப்பிணியின் வயிற்றைக் கிழித்து கருவை வாள்முனையில் குத்தி வெளியே இழுத்து உயர்த்திக் காட்டினோம். தாயையும், கருவையும் நெருப்பில் எரித்தோம்.*

  *அவர்கள் கரு உயிர்க்கக் கூடாது.*

- *முதியவர் இஹ்சான் ஜாஃப்ரி காங்கிரஸ் கட்சியின் முன்னாள் எம்.பி. பணத்தைக் கொண்டு வந்து எங்கள் காலடியில் கொட்டிவிட்டு ஓடப் பார்த்தார். பற்றி இழுத்தோம். பின்னாலிருந்து ஒருவன் உதைத்து வீழ்த்தினான். ஒருவன் அவர் மீது கத்தியைப் பாய்ச்சினான். முதலில் கைகளை வெட்டினோம். பின்னர் ஒவ்வொரு உறுப்பாக சிதைத்தோம். குற்றுயிராய்க் கிடந்த உடலையும், கழித்த உறுப்புகளையும் நெருப்பில் எரித்தோம். செத்த உடல்களை எரிக்கக் கூடாது என்பதல்லவா அவர்களின் நம்பிக்கை.*

- *அது ஒரு சரிவான குழி. ஒரு புறம் சரிந்து இருக்கும். மறுமுனையோ செங்குத்தான உயரம். ஏறித் தப்ப முடியாது. அதில் போய் அவர்கள் ஒண்டினார்கள். பெட்ரோலை அள்ளி ஊற்றி எல்லோரையும் எரித்துக் கொன்றோம்.*

*– இவற்றை எல்லாம் சொல்லுகிற பாபு பஜ்ரங்கி, ராஜேந்திர வியாஸ், ரமேஷ் தவ, மதன் சவால், பிரஹலாத் ராஜூ, மஞ்சிலால் ஜெயின், திமன்ட் பட், தீபக் ஷா... இவர்களெல்லாம் யார்? பஜ்ரங்தள், வி.எச்.பி., ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. இந்த அமைப்புகளின் முக்கிய உள்ளூர் தலைவர்கள்.*

*மூன்று நாள் அவகாசம் தருகிறோம் செய்து முடியுங்கள். உங்களைப் போலீஸ் கண்டு கொள்ளாது. சாட்சியங்களும் தடங்களும் இல்லாமல் பார்த்துக் கொள்ளப்படும். கைதானவர்களுக்குச் சட்ட உதவி வழங்கப்படும். அவர்கள் குடும்பங்களுக்கு தொடர்ந்து தேவையான ‘ரேஷன்’கள் வழங்கப்படும்.*

*உங்கள் பிள்ளைகள் பள்ளிகளில் கட்டணம் கட்ட வேண்டியதில்லை. நாங்கள் பள்ளி நிர்வாகங்களில் பேசிக் கொள்கிறோம். உங்களுக்கு எதிராக சாட்சிகள் பேச மாட்டார்கள். கொலையுண்டவர்களின் குடும்பத்தவர்கள் கூட சாட்சி சொல்ல மாட்டார்கள். உங்களை விசாரிக்கும் போலீஸ் உங்களை மிகவும் கண்ணியத்துடன் நடத்தும்.*

*– இப்படி படுகொலைக்கு ஆணை பிறப்பித்தவர் மோடி!*

*– இப்படி திட்டமிட்டே படுகொலைகளை அரங்கேற்றிய மோடியின் வாரிசுகள் தான் தமிழ்நாட்டின் ‘பயங்கரவாதம்’ பற்றி பேசுகிறார்கள். ஓநாய் சைவத்தைப் பேசுவதுபோல் இருக்கிறது.*

*மனித சமூகத்தையே வெட்கித் தலைகுனிய வைத்துள்ள படுகொலைகளை துக்ளக் சோ, இராமகோபாலன், சுப்ரமணிய சாமிகள், இல. கணேசன்கள் ஏன் கண்டிக்காமல் பதுங்கி நிற்கிறார்கள்? தமிழர்கள் மீது ஆயுதப்படை எடுப்பு நடத்தும் சிங்கள அரசு பயங்கரவாதத்தை எதிர்த்து, தாக்குதல் நடத்தும் விடுதலைப்புலிகள் இயக்கத்தை ‘பயங்கரவாதம்’ என்று முத்திரை குத்திடும் பார்ப்பன சக்திகள் – குஜராத் படுகொலை களுக்கு என்ன பதில் கூறுகின்றன? முஸ்லீம்களாக பிறந்த ஒரே காரணத்தால் சட்டத்தைக் கைகளில் எடுத்துக் கொண்டு அரசு பாதுகாப்புடன் நடத்தி முடித்துள்ள இந்தக் கொடூரமான படுகொலைகளைவிட பயங்கரவாதம் வேறு உண்டா என்று கேட்கிறோம்.*

*மத்திய அரசு இதில் உறுதியான நடவடிக்கை எடுக்கக் கடமைப்பட்டிருக்கிறது. மனித உரிமையாளர்கள், மதச் சார்பின்மையாளர்கள் ‘நரபலி மோடி’களின் இந்தக் கொடூரங்களை மக்கள் மன்றத்துக்குக் கொண்டுச் சென்று இவர்களின் முகத்திரையைக் கிழித்தெறிய வேண்டும்!*

# கோபியில் அனைத்து கட்சியினரும் பங்கேற்ற வீரவணக்கக் கூட்டம்



தமிழகத்தின் ஈரோடு மாவட்டம் கோபியில் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் உள்ளிட்ட அனைத்துக் கட்சியினர் பங்கேற்ற பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட போராளிகளுக்கான வீரவணக்க நிகழ்வு நடைபெற்றது.

கோபி அஸ்டலட்சுமி திருமண மண்டபத்தில் நவம்பர் 11 ஞாயிற்றுக்கிழமை மாலை 6:00 மணியளவில் வீரவணக்க நிகழ்வு தொடங்கியது.

இந்நிகழ்வுக்கு தமிழ்நாடு சட்டப்பேரவையின் முன்னாள் உறுப்பினரான தி.மு.கவைச் சேர்ந்த வெங்கிடு தலைமை வகித்தார். பெரியார் திராவிடர் கழகத்தின் ஈரோடு மாவட்டச் செயலாளர் இராம இளங்கோவன். பெரியார் திராவிடர் கழகத்தின் மாநில நிதிக்குழு உறுப்பினர் க. பொன்னுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்வின் தொடக்கத்தில் சமர்ப்பா குமரன் குழுவினரின் கண்ணீர் வணக்கப் பாடல்கள் பாடப்பட்டன.

மேலும் ஜெயராமன் - கண்ணகி என்ற தம்பதியினரின் மகனுக்கு தமிழ்ச்செல்வன் என்று நிகழ்வில் கொளத்தூர் தா.செ.மணி பெயர் சூட்டினார்.

பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் படத்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் தா.செ.மணி திறந்துவைத்து வீரவணக்க உரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் - அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்திய நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சின்னசாமி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் ஸ்டாலின் குணசேகரன், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஈரோடு மாவட்ட துணைச் செயலாளர் மா. கந்தசாமி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கோபி வட்டச் செயலாளர் வழக்கறிஞர் துரைசாமி, தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி யின் பொதுக்குழு உறுப்பினர் மணி பாரதி, ஆதித் தமிழர் பேரவையின் வீரக்குமார், கொங்கு நாடு நண்பர்கள் சங்கத்தின் சரவணக்குமார், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் முன்னாள் மாவட்டச் செயலாளர் - உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

## கள்ளக்குறிச்சியில்

தமிழகத்தின் கள்ளக்குறிச்சி மற்றும் திருக் கோவிலூர் நகரங்களில் பிரிகேடியர் சு.ப.தமிழ்ச் செல்வன் உள்ளிட்ட போராளிகளுக்கான வீர வணக்க நிகழ்வுகள் நடைபெற்றன.

விழுப்புரம் மாவட்ட பெரியார் திராவிடர் கழகம் மற்றும் தமிழீழ விடுதலை ஆதரவாளர்கள் ஒருங்கிணைப்புக் குழு சார்பில் கள்ளக்குறிச்சி அம்பேத்கர் சிலை அருகில் நவம்பர் 5 ஆம் நாள் முற்பகல் 11:00 மணியளவில் வீரவணக்க நிகழ்வை நடத்தினர்.

இந்நிகழ்வுக்கு விழுப்புரம் மாவட்ட பெரியார் தி.க. அமைப்பாளர் சாமிதுரை தலைமை வகித்தார்.

தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் சின்னசேலம் பிரபு, சீனு, கருங்குழி வெற்றிவேல், திருமால், பெரியார் தி.க. மாவட்ட நிர்வாகிகள் வெ.அமிர்தலிங்கம், தமிழ்த்தாசதுரை, ந.அய்யனார் ஆகியோர் வீரவணக்க உரை நிகழ்த்தினர்.

## சீர்காழியில்

2.11.2007 காலை 11 மணியளவில் போரில் வீரமரணம் அடைந்த விடுதலை புலிகளை நிர்வாணப்படுத்த ஊர்வலம் விட்ட சிங்கள இன பயங்கரவாதி ராஜபக்சேயை கண்டித்து சீர்காழி வட்டாச்சியர் அலுவலகம் எதிரில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட துணை செயலாளர் காத்திருப்பு குமார் தலைமை வகித்தார். கழக கொள்ளிட ஒன்றிய செயலாளர் ச. கார்த்தி கேயன் சீர்காழி ஒன்றிய தலைவர் இரா.விசயகுமார், நகரத் தலைவர் பெரியார் செல்வம், மாவட்ட தலைவர் இரா.பரசுராமன், மகக்ள் போராட்ட மையம் என் ராஜா, புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்ற மாவட்ட செயலாளர் அன்பு. ராசப்பா, வழக்கறிஞர் சு.சோமசுந்தரம், வி.வி.மு. மாவட்ட செயலாளர் ந. அம்பிகாபதி ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். கழக நகர செய லாளர் பா.பிரபாகரன் நன்றியுரையாற்றினார். ஏராள மான கழகத் தோழர்கள் கலந்து கொண்டார்கள்.

2.11.2007 மாவீரன் தமிழ்ச்செல்வன் வீரவணக்க சுவரொட்டியில், “சர்வதேச விதிகளை மீறி இலங்கை விமானப்படை தாக்குதலில் வீர மரணம் அடைந்த விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவு தலைவர் மாவீரன் தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட போராளிகளுக்கு வீரவணக்கம்! வீரவணக்கம்!

இந்திய அரசே! ஈழத் தமிழர்களை கொன்று குவிக்கும் இலங்கை ராணுவத்திற்கு ஆயுதமும் ராணுவப் பயிற்சி கொடுப்பதை உடனே நிறுத்திக் கொள்” என்ற வாசகங்களுடன் சீர்காழி கொள்ளிடம் பகுதிகளில் கழகத்தின சார்பில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

சிங்கள பயங்கரவாதத்தால் படுகொலை செய்யப்பட்ட மாவீரன் தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட போராளிகளுக்கு வீர வணக்கக் கூட்டம் 4.11.2007 ஞாயிறு காலை 11 மணிக்கு சீர்காழி பழைய பேருந்து நிலையம் அருகில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சீர்காழி நகரத் தலைவர் பெரியார் செல்வம் தலைமை ஏற்றார். கழக மாவட்டத் தலைவர் இரா.பரசுராமன், மாவட்ட துணைத் தலைவர் சோமராசராசன், மாவட்ட துணைச் செயலாளர் காத்திருப்பு செ.குமார், கொள்ளிட ஒன்றிய செயலாளர் ச.கார்த்திகேயன், இந்திய தேசிய லீக் நகர செயலாளர் எம். முகமது பாரூக், த.மு.மு.க. மாவட்டடத் தலைவர் ஆரிப், ம.க.இ.க. மாவட்ட செயலாளர் ந. அம்பிகாபதி புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்ற மாவட்டச் செய லாளர் அன்பு ராசப்பா, லோக் ஜனசக்தி பொதுச் செயலாளர் நல்ல கிருஷ்ணமூர்த்தி, தி.மு.க. மாநில மீனவரணி செயலாளர் அருமை. ராச கோபால், மக்கள் போராட்ட மையம் அமைப்பாளர் தனவேந்திரன், பகுஜன் சமாஜ் கட்சி மாவட்ட செயலாளர் சோ. அபிமன்னன், தமிழர் உரிமை இயக்க அமைப்பாளர் பேராசிரியர் முரளிதரன், கழக மயிலை நகரத் தலைவர் தெ. மகேசு, தமிழ்நாடு மாணவர் கழக மாவட்ட அமைப்பாளர் அன்பு, சீர்காழி தமிழ்ச் சங்கப் பொறுப்பாளர் கோ. நடராஜ் ஆகியோர் வீரவணக்க உரையாற்றினார்கள். கூட்டத்தில் இந்திய அரசையும் இலங்கை அரசையும் கண்டித்து கண்டன முழக்கமிட்டார்கள். மூன்று மணி அளவில் கூட்டம் முடிவடைந்தது. இரண்டு நிமிடம் அமைதியாக நின்று வீரவணக்கம் செலுத்தப்பட்டது. அண்ணாமலை பல்கலைக்கழக தமிழ்நாடு மாணவர் கழகத்தின் அமைப்பாளர் பா.அருண் நன்றி கூறினார். கூட்டத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் சீர்காழி பெரியார் செல்வம் சிறப்பாக செய்து இருந்தார். கூட்டத்தில் ஏராளமான கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

## ஆயுதம் வழங்குவதை நிறுத்த சென்னையில் கையெழுத்து இயக்கம் தொடக்கம்

18.11.2007 ஞாயிறு மாலை 6 மணியளவில் சென்னை வைத்தியநாதன் தெரு (பச்சையப்பன் கல்லூரி பின்புறம்)வில், பா. ராஜன் தலைமையில். கொளத்தூர் மணி (தலைவர், பெரியார் திராவிடர் கழகம்), ஆனூர் செகதீசன் (துணை தலைவர், பெரியார் திராவிடர் கழகம்), கோவை இராமகிருட்டிணன் (பொதுச்செயலாளர் பெரியார் திராவிடர் கழகம்), விடுதலை இராசேந்திரன் (பொதுச் செயலாளர் பெரியார் திராவிடர் கழகம்), வழக்கறிஞர் துரைசாமி, வழக்கறிஞர் புகழேந்தி (த.ம.உ.க.), வேலுமணி (மக்கள் எழுச்சி இயக்கம்) ஆகியோர் உரையாற்றுகிறார்கள். சு. செந்தில் நன்றியுரையாற்றுகிறார்.

இந்திய அரசு இலங்கைக்கு ஆயுதம் வழங்குவதை நிறுத்தக் கோரி கையெழுத்து இயக்கம் தொடங்கி வைக்கப்படும்.

**பெரியார் திராவிடர் கழகம்,**
**சென்னை மாவட்டம்.**

## இயக்குனர் சீமான் உணர்ச்சியுரை:

# பெரியாரின் வளைந்த கைத்தடியே - ஈழத்தில் பிரபாகரனின் நிமிர்ந்த துப்பாக்கி

*பெரியாரின் வளைந்த கைத்தடி தான். ஈழத்தில் துப்பாக்கியாக நிமிர்ந்து நிற்கிறது என்று குறிப்பிட்டார் இயக்குனர் சீமான்:*

தமிழ்நாட்டில் தமிழீழ விடுதலை ஆதரவு என்பதுதான் தமிழக வாக்கு அரசியலை தீர்மானிக்கிற சக்தியாக உருவெடுக்க வைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

சென்னையில் பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் நவம்பர் 6 செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பிரிகேடியர் சு.ப.தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட போராளிகளுக்கான வீரவணக்க நிகழ்வில் அவர் பேசியதாவது:

இங்கே உள்ள சு.ப.தமிழ்ச்செல்வனின் புகைப்படத்தையும் அந்தப் புகைப்படத்தின் முன்னால் உள்ள பூக்களையும் பாருங்கள். புன்னகைக்கும், பூக்களுக்கும் வித்தியாசம் தெரியாத அந்த முகத்தைப் பாருங்கள். தமிழண்ணா உங்கள் புன்னகையை எப்போது நாங்கள் பார்க்கப் போகிறோம் என்று ஏங்கித் தவிக்கிறோம்.

இந்த மண்ணிலே என் உடன் பிறந்தான் மரணத்துக்குக்கூட நாங்கள் கூடி அழமுடியாதாம். ஆனாலும் இது சுதந்திர இந்தியாவாம்.

எந்த நாடு உலகத்தில் அடிமைப்பட்டு கிடக்கிறதோ அந்த நாடெல்லாம் என் தாய் நாடு என்றார் சேகுவோரா. ஆனால் எங்கள் இரத்த சொந்தங்கள் அகதிகளாக அடிபட்டு இரத்தம் சிந்தி ஓடுகிற போது நாங்கள் ஒன்றும் செய்யக் கூடாதாம். என் உடம்பிலும் கூட சுத்த தமிழ் இரத்தம் ஓடுவதாக ஒருவர் சொல்லியிருக்கிறார். தன்னை தமிழச்சி என்கிறார். 17 வருடமாக தன் மகனை சிறைக்கொட்டடியிலே விட்டு புழுதி பூமிகளில் எல்லாம் இன விடுதலைக் கூட்டம் நடைபெறுகிற இடங்களிலெல் லாம் வந்து நிற்கிற பேரறிவாளனின் தாயார் அற்புதத் தம்மாள் தமிழச்சி- பரமக்குடியிலே என் வீட்டில் இருக்கும் அண்ணன் பிரபாகரன் புகைப்படத்தை பார்த்து யார் என்று கேட்கும் உறவுகளுக்கெல்லாம் என் மூத்த மகன் இவன் என்று சொல்லுகிற என் தாய் ஒரு தமிழச்சி- அண்ணா குண்டுவீசி அண்ணனை கொன்றுவிட்டார்களே என்று கதறிய என் தங்கை உமா ஒரு தமிழச்சி.. ஆனால் என் உடன்பிறந்தானுக்கு இரங்கல் தெரிவித்ததை கொச்சைப் படுத்திய ஜெயலலிதாவும் ஒரு தமிழச்சி என்றால் இந்த மண்ணிலே நாண்டு கொண்டு சாவதைத் தவிர வேறு வழியில்லை.

சிறிலங்காவுக்கு அமெரிக்கா இராணுவ உதவி செய்தது. பயிற்சி கொடுத்தது. பாகிஸ்தான் 13 வானோடிகளைக் கொடுத்தது. ஆனாலும் விரட்டியத்தனர் விடுதலைப் புலிகள்.

99 தமிழக மீனவர்களை சிறிலங்கா இராணுவம் கடத்திச் சென்று தற்போது விடுவித்துள்ளது. 800 தமிழக மீனவர்களை சிறிலங்கா இராணுவம் சுட்டுப் படுகொலை செய்துள்ளது. காசுமீரத்தில் ஒரு நபர் பாகிஸ்தான் பகுதியிலிருந்து ஊடுருவி வந்து விட்டாலே எல்லை தாண்டிய பயங்கரவாதம் என்று கூறுகிற இந்தியா எங்கள் தமிழக மீனவ சகோதரன் சிறிலங்கா இராணுவத்தால் சுட்டு செத்து விழுகிற போது ஏன் எல்லை தாண்டிய பயங்கரவாதம் என்று சொல்ல மறுக்கிறது?

எங்கள் தவித்த வாய்க்குத் தண்ணீர் தராத நாட்டிலே எங்களுக்கு வாழ என்ன உரிமை உள்ளது? தனித் தமிழ்நாடு கோரி நாங்கள் போராட வேண்டியிருக்காது. அவர்களே அதனை உருவாக்கிவிடுவார்கள்.

கடந்த 58 ஆண்டுகளாக தன்னை வல்லரசு என்று சொல்லுகிற இந்தியா ஏன் தமிழீழத்தைக் கண்டு அஞ்ச வேண்டும்?

ஏனெனில் தமிழீழம் அமைந்த ஐந்தாவது ஆண்டில் அதனை உலக வல்லரசாக பிரபாகரன் மாற்றிவிடுவார் என்று இந்திய அரசாங்கம் அஞ்சுகிறது. நீங்கள் தமிழீழத்தை அங்கீகரித்துப் பாருங்கள். வர்த்தகத் தொடர்புக்கு வந்து பாருங்கள். அவர்கள் செய்து காட்டுவார்கள். ஆனால் தமிழ்நாட்டில் தமிழன் எருமை மாடு போல் இருக்கிறான். ராஜீவ் கொலையை ஒருபோது மறக்கவும் மன்னிக்கவும் மாட்டேன் என்று காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஜி.கே.வாசன் சொல்கிறார். எங்கள் தலைவர்களைக் கொன்றவர்களை மன்னிக்கவும் மறக்கவும் மாட்டோம் என்று புதுதில்லியிலிருந்து ஜெயந்தி நடராஜன் கூறுகிறார்.

எத்தனையோ தலைவர்கள் கெஞ்சி மன்றாடி கதறி அழுதபிறகும் இந்திய இராணுவத்தை அனுப்ப வேண்டாம் என்று கூறியபின்னரும் நீங்கள் இராணுவத்தை அனுப்பினீர்கள்.



ஜி.கே.வாசன் அவர்களே! ஜெயந்தி நடராஜன் அவர்களே!

அந்தத் தமிழீழ மண்ணில் சிங்கள இராணுவம் செய்த கொடூரங்களை விட எங்கள் அக்காள், தங்கைகளை கொடுமையாக பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கிய அந்தக் கோரங்களை தமிழன் மன்னித்து விட்டான்- மறந்துவிட்டான்

எங்கள் தமிழீழச் சொந்தங்கள் 40 பேரை நடுவீதியில் கிடத்தி டாங்கிகளை ஏற்றிக் கொன்றததைத் பார்த்தபிறகும் படித்த பிறகும் மன்னித்துவிட்டான்

பாலியல் வல்லுறவு அம்பலப்பட்டு விடக்கூடாது என்பதற்காக என் தங்கைகளின் அக்காள்களின் பிறப்புறுப்பை துப்பாக்கியால் சுட்டுக்கொன்ற உங்கள் இந்திய இராணுவத்தின் கொடுஞ்செயலை மன்னித்துவிட்டான்- மறந்துவிட்டான்.

ஈழத் தமிழர்களுக்கு அப்போது உதவிய இந்திய இராணுவத்திலே இருந்த எங்கள் தமிழக வீரர்களை சுட்டுப் படுகொலை செய்ததை தமிழன் மன்னித்துவிட்டான் - மறந்துவிட்டான்.

அதனால்தான் ஜி.கே.வாசன் இன்று மத்திய அமைச்சராக உள்ளார். ஜெயந்தி நடராஜன் தில்லியிலே உள்ளார். என்ன வெட்கக் கேடு!

எங்கள் அக்காள் தங்கைகளை நிர்வாணப்படுத்தி திறந்த மார்பகங்களில் தார்க் குச்சியால் சிறீ என்கிற சிங்கள எழுத்தை எழுதியபின்பும் எங்கள் உறவுகள் ஏன் ஆயுதம் ஏந்தக் கூடாது?

அவர்களுக்காக நாங்கள் அழக்கூடாது- பேசக்கூடாது எனில் அப்படியான ஒரு தேசம் எங்களுக்குத் தேவை தானா?

தமிழனின் தேசிய மொழி இந்தியாம். சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையிலே எழுதிப்போடுகிறார்கள். ஆனால் எந்தத் தமிழன் கோபப்பட்டான்?

இங்கே எவன் செத்தால் தனக்கு என்ன? என்கிற போக்குதான் உள்ளது. சிரஞ்சீவி மகள் ஒரு பார்ப்பான் மகனோடு ஓடிப்போனதும் இந்தத் தமிழனுக்கு ஒரு செய்தி- சு.ப.தமிழ்ச்செல்வன் வீரச்சாவடைந்ததும் இந்தத் தமிழனுக்கு ஒரு செய்தி. இந்தத் தமிழர்களை எது பாதிக கிறது? உங்களை ஒன்றுமே பாதிக்காது. ஏனெனில் இங்கே நடப்பது வாக்கு அரசியல் என்கிற கேவலமான கூத்து.

இதே கருநாடக மண்ணில் பிரபாகரன் பிறந்திருந்தால் நிலைமையே வேறு.

தமிழின விடுதலையை எதிர்ப்பவர்களே! வந்து பாருங்கள் இராமேசுவரத்துக்கு அந்தக் கரையின் இரத்த வாடை தெரியும்! அவர்களின் கண்ணீர் அந்த இராமேசுவரத்து கடல் நீரில் உப்பாய் கரிக்கும்!

தமிழ்த் திரைப்பட உலகில் அண்ணனைக் கொன்றவனை- அக்காளைக் கொன்றவனை- தங்கையைக் கொன்றவனை- தாயைக் கொன்றவனை கிளைமேக்சில் படுகொலை செய்யும் கதாநாயகனுக்கு சிறந்த விருது கொடுப்பீர்கள்- அது உங்களுக்கு ஹீரோயிசமாகத் தெரியும். அதனையே நிஜத்தில் தமிழீழத்தில் தலைவர் செய்தால் உங்களுக்குத் தீவிரவாதமோ?

தேவாலயத்திலே கர்த்தர் விழிக்கும் நேரத்திலே அந்த நத்தார் நாளிலே ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்ட போது ஜான்பால் அறிக்கைவிட்டாரா?

சிங்களத்திலே நன்கு உரையாற்றக்கூடிய- சர்வதேச சமூகத்தின் முன் சிங்களத்தின் கொடுமைகளை அம்பலப்படுத்திய ரவிராஜ் படுகொலை செய்யப்பட்டபோது சர்வதேச சமூகம் கண்டித்ததா?

ஏன் கண்டிக்கவில்லை? ஏனெனில் அவன் தமிழன். அதுதான் உண்மை.

அறிக்கைகள்- பேச்சுக்கள் எப்போதும் சரிப்படுவது இல்லை. செயல்தான். அண்ணன் பிரபாகரன் அறிக்கை விட்டுப் பார்த்திருக்கிறீர்களா? இல்லையே.

எம் தமிழ்ச் சொந்தங்களே! ஒரு புழுவை நீங்கள் அடித்தால் கூட அது அடிக்க அடிக்க துடித்து மேலெழும் போது நம் மீதான அடக்குமுறைகளுக்கான எதிர்ப்பை காட்ட வேண்டாமா? தந்தை பெரியார் ஊட்டி வளர்த்த இனமான உணர்வு இங்கே செத்து எரிந்து சாம்பலாகி விட்டதா?

ராஜீவ் கொலையை மன்னிக்கவும் மறக்கவும் மாட்டேன் என்று சொல்லுகிற அந்த காங்கிரசில் ஒருத்தன் கூட தமிழ் மகன் இல்லையா? இந்தத் தமிழினம் செய்த தவறுதான் என்ன? பிழை என்ன? என்னவெனில்-

தமிழீழ விடுதலைப் புலிகளையும் தமிழீழத்தையும் ஆதரிக்காத எவனுக்கும் இங்கே வாக்கு இல்லை என்ற நிலைமை உருவாக்கப்பட வேண்டும்.

வாக்கு கேட்டு வருபவனிடம் தமிழீழ விடுதலையில் உன் நிலைப்பாடு என்ன? என்று கேட்கும் நிலை உருவாக்கப்பட வேண்டும்.

இறையாண்மை வெங்காயம் என்ற பெயரில் இந்தியா ஆயுதம் கொடுத்தால் நாங்களும் எங்கள் தமிழர்களுக்காக ஆயுதங்கள் கொடுப்போம்.

ராடார்களை இந்தியா கொடுத்த பின்னர்தான் எங்கள் தமிழர்கள் கட்டுநாயக்க வான் தளத்தை அடித்தார்கள். அப்போது சிங்களவன் சொல்கிறான், இந்தியா கோளாறான ராடார்கள்களைக் கொடுத்துவிட்டது என்றான். அப்போதே தமிழன் மான நட்ட வழக்குத் தொடர்ந்திருக்க வேண்டும். இப்படிச் சிங்களவன் சொல்வது இங்குள்ள நமக்கு வெட்கமாக இல்லையா? இன்னைக்கும் இந்தியாக்காரன் ஆயுதம் அனுப்புகிறான். ஆறரைக் கோடி தமிழ் மக்கள் இளிச்சவாயர்களாக உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்,

கர்நாடகத்தில் 75 வயது இராசுக்குமார் என்பவர் வயது முதிர்ந்து செத்ததற்காக ஆயிரக்கணக்கிலே பேருந்துகள் அடித்து நொறுக்கப்பட்டன. ஒரு கூத்தாடிப்பயல் மாரடைப் பில் செத்துப் போனதற்காக இத்தனை நடந்துள்ளது போல் இப்போது இங்கு என்ன நடந்திருக்க வேண்டும்,

தமிழர்களே! நீங்கள் வாக்கு செலுத்தி தேர்ந்தெடுத்த 40 நாடாளுமன்ற உறுப்பினர்களை வைத்து நிர்வகிக்கும் இந்திய அரசு தான் சிங்களவனுக்கு ஆயுதங்களைக் கொடுக்கிறது!

அப்படியானால் ஆயுதங்கள் கொடுக்கிற அரசாங்கத்துக்கும் அதனை ஆதரிப்போருக்கும் எங்கள் வாக்குகள் இல்லை என்கிற நிலையை நாம் உருவாக்க வேண்டும்.

பெரியார் நம்மை மானமுள்ள மனிதராக்க உழைத்தார். ஈழத்திலே பிரபாகரன் விடுதலை பெற்ற தமிழர்களை உருவாக்கப் போராடுகிறார். பெரியார் இப்போது வாழ்ந்திருந்தால் இந்தப் போராட்டத்துக்காக தன்னை அர்ப்பணித்திருப்பார். ஒரு வரலாற்றுப் பிழை நடந்துவிட்டது. ஈழத்தின் விடுதலைப் போராட்டம் நடக்கும்போது பெரியார் இருந்திருக்க வேண்டும். அல்லது பெரியார் இருந்த காலத்திலேயே பிரபாகரன் நடத்தும் விடுதலைப் போர் தொடங்கப்பட்டிருக்க வேண்டும். ஆனாலும் பெரியாரின் அந்த வளைந்த கைத்தடிதான் பிரபாகாரனின் நிமிர்ந்த துப்பாக்கியாகியிருக்கிறது.

இங்கே இராமன் என்கிற ஒருவன் பெயரைச் சொன்னால் வாக்கு கிடைக்கும் என்கிற போது ஏன் இனவிடுதலையை முன்னிறுத்தி நம்மால் செய்ய முடியலை? ஏன் செய்யக் கூடாது?

ரஜினிகாந்தின் மர உருவங்களுக்கு பால் ஊற்றி சாகிற என் உறவுகளே! நீங்கள் இந்தக் களத்தில் சாக வாருங்கள் என்றார் சீமான்.

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 15.11.2007**

# பழ. நெடுமாறன் எழுச்சியுரை:

# சமாதான முயற்சிக்கு தயாராக இல்லை என்பதை சிங்களம் அறிவித்துவிட்டது!

*நவம்பர் 6, சென்னையில் பெரியார் திராவிடர் கழகம் நடத்திய சு.ப. தமிழ்ச்செல்வன் – வீரவணக்க நாள் கூட்டத்தில் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:*

மறைந்த சு.ப.தமிழ்ச்செல்வனை 1985 ஆம் ஆண்டிலிருந்து நான் அறிவேன். தம்பி பிரபாகரனுக்கு துணையாக செயற்பட்டபோது முதல் ஒவ்வொரு கட்டத்திலும் அவரை நான் கவனித்திருக்கிறேன். பிரபாகரனின் முழுமையான நம்பிக்கை பெற்றவரான சிறந்த தளபதியாக வெவ்வேறு களங்களில் வெற்றிக் கொடிநாட்டியவராக மட்டுமில்லாமல் இராஜதந்திர களத்திலும் வல்லவராக சு.ப.தமிழ்ச்செல்வன் திகழ்ந்தார்.

இளம் வயதில் சிறந்த இராஜதந்திரியாக விளங்கி சமரசப் பேச்சுக்களை நடத்தியவர். சிரித்த முகமாக சமரச பேச்சுக்களில் நம் தரப்பு நியாயத்தை பிறர் மனம் ஈர்க்குமளவுக்கு செய்தவர். பொதுவாக தமிழர்களில் அனைத்துலக அரங்கத்தில் இராஜதந்திர திறமை படைத்தவர்கள் மிகக் குறைவு. அன்ரன் பாலசிங்கமும், பிரிகேடியர் சு.ப.தமிழ்செல்வனும் அந்தக் கலையில் சிறந்து விளங்கிய தமிழர்களாக இருந்தனர். இதற்கு முன்னால் நடந்த நிகழ்ச்சியை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இந்தியாவின் ஹைதராபாத் சமஸ்தானப் பிரச்சினை வந்தபோது இந்தியப் படை புகுந்து சமஸ்தானத்தை பிடித்து இந்தியாவுடன் இணைத்தது.

ஐ.நா. பேரவையில் பாகிஸ்தான் , அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் அதனை ஆக்கிரமிப்பு என்று கூறி தீர்மானம் கொண்டுவந்த போது சர்தார் படேலும் பிரதமராக இருந்த நேரம் ஏ. இராமசாமி முதலியார் என்கிற தமிழரைத்தான் அனுப்பினார்கள்.

ஐ.நா.வுக்குச் சென்ற அவர் இந்தியாவின் நடவடிக்கை? ஷஇராணுவ' நடவடிக்கை அல்ல- காவல்துறை நடவடிக்கை என்று வாதாடி அந்தத் தீர்மானத்தை தோற்கடிக்கச் செய்தவர். அவருக்கு அப்போது 72 வயதுக்கும் மேல் இருக்கும். அவர் நன்கு அனுபவம் பெற்றவர். ஆனால் சு.ப. தமிழ்ச்செல்வன் இளவயதிலே அந்தத் தகுதியைப் பெற்றிருந்தார்.

ஷஅவனை வளர்த்தெடுத்தேன். ஆனால் வீணாக வில்லை. நம் இலட்சிய தீபத்தை உலக அரங்கில் உயர்த்திப் பிடித்தவன்' என்று பிரபாகரன் மனம் உருகிச் சொன்ன அந்த தமிழ்ச்செல்வனை நாம் வஞ்சகத்தின் மூலம் இழந்திருக்கிறோம்.

யார் உலகெங்கும் சமாதானத் தூதுவராக சமாதானப் புறாவாகச் சென்று ஆதரவு திரட்டினாரோ -

யார் சந்திரிகாவோடும் நோர்வே உள்ளிட்ட நாடுகளோடும் பேச்சுக்களை நடத்தினாரோ -

யார் எதிரிகளைக் கூட இன்முகத்தோடு சந்தித்து உரையாடினாரோ -

அந்த சமாதான தூதுவரை சிங்கள வெறியர்கள் கொன்றொழித்தன் மூலம் சிங்களப் பேரினவாத அரசு எந்த ஒரு சமாதான முயற்சிக்கும் தயாராக இல்லை என்பதை அறிவித்துவிட்டது

சிங்களம் வெளிப்படுத்திய இந்தச் செயலுக்கு அனைத்துலக சமூகத்தின் பதில் என்ன? அது தெரிந்தாக வேண்டும். இந்தக் கொடூரமான கொலைக்கு அனைத்துலக சமூகம் எப்படி கண்டிக்கப் போகிறது? அது தெரிய வேண்டும்.

அனைத்துலக நாடுகள் இருக்கட்டும். இந்திய அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன?

நோர்வே நடத்தும் பேச்சுக்கு இருதரப்பும் ஒத்துழைக்க வேண்டும். அதற்கு ஒத்துழைப்போம் என்று சொன்னது இந்தியா. அந்த சமரசப் பேச்சில் ஈடுபட்ட ஒரு தரப்பின் தலைவரை வஞ்சகமாக சிங்களம் கொன்றபோது எத்தனை கடுமையான வார்த்தைகளில் இந்தியா கண்டித்திருக்க வேண்டும். ஆனால் வாயே திறக்கவில்லையே. புத்தரும் மகாவீரரும் அசோகனும் பிறந்த நாடு என்று பெருமை பேசுகிற இந்தியா வாயே திறக்கவில்லை.



ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டபோது-

ரவிராஜ் படுகொலை செய்யப்பட்டபோது-

செஞ் சோலையிலே பிஞ்சுகள் படுகொலை செய்யப்பட்டபோது -

வாய் திறக்காத இந்தியா, அந்தக் கொலைகளைச் செய்த சரத் பொன்சேகா மீது குண்டு வீசியபோது கண்டிக்கிறது

என்னய்யா தமிழனுக்கு ஒரு நீதி! சிங்களவனுக்கு ஒரு நீதி! இதுதான் இந்திய அரசின் போக்கா?

தமிழ்நாட்டு முதலமைச்சர் இரங்கல் கவிதை தெரிவித்துள்ளார். அதற்குப் பாராட்ட வேண்டும். அவர் டில்லியை எச்சரித்திருக்க வேண்டும். இந்தியாவின் இராணுவ உதவியை நிறுத்த வேண்டும் என்று அவர் சொல்லியிருக்க வேண்டும். என்றாலும், அவர் கவிதை எழுதியதற்காகப் பாராட்ட வேண்டும்.

ஒரு இரங்கல் கவிதை தெரிவித்ததற்காக ஒரு அம்மையார் கண்டனம் தெரிவிக்கிறார். அவர் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் பேச்சாளர் தமிழகத்தைச் சேர்ந்த ஜெயந்தி. மற்றொருவர் ஜி.கே. வாசன் - நீங்கள் இரண்டு பேரும் பேசக் கூடாது. உங்களுக்கு அந்த யோக்கியதையும் தகுதியும் இல்லை.

இதே ஜெயந்தி நடராஜன் தான், அன்று ராஜீவ்காந்தி சிறீபெரும்புதூர் வந்தபோது சென்னை வானூர்தி நிலையத்திலிருந்து ஒருகணம் கூட நகராமல் இருந்தவர். ஆனால் குண்டுவெடிக்கிற போது ஆளைக் காணவில்லை. உண்மையான தொண்டனாக இருந்திருந்தால் ராஜீவுக்கு ஆபத்து என்று தெரிந்தபோது உயிரைக் கொடுத்தாவது காப்பாற்றியிருக்க வேண்டும்.

தங்கள் உயிரைக் காக்க ஓடிப்போனவர்கள் எல்லாம் இப்போது ஒப்பாரி வைக்க வந்துவிட்டார்கள்!

தமிழக முதல்வர் கவிதை எழுதிவிட்டார் என்பதற்காக அவரை பாய்ந்து பிடுங்குகிறார்கள்!

சரி இன்னொரு அம்மையார்-

அந்த அம்மையாருக்கு பதவி பறிபோன ஆத்திரம்தான் இருக்கிறது- வெளி உலகத்தில் என்ன நடக்கிறது என்றே தெரியவில்லை.

என்னுடைய காலத்திலேயே விடுதலைப் புலிகளை அடக்கி வைத்திருந்தேன் என்று சிறுபிள்ளை மாதிரி பேசுகிறார்.

அனுராதபுரத்திலே 25 இராணுவ வானூர்திகளை அழித்து நொறுக்கிய அந்த விடுதலைப் புலிகளை சென்னையிலே அரண்மனை வீட்டிலே இருந்து கொண்டு ஒடுக்கிவிட்டேன் என்று சொல்வது கேவலமாக இருக்கிறது. அப்படிப் பேச வெட்கமாக இல்லையா?

புலிகளைக் கண்டு சிங்கள இராணுவம் நடுநடுங்கு கிறது. இந்தியா போன்ற நாடுகள் நடுங்குகின்றன. ஆனால் தன் உயிருக்காக காவல்துறையின் பாதுகாப்பு கேட்கிற ஒருவர் அந்தப் புலிகளை ஒடுக்கிவிட்டேன் என்று பேசிக் கொண்டிருக்கிறார்.

இதே நேரத்தில் இன்னொரு அம்மையார் சொன்னதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அமெரிக்காவில் வரப்போகிற அரச தலைவர் தேர்தலிலே வெற்றி பெறுவார் என்று கூறப்படுகிற ஹிலாரி கிளிண்டன், அண்மையில் லண்டன் ரைம்சுக்கு அளித்த பேட்டியில் எல்லோரையும் நீங்கள் பயங்கரவாதிகள் என்று பட்டம் சூட்டி ஒழிப்பதற்கு முயற்சி செய்யாதீர்கள். உதாரணமாக இலங்கையில் போராடும் புலிகள் மக்களுக்காக போராடுகிறவர்கள் என்று கூறினர். ஆனால் குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டுகிற நம்முடைய ஜெய லலிதா அம்மையார் புலிகளை ஒடுக்கிவிட்டேன் என்கிறார்.

சு.ப.தமிழ்செல்வனைப் போன்ற வீரர்கள் மாவீரர்களாகி தங்கள் இன்னுயிரை அர்ப்பணித்துக் கொண்டிருக் கிறார்கள். தமிழரின் வரலாற்றில் இதனைப் போன்று வீரஞ்செறிந்த போராட்டத்தை தமிழர்கள் சந்திக்கவில்லை. அந்தப் போராட்டத்துக்கு அனைத்து வகையிலும் உதவியாக நிற்க வேண்டிய கடமையும் பொறுப்பும் நமக்கு இருக்கிறது.

21ஆம் நூற்றாண்டில் தமிழர்களுக்கு ஒரு அடையாளத்தை ஒரு மரியாதையை உலக அரங்கில் ஏற்படுத்திக் கொடுத்தவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள். அவர்களின் தியாகமும் வீரமும் பெரும் மரியாதையை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

இலங்கையில் செய்திக் கட்டுப்பாடு விதிக்கப்பட் டுள்ளது. அரசாங்கத்தின் செய்தியைத்தான் இங்குள்ள ஏடுகள் வெளியிடுகின்றன. அதுவும் நமக்கு எதிராக செய்தி களைப் போடுவதையே வழக்கமாகக் கொண்டிருப்பவர்கள் அந்த சிங்கள அரசாங்கத்தின் செய்திக்கே முக்கியத்துவம் கொடுத்துத்தான் வெளியிடுகின்றனர்.

கடந்த 6 மாதங்களிலே இந்து பத்திரிகையில் சிங்கள அரசாங்கம் கூறியபடி இறந்த புலிகளின் எண்ணிக்கையைப் பார்த்தால் பிரபாகரன் மட்டும்தான் இப்போது அங்கிருக்க வேண்டும்.

இன்னொரு பக்கத்தில் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே என்ற அமைச்சர் அடிக்கடி சொல்லுகிறார்- பொங்கல் நாளில் சுதந்திரப் பிரகடனம் வெளியிடப் போகிறார்கள் என்று. புலி வருகிறது புலி வருகிறது என்று கூறினால் புலி ஒரு நாள் வந்துவிடும்.

பிரபாகரன் தனிநாடு பிரகடனம் செய்தால் என்ன தவறு? அங்கே சுதந்திர அரசாங்கம் நடந்து கொண்டிருப்பதை உலக நாடுகள் அறிந்திருக்கின்றன. வரலாற்றிலே நேதாஜி, ஹோசிமின், யாசர் அராபத் ஆகியோரும் தனிநாட்டுப் பிரகடனங்களைத்தான் வெளியிட்டனர்.

எந்த நேரத்தில் எதைச் செய்வது என்பது பிரபாகரனுக் குத் தெரியும். ஆனால் அத்தகைய ஒரு பிரகடனத்தை பிரபாகரன் வெளியிடும்போது எவராலும் அதனைத் தடுக்க முடியாது.

ஒரு சு.ப. தமிழ்ச்செல்வனை வீழ்த்திவிட்டதாலே போராட்டம் பின்னுக்குப் போய்விடாது. அந்த தமிழ்ச் செல்வன் சிந்திய இரத்தத்திலிருந்து

ஓராயிரம் வீரர்களும் யுவதிகளும் பிறப்பெடுத்து இந்தப் போராட்டத்தை முன்னெடுப்பார்கள் என்றார் பழ. நெடுமாறன்.

## பழ. நெடுமாறன் வைகோ உள்ளிட்ட 350 தோழர்கள் கைது

*பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கு வீரவணக்கம் செலுத்தும் பேரணிக்கு தமிழக அரசு தடை விதித்தது. தடையை மீறி பேரணி நடத்துவதற்கு மன்றோ சிலை அருகே திரண்ட பழ. நெடுமாறன், வை.கோ. உட்பட 350 பேர் கைது செய்யப்பட்டனர். கைதானவர்கள் 15 நாள் நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டனர்.*

# கொல்லப்பட்டி கிராமத்தில் நடந்தது என்ன?

# எங்கே சாதிக் கொடுமை என்போரெல்லாம் வாருங்கள்

"என்னோட பேரு செல்வி (பெயர் மாற்றப்பட்டுள்ளது). நான் கொல்லபட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு படிக்கிறேன். அது சூலை மாதம் எங்க வகுப்புல எல்லாருக்கும் பஸ் பாஸ் கொடுத்தாங்க. எனக்கும் இன்னும் நாலு பொண்ணுகளுக்கும் ஆக அஞ்சு பேரோட பஸ் பாஸ் மட்டும் தரல. ஒரு சில நாள் கழிச்சு எங்க அஞ்சு பேருக்கும் பஸ் பாஸ் வந்திருச்சு சாயங்காலம் ஸ்டாப் ரூம்பல வந்து பாஸ் வாங்கிக்கங்க என்று ஹிஸ்டரி மாஸ்டர் தாமோதரசாமி சொன்னார். சாயங்காலம் நங்க அஞ்சுபேரும் ஸ்டாப் ரூமுக்கு போனோம். அங்க வேற மாஸ்ட்டர்ஸ் யாரும் இல்ல. தாமோதராசாமி மட்டும் இருந்தார். எங்கள ஒவ்வொருத்தரா கையெழுத்துப் போட்டு பாஸ் வாங்கிட்டு போங்கன்னு சொன்னார். நாங்க வரிசையா நின்னு கையெழுத்துப் போட்டோம். ஒவ்வொருத்தருக்கா பாஸ் கொடுத்து வெளிய அனுப்புனார். கடைசியா நான் பாஸ் வாங்க கைநீட்டும் போது தாமோரசாமி மாஸ்டர் என் கையைப் பிடிச்சார். அப்படியே என் பக்கத்தில வந்து என் கன்னத்தையும் சொல்லக்கூடாத இடங்களிலும் கிள்ளினார். நான் பயந்து போய் 'சார்'னு சத்தம் போட்டேன். உடனே அவர் என்னை விட்டுட்டார். நான் வகுப்புக்கு ஓடி வந்திட்டேன். வகுப்புல வந்து யாரு கிட்டையும் சொல்லாம யாருக்கும் தெரியாம அழுதேன். வீட்டுல சொல்லவும் பயமா இருந்துச்சு. இந்த மாஸ்டர் நெறைய பொண்ணுககிட்ட இதத மாதிரி நடந்து கிட்டாருனு பொண்ணுக சொல்லியிருக்காங்க. தயவு செஞ்சு எம்பேர பத்திரிகையில போட்ராதீங்க."

"என் பேரு முருகன். நான் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவன். எங்க கணக்கு மாஸ்டர் பழனிச்சாமி எப்பவும் என்னை டேய் மைனஸ் எந்திரிடா என்று தான் சொல்வார். ஏன்னா எஸ்.சி. எல்லாம் மைனஸ், பி.சி. ப்ளஸ் என்று தான் வகுப்பில் எங்களை பிரித்துப் பேசுவார். தாழ்த்தப்பட்ட நாங்களெல்லாம் படிக்கக்கூடாதாம். தேங்காய் பொறுக்குவதற்கு போக வேண்டுமாம் இப்படி எல்லாம் திட்டுவார். குறையா மார்க் வாங்கினா எஸ்.சி. மாணவர்கள கடுமையா அடிப்பார். உங்கப்பன கூட்டியாடா என்று திட்டுவார். ஆன பி.சி. மாணவர்களை எதுவும் சொல்ல மாட்டார். நாங்க என்னங்க தப்பு செஞ்சோம் எஸ்.சி.யா பொறந்தது எங்க தப்பா?"

- இப்படி பேசுவது நமது தங்கையாக, நமது மகளாக இருந்தால்...? இப்படி கேட்பது நமது தம்பியாக, மகனாக இருந்தால்...? வேண்டாம். யாரோ ஒரு முகம் தெரியாத பெண், ஒரு முகம் தெரியாத பையன் என்றாலும் இதைச் சொல்வது ஒரு பத்தாம் வகுப்பு மாணவி என்றும், ஒரு பத்தாம் வகுப்பு மாணவன் என்றும் தெரிகிறபோது ஓர் ஆசிரியர் மாணவர்களிடம் இப்படியா நடந்து கொள்வார்? என்கிற அச்சமும், கோபமும் நமக்கு இயல்பாக எழ வேண்டும். செல்வியை, முருகனை எங்களுக்கு முன் பின் அறிமுகமில்லை. ஆனால் அந்தச் சின்னப் பெண் தனக்கு நேர்ந்த அவமானத்தை, ஆசிரியரால் நேர்ந்த கொடுமையை எங்களிடம் சொன்னபோது, அந்தத் தம்பி எஸ்.சி.யா பொறந்தது எங்க தப்பா என்று கேட்டபோது எங்களுக்குள் மிகப் பெரிய அதிர்ச்சியும், துக்கமும், ஆத்திரமும் ஏற்பட்டது. இயல்பான குழந்தைத்தனத்தோடு அந்தப் பெண் பேசிய செய்திகளை முழுமையாக சொல்வதற்கும் எங்களுக்கு உள்ளபடியே சங்கடமாக இருக்கிறது. தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் நிச்சயம் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். எனவே நீங்கள் துணிச்சலாக முன் வாருங்கள். உங்களுக்கு எல்லாவிதத்திலும் தேவைப்படுகிற பாதுகாப்பை, உதவியை செய்து தருவதற்கு நாங்கள் இருக்கிறோம். மேலும் நீங்கள் நன்றாகப் படித்து இந்தக் கொடுமைகளை எல்லாம் சவாலாக ஏற்று தொடர்ந்து இந்த சமுதாயத்திற்கு பணியாற்றவும், சாதி ஒழிப்பிற்கும், பெண் விடுதலைக்கும் போராட முன்வர வேண்டும் என்று கூறிவிட்டு கனத்த மனதோடு வெளியேறினோம்.

பொள்ளாச்சி வட்டம் கொல்லபட்டி கிராமத்திலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளியின் கணித ஆசிரியர் பழனிச்சாமி என்பவர் தாழ்த்தப்பட்ட மாணவர்களை சாதிப்பெயர் சொல்லி இழிவுபடுத்துவதாகவும், அதே பள்ளியில் வரலாறு ஆசிரியர் தாமோதரசாமி மாணவிகளிடம் வரம்பு மீறிய பாலியல் குறும்புகளில் ஈடுபடுவதாகவும் கூறி இந்திய மாணவர் சங்கம் சார்பில் கொல்லபட்டி பள்ளியைச் சார்ந்த சுமார் 50 மாணவர்கள் பொள்ளாச்சி சார் ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்திய செய்தி 13.10.2007 நாளிதழ்களில் வெளியானது. 15.10.2007 அன்று ஆதித் தமிழர் பேரவை நிகழ்ச்சியில் கலந்து கொள்ள கழகத் தலைவர் கொளத்தூர் மணி பொள்ளாச்சி வந்தார். அவரிடம் பல்லடம் கழகத் தோழர்கள் ராஜீவ், ஆறுமுகம், வடிவேல் ஆகியோர் வந்து கொல்லபட்டி பள்ளியில் நடைபெறும் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் நேருகிற சாதி - பாலியல் துன்பங்கள் குறித்து பேசினார்கள். இது குறித்து முழுமையான விசாரணை நடத்தி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கழகத் தலைவர் பொள்ளாச்சி நகர செயலாளர் வெள்ளிங்கிரியிடம் கூறினார். இதைத் தொடர்ந்து தோழர்கள் வெள்ளிங்கிரி, விசயராகவன் ஆகியோர் கொல்லப்பட்டி நிலவரம் குறித்து பல்லடம் தோழர்களிடம் முழுமையாக கேட்டறிந்தனர்.

17.10.2007 அன்று சார் ஆட்சியின் ஆணைப்படி மாவட்ட கல்வி அலுவலர் மற்றும் துணை வட்டாட்சியரின் நேரடி விசாரணை கொல்லபட்டி பள்ளியில் நடைபெறுவதாகவும் விசாரணையில் குற்றம் செய்த ஆசிரியர்களை காப்பாற்றுவதற்காக சுமார் 500 பேர் பள்ளி வளாகத்தில் திரட்டி வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் பல்லடத்திலிருந்து விசயகுமார் தொலைபேசி மூலம் தகவல் கொடுத்தார். உடனடியாக நங்கள் கொல்லபட்டி சென்றோம். அங்கு பள்ளி வளாகத்திற்குள் முன்னாள் மாணவர்கள், பொது மக்கள் என்ற பெயரில் சுமார் 500 பேர் திரட்டி வைக்கப்பட்டிருந்தார்கள். மாவட்ட கல்வி அலுவலர் விசாரணை செய்யும் அறையில் கொல்லபட்டி ஊராட்சி மன்றத் தலைவரின் கணவர் நல்வழி, அப்பள்ளியின் கல்விக்குழு உறுப்பினர் இளம்பரிதி உள்ளிட்ட உயர்சாதியினர் கும்பலாக நின்று கொண்டு ஆசிரியர்களுக்கு ஆதரவாக மனுக்களையும், வாக்குமூலங்களையும் பதிவு செய்து வந்தனர். ஆசிரியர்களின் தவறுகளை அதிகாரிகளிடம் தெரிவிப்பதற்காக வந்த தாழ்த்தப்பட்ட மாணவர்களின் பெற்றோர்களை பள்ளி வளாகத்திற்குள்ளேயே அனுமதிக்காமல் அங்கிருந்த சாதி வெறியர்கள் விரட்டி அடித்தனர். முன்னாள் மாணவர்கள் எனும் பெயரில் சாதி வெறி பிடித்த இளைஞர்களும், இளம் பெண்களும் மிகப் பெரிய கூட்டமாக ஓர் இடத்தில் திரட்டப்பட்டு அந்தக் கூட்டத்தின் நடுவில் பிரபு என்பவர் அமர்ந்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக சாதி வெறியை தூண்டும்படியான பேச்சுகளை பேசிக் கொண்டிருந்தார். இந்த நிகழ்வுகளை எல்லாம் புகைப்படம் எடுக்க முயன்றபொழுது நமது புகைப்படக் கலைஞர் கோ. வெங்கடேசனையும், விசயராகவனையும் சாதி வெறியர்கள் சூழ்ந்து கொண்டு புகைப்படத்தை அழிக்கும்படி வற்புறுத்தினார்கள். திடீரென்று இளம்பரிதியும் அவரது ஆட்களும் அங்கு வந்து நீங்கள் யார்? எங்கிருந்து வருகிறீர்கள்? என்று கேட்டனர். நாங்கள் 'புரட்சிப் பெரியார் முழக்கம்' பத்திரிகையிலிருந்து வருகிறோம் என்று விசயராகவன் கூறிய உடன், இளம்பரிதியும் கூடியிருந்த சாதி வெறியர்களும் சேர்ந்து வெங்கடேசன், விசயராகவன் இருவரையும் தாக்கத் தொடங்கினர். ஒரு கும்பல் புகைப்படக் கருவியை பறித்துக் கொண்டு ஓடியது. இந்த கலவர சூழல் ஏற்பட்ட உடன் வெளியில் நின்று கொண்டிருந்த ஆதித் தமிழர் பேரவை தோழர்கள் பள்ளி வளாகத்திற்குள் வந்து தாக்கப்பட்ட பெரியார் திராவிடர் கழகத் தோழர்களை காப்பாற்ற போராடினார்கள். புகைப்படக் கருவியை கோபால் மீட்டார். ஆனால் அதற்குள் புகைப்பட ஒளி நாடாவை எடுத்துக் கொண்டார்கள். அங்கு வந்த காவல்துறை கூட்டத்தை கட்டுப்படுத்தி தோழர்களை காப்பாற்றியது.

பெரியார் திராவிடர் கழக தோழர்களுடன் ஆதித் தமிழர் பேரவை, அம்பேத்கர் மக்கள் இயக்கம் உள்ளிட்ட தோழர்களும் சேர்ந்து அங்கேயே தரையில் அமர்ந்து கொண்டு, சாதி வெறியர்களுக்கு எதிராக சத்தம் போட தொடங்கினார்கள். இப்போது வந்து அடியுங்கள். நாங்கள் பத்துப்பேர் இருக்கிறோம். எங்களை அடித்தே கொல்லுங்கள். எங்களையே இப்படித் தாக்குகிற நீங்கள் தாழ்த்தப்பட்ட மக்களையும், மாணவர்களையும் எப்படிக் கொடுமைப்படுத்துவீர்கள் என்பதை உலகம் புரிந்து கொள்ளட்டும் என ஆவேசத்தோடு தோழர்கள் பேசியதும் சாதி வெறியர்கள் பின் வாங்கினார்கள். சற்று நேரத்தில் அங்கு வந்த நெகமம் காவல் துறை ஆய்வாளர் மனோகரன் ஒளி நாடாவை மீட்டுக் கொடுத்தார். நாங்கள் கொல்லபட்டியிலிருந்து வெளியேறினோம். இது குறித்து மறுநாள் காவல் நிலையத்திலும் புகார் தரப்பட்டுள்ளது.

12.10.2007 அன்று மாணவர்கள் நடத்திய ஆர்ப்பாட்டம் அதைத் தொடர்ந்து மாவட்ட கல்வி அலுவலகர் விசாரணையின் போது சாதி வெறியர்கள் நடத்திய வன்முறை மற்றும் கொல்லபட்டி பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளிடம் நாம் நடத்திய நேரடி விசாரணைகள், பெற்றோர்கள், பொதுமக்கள் நம்மிடம் தெரிவித்த கருத்துக்கள் அனைத்தையும் பார்க்கும்பொழுது கொல்லபட்டி பள்ளியின் கணித ஆசிரியர் பழனிசாமி, வரலாறு ஆசிரியர் தாமோதரசாமி ஆகியோரது சாதி - பாலியல் குற்றச் செயல்களுக்கு அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியர், பெற்றோர் ஆசிரியர் கழகம், கல்விக் குழு, உயர்சாதியினர், ஊராட்சி மன்றத் தலைவர் என அனைத்துத் தரப்பினருமே உடந்தையாக இருக்கிறார்கள் என்பதும் குற்றம் செய்த ஆசிரியர்களை காப்பாற்றுவதற்காக இந்தக் கூட்டம் எத்தகைய வன்செயலிலும் ஈடுபட தயங்காது என்பதும் வெளிப்படையாகத் தெரிகிறது.

22.10.2007 அன்று காலை 11 மணிக்கு தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் கோவை பன்னீர்செல்வம் தலைமையில் நகர செயலாளர் வெள்ளிங்கிரி, ஆதித் தமிழர் பேரவை மண்டல செயலாளர் தி.செ.கோபால் ஆகியோரது முன்னிலையில் பெரியார் திராவிடர் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கொல்லபட்டி பள்ளியில் சாதி - பாலியல் கொடுமைகள் செய்யும் ஆசிரியர்களை பணி நீக்கம் செய்து குற்றவியல் நடவடிக்கை மேற் கொள்ள வேண்டுமாய் சார் ஆட்சியரிடம் மனு ஒன்று அளிக்கப்பட்டது. கழகத் தோழர்களிடம் மாணவர்கள் அளித்த வாக்குமூலங்களின் ஒளிப்பதிவு குறுந்தகடு ஒன்றும் சார் ஆட்சியரிடம் வழங்கப்பட்டது. இத்தனைக்குப் பிறகும் இதுவரையிலும் மேற்படி ஆசிரியர்கள் மீது எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்பதுதான் துயரமான செய்தி. குறிப்பிட்ட ஆசிரியர்கள் மீது உறுதியான நடவடிக்கை மேற்கொள்ளும் வரை தொடர்ந்து போராடுவது என்பதில் மட்டும் நாம் உறுதியாக இருக்கிறோம். **- காசு. நாகராசன்**

## தூக்குத் தண்டனை ஒழிப்பு: உலகநாடுகள் தீவிரம்

தூக்குத் தண்டனையை முழுமையாக ஒழிப்பதற்கு காலக்கெடு ஒன்றை அய்.நா. பொதுச் சபை நிர்ணயித்து, அதற்கான தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்று 70 உலக நாடுகள் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இப்போது 90 நாடுகள் சட்டப் புத்தகத்திலிருந்தே தூக்குத் தண்டனையை ஒழித்து விட்டன. 40 நாடுகள் தூக்குத் தண்டனையை விதிப்பதில்லை என்ற கொள்கையை அமுல்படுத்தி வருகின்றன. ஈராக் அதிபர் சதாம் உசேன் - அமெரிக்க ஏகாதிபத்திய ஆட்சியால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து தூக்குத் தண்டனைக்கு எதிரான இயக்கம் தீவிரமாகியுள்ளது. அடுத்த மாதம் கூட இருக்கும் அய்.நா. பொதுச் சபையில் தூக்குத் தண்டனையை நிறுத்த கெடுவிதிக்கும் தீர்மானத்தைக் கொண்டு வரும் முயற்சியில் அய்ரோப்பிய ஒன்றிய நாடுகள் பல ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் தீவிரமாக செயல்பட்டு வருகின்றன.

2006 ஆம் ஆண்டில் தூக்குத் தண்டனை விதிப்பது கணிசமாகக் குறைந்துள்ளது. 2006 இல் 90 சதவீத தூக்குத் தண்டனையை 6 நாடுகளில் மட்டும் நிறைவேற்றப்பட்டன. அரிதிலும் அரிதான வழக்கில்மட்டும் தூக்குத் தண்டனை தரலாம் என்று இந்திய உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தாலும் தூக்குத் தண்டனையே முழுமையாக ஒழிக்கப்பட வேண்டும் என்பதே, உலகத்தின் வலிமையான குரலாக மாறியிருக்கிறது.

## சூலூரில் மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலம்

23.9.07 அன்று ஞாயிற்றுக் கிழமை கோவை சூலூரில் மூடநம்பிக்கை ஒழிப்பு ஊர்வலத்துடன் பொதுக்கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. ஊர்வலத்திற்கு மாநில களப்பணி ஒருங்கிணைப்பாளர் இல.அங்கக் குமார் தலைமை தாங்கினார். சூ.அ.முருகேசன் (முன்னாள் பேரூராட்சி துணைத் தலைவர்), சூ.அ.செகந்நாதன் (ஒன்றிய துணைச் செயலாளர், தி.மு.க.), சூ.பெ.கருணாநிதி (ஒன்றிய செயலாளர், ம.தி.மு.க.) ஆகியோர் முன்னிலையில் திருப்பூர் து.துரைசாமி (கோவை மாவட்டத் தலைவர் பெரியார் தி.க.) துவங்கி வைக்க சூலூரில் முக்கிய வீதிகளின் வழியாக ஊர்வலம் புறப்பட்டு பொதுக்கூட்ட மேடை வந்தடைந்தது. ஊர்வலத்தில் மகளிரணியினர் தீச்சட்டி எடுத்து, "அக்னி சட்டி இங்கே மாரியாத்தாள் எங்கே?" என்று முழக்கமிட்டனர். தோழர்கள் அலகு குத்தி கார் இழுத்து வந்தனர். ஆணி படுக்கையின் மேல் படுத்து வந்தனர். பின்னர் பொதுக் கூட்டம் சூலூர் சீரணி அரங்கத்தில் இருகூர் இ.ச.திருநாவுக்கரசு வரவேற்புரையுடன் சூ.இரா.பன்னீர்செல்வம் (ஒன்றிய செயலாளர் பெ.தி.க.) தலைமையில் தொடங்கியது. சூ.அ.செல்வராசு (நகரச் செயலாளர் தி.மு.க.), முன்னிலை வகித்தார்.

வழக்கறிஞர் கடலூர் வீ.அழகரசன், கழகப் பொதுச்செயலாளர் கோவை இராமகிருட்டிணன் ஆகியோர் சிறப்பாக உரையாற்றினர்.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/125/06-08 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/06-08 - RNI.NO.TNTAM/2002/7776

# தீண்டாமையை பிற்படுத்தப்பட்டோர் ஆதரிக்கலாமா?

## ஆலத்தூர் கூட்டத்தில் கழகத் தலைவர் கேள்வி

*22.9.2007 அன்று சனிக்கிழமை மாலை 7 மணியளவில் பட்டுக்கோட்டை ஆலத்தூரில் பேருந்து நிலையம் அருகில் பெரியாரின் 129 ஆவது பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு பாரி தலைமை வகித்தார்.*

*இக்கூட்டத்தில் தூத்துக்குடி பால். பிரபாகரன் உரையாற்றியபின் கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரை நிகழ்த்தினார். கழகத் தலைவர் உரையில் குறிப்பிட்டதாவது:*

செப்டம்பர் 15 இல் அறிஞர் அண்ணா பிறந்த நாள். ஆனால் இன்றைக்கு மக்கள் அதையெல்லாம் மறந்துவிட்டு விநாயகர் பிறந்த நாள் கொண்டாடுகின்றனர். மக்களுக்காக பாடுபட்ட தலைவரை மறந்து இன்றைய தமிழ்நாட்டின் போக்கு வேதனையளிக்கிறது. கடலுக்கடியில் இராமர் பாலம் இருப்பதாகவும், அதை இடிக்கக் கூடாது என்றும் மதவாத கூட்டம் நாட்டில் பிரச்சனையை கிளப்பி வருகின்றன. இராமர் பாலம் பற்றி அமெரிக்காவின் நாசா அறிவியல் ஆய்வு மையம் அது ராமர் பாலம் இல்லை என்றும் அது வெறும் மணல் திட்டுதான் என்றும் கூறிய பிறகும் பார்ப்பனக் கூட்டம் உச்சநீதிமன்றம் சென்று எந்தவித ஆதாரமும் இல்லாமல் நம்பிக்கையின் அடிப்படையில் இராமர் பாலம் இருப்பதாக சேது சமுத்திரத் திட்டத்திற்கு தடை வாங்கினார்கள். உச்சநீதிமன்றம் இந்த பிரச்சனையில் மட்டுமின்றி இட ஒதுக்கீடு பிரச்சனை என்று வருகிற போதும் தடைவிதிப்பதோடு ஓராண்டு காத்திருக்க முடியாதா என்று நம்மைப் பார்த்து கேட்கிறது. இராமர் பாலம் என்று வரும்பொழுது எந்த ஆதாரமும் இல்லாமல் நம்பிக்கை அடிப்படையில் தடை விதிப்பதும், இடஒதுக்கீடு வழக்கில் ஆதாரங்களைக் காட்டியும் இது 1931 இல் எடுத்த கணக்கு, இது இப்போதைக்கு சரி வராது என்று கூறி விடுகிறார்கள். இதற்குக் காரணம் நீதிமன்றங்களில் இடஒதுக்கீடு இல்லை என்பதுதான். ஆனால் இந்திய அரசியல் சட்டம் 312 ஆவது பிரிவின்படி மாவட்ட நீதிபதிகளையும் அதற்கு மேலான நீதிபதிகளையும் தேர்வு செய்ய தனியாக ஆணையம் அமைத்துத் தேர்ந்து எடுக்க வேண்டும் என்றுள்ளது. ஆனால் இதுவரையிலும் நடைமுறைப்படுத்தவில்லை.

பெரியார் திராவிடர் கழகம் தீண்டாமைக்கு எதிராக தேனீர் கடைகளில் இரட்டைக் குவளை உடைப்புப் போராட்டம் நடத்துகிறது. இந்தியா சுதந்திரம் அடைந்ததாக சொல்லி 60 ஆண்டுகள் கடந்தும் இன்னும் சாதி தீண்டாமை கொடுமை நிலவி வருகிறது. ஆகஸ்டு 15 ஆம் தேதியில் இந்தப் போராட்டம் நடப்பதாக இருந்தது. ஆனால் மக்கள் மத்தியில் தீவிரப் பிரச்சாரம் செய்த பிறகு போராட்டத்தில் ஈடுபட திட்டமிட்டோம். அதற்கு உகந்த நாளாக அக்.2 ஆம் நாளை தேர்வு செய்தோம். அன்று காந்தி பிறந்த நாள். இவர் மதம் இருக்க வேண்டும், கடவுள் இருக்க வேண்டும். சாதி இருக்க வேண்டும். ஆனால் தீண்டாமை மட்டும் இருக்கக் கூடாது என்றார். அதற்குத் தான் அய்யா, என்ன இது முட்டாள்தனம். வீட்டிற்குள் மலம் இருக்கலாம், ஆனால் நாற்றம் அடிக்கக்கூடாது என்றால் எப்படி சரியாக இருக்க முடியும் என்றார். அதனால் போலி தீண்டாமை ஒழிப்பு வீரரான காந்தியின் பிறந்த நாளில் இரட்டைக் குவளை உடைப்புப் போராட்டம் நடத்தத் திட்டமிட்டோம். 50 ஆண்டுகளுக்கு முன்னால் பிற்படுத்தப்பட்ட மக்களே இரயில் நிலையங்களில் இருந்த உணவகங்களில் பார்ப்பனரோடு சமமாக உட்கார்ந்து சாப்பிட முடியாத நிலை இருந்தது. ஆனால், பெரியார் இயக்கத்தின் போரட்டம் அதை மாற்றியிருக்கிறது. **எடுத்துக்காட்டாக ஒரு கிணற்றில் 15 நபர்கள் தத்தளிக்கின்றனர். அவர்களை காப்பாற்ற கயிறு விடுகிறோம். அதை பிடித்துக் கொண்டு 10 பேர் மேலே வருகிறோம். வந்த பிறகு அந்த கயிரை விட்டுவிடுவது எவ்வளவு பெரிய மோசடி.** அது போலத்தான் பிற்படுத்தப்பட்ட சமுதாயத் தினர் அடைந்த அந்த சமூக அந்தஸ்தை அவர்களுக்குக் கீழ் உள்ளவர்களுக்கு தர மறுப்பது என்ன நியாயம்? உங்களுக்கு மேலே ஒரு சாதி இருக்கக் கூடாது என்று நினைப்பது சரி தான். அதேபோல் உங்களுக்கு கீழே ஒரு சாதி இருக்க வேண்டும் என்று நினைப்பதும் தவறு. அதனால் தான் பெரியார் காண விரும்பிய சாதியற்ற சமத்துவ சமுதாயம் படைக்க பெரியார் திராவிடர் கழகம் இந்த இரட்டைக் குவளை உடைப்புப் போராட்டத்தை தொடங்கியுள்ளது. அதற்கு ஆதரவு தரக்கோரி உரையாற்றினார். கூட்டத்தில் பெரியார் பெருந்தொண்டர்களுக்கு சால்வை அணிவித்து சிறப்பு செய்தார்

## சென்னையில் கழகம் நவ.7 இல் நடத்திய இலங்கைத் தூதரக முற்றுகைப் போராட்டம்



## அறிவுச் செல்வி - ஜெயக்குமார் மணவிழா



ம.தி.மு.க. வெளியீட்டுச் செயலாளர் ஆ. வந்தியத்தேவன் - உமா மகேசுவரி ஆகியோரின் மகள் அறிவுச்செல்வி-ஜெயக்குமார் ஆகியோரின் வாழ்க்கைத் துணை ஏற்பு விழா 1.10.2007 அன்று கடலூர் முதுநகர் மங்கைமகாலில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தலைமையில் நடைபெற்றது. அறிஞர் பெருமக்கள் மணமக்களை வாழ்த்தினர். மணவிழா நினைவாக 'புரட்சிப் பெரியார் முழக்கம்' இதழ் வளர்ச்சிக்கு ரூ.200 வழங்கப்பட்டது. *(நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். - ஆர்)*

(முதல் பக்கத் தொடர்ச்சி)

அ்ய.நா. அமைதிப்படையில் ஹைட்டி நாட்டுக்குப் போன சிங்கள சிப்பாய்கள் பெண்களை வல்லுறவுக்குள்ளாக்கியுள்ளார்கள் என்று குற்றம்சாட்டி 104 பேர் திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

இதையெல்லாம் இந்திய அரசிலே இருப்பவர்கள் படிக்கிறார்களா? எம்.கே.நாராயணனுக்கு தெரியுமா? சிவசங்கர் மேனனுக்கு தெரியுமா? ஏ.கே.அந்தோணிக்கு இது தெரியுமா?

சிறிலங்கா இராணுவத் தளபதி சரத் பொன்சேகா என்கிற படை இலக்கு மீது தாக்குதல் நடத்திய போது இந்திய அமைச்சர் பிரணாய் முகர்ஜி கண்டிக்கத்தக்க செயல் என்கிறார். உலகத் தமிழினம் அதிர்ந்ததே செஞ்சோலைப் படுகொலைக்காக- தமிழக சட்டமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றினோமே- அப்போது ஒரு சொட்டுக் கண்ணீராவது வடித்ததா இந்திய அரசு?

சிங்களவர்களை இந்திய அரசாங்கத்திலே உள்ளவர்கள் தங்களது ஆரியக் கூட்டாளிகளாக கருதுவதுதான் உண்மை.

இதோ இந்தக் கூட்டத்திலும் கூட அண்ணா திமுகவினர் பலா் வந்துள்ளனர். ஜெயலலிதா மட்டும்தான் சிங்களத்தின் நகலாக உள்ளார்.

ராஜீவ் காந்திக்காக அழுகிறவர்களே!

ஈழத்தின் மீது ஏன் ராஜீவ் படையெடுப்பு நடத்தினார்? அது என்ன உன் அப்பன் நாடா? யாரைக் கேட்டுக் கொண்டு நீ இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை வகுத்தாய்?

அந்த அமைதிப் படை அங்குபோய் அமைதியை உண்டாக்கவில்லை. தமிழ் மக்களை அழித்தது. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் சிறிய சரத்துகளைத்தானே தம்பி திலீபன் நிறைவேற்ற வலியுறுத்தி உண்ணா நோன்பிருந்தான். பட்டினியை ஆயுதமாக்கி மெழுகுவர்த்தி மெழுகுபோல் உருகி 12 ஆம் நாள் மாண்டு போனான் திலீபன். சாகட்டும் என்று விட்டவர்கள்தான் இந்த காந்தி பிறந்த தேசம்.

பிரபாகரனை சுட்டுக்கொல்ல உத்தரவிட்டதாக தீட்சித் கூறும்போது, அது பிரதமர் ராஜீவின் உத்தரவு என்றார்.

அப்படி உண்மையைச் சொல்லியிருக்கிற ஹர்கிரத் சிங் மீது இப்போது ஏதும் வழக்குப் போட்டிருக்கிறீர்களா? இல்லையே...

தமிழக மக்களின் ஒருமித்த கோரிக்கையாக- சிங்களவனுக்கு ஆயுதமே வழங்காதே என்று நாம் வலியுறுத்த வேண்டும்.

சுப.தமிழ்ச்செல்வன் மறைவுக்கு இரங்கல் தெரிவித்த கலைஞரை நாம் பாராட்டுகிறோம்.

கலைஞர் அவர்களே! நீங்கள் கவிஞர்- முதல்வர்- கட்சியின் தலைவர்.

அந்த முறையிலே - கடந்த 87 ஆம் ஆண்டு இந்தியப் படையெடுப்பை எதிர்த்து நீங்கள் நடத்திய பரப்புரை இயக்கத்தை நாங்கள் மறக்கவில்லை-

பொய்ச் செய்திகளை வெளியிட்ட தொலைக்காட்சிப் பெட்டிகளை மேடைகளில் உடைத்ததை நாங்கள் மறக்கவில்லை.

பொடாவை எதிர்க்க முதல் கையெழுத்துப் போட்ட முதல்வர் கலைஞர் அவர்களே! இதோ சிங்களவனுக்காக ஆயுதம் கொடுக்காதே என்று நாங்கள் தொடங்கும் இயக்கத்திற்கும் நீங்களே முதல் கையெழுத்துப் போட வேண்டும் என்றார் தியாகு.

### கழகத்துக்கு பாராட்டு!

*பெரிய அரசியல் கட்சிகள் எல்லாம் போர்க் குரல் கொடுக்காத காலத்திலிருந்தே, பாலக்காடு கோட்டத்திலிருந்து கோவையைப் பிரிப்பதற்காகப் பல நூதன கிளர்ச்சிகள் செய்து போராடியதோடு, இப்போது சேலம் கோட்டம் அமைந்ததற்கும் விடாப்பிடியாகப் போர்க்குரல் கொடுத்து வெற்றிக் கண்ட 'பெரியார் திராவிடர் கழக'த்துக்கு இந்த வாரப் பூச்செண்டு!*

**– 'ஆனந்த விகடன்' (நவம்.14) ஏட்டில் ஞாநி**


"புரட்சிப் பெரியார் முழக்கம்"

**ஆண்டுக்கட்டணம்**

**ரூ.150/-**

தொடர்புக்கு:
ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41.
✆ 2451 2857

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 15th November 2007

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.